www.janasakthi.in janasakthieditor@gmail.com janasakthi Tholaikatchi CPI Tamilnadu



நிறுவனர்: ப. ஜீவானந்தம்

புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வார இதழ்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தமிழ்நாடு 26 மாநில மாநாடு 2025 ஆகஸ்ட் 15 16 17 18 சேலம்

மலர் 88 இதழ் 13 | 2025 ஜூன் 29 - ஜூலை 05 | 16 பக்கங்கள் | விலை: ரூ.15




# பாலஸ்தீன இனப்படுகொலையை நிறுத்து!

## இஸ்ரேலைக் கண்டித்து இடதுசாரிகள் ஆர்ப்பாட்டம்

**பாலஸ்தீன மக்கள் மீது குண்டுகளை வீசியும், ஐ.நா. அனுப்பும் உணவைக்கூட விநியோகிக்க முடியாமல் தடுத்து, பெண்கள், குழந்தைகள் உட்பட பல லட்சம் பேரை, பட்டினியில் தள்ளியும் இஸ்ரேல் கொடூர இனப்படுகொலையை நடத்தி வருகிறது.**

இதனைக் கண்டித்தும், இஸ்ரேல் ஆதரவு நிலைபாட்டை ஒன்றிய மோடி அரசு கைவிட வலியுறுத்தியும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (எம்.எல்) லிபரேசன் கட்சிகளின் சார்பில் ஜுன் 24 ஆம் தேதி சென்னை சைதாப்பேட்டையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் கே.பாலகிருஷ்ணன், சிபிஐ (எம்.எல்) லிபரேசன் மாநிலச் செயலாளர் பழ.ஆசைத்தம்பி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில நிர்வாகக்குழு உறுப்பினர் ஜி.ஆர்.ரவீந்திரநாத், கண்ணகி, ஏ.ஆர்.சாந்தி, மாவட்டச் செயலாளர்கள் எஸ்.கே.சிவா, வெங்கடேஷ் வேம்புலி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர்கள் ஆர்.வேல்முருகன், எம்.ராமகிருஷ்ணன், ஜி.செல்வா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். ■

# ஜூலை 9 பொது வேலைநிறுத்தத்தை வெற்றிபெறச் செய்வோம்!

## நாட்டு மக்களுக்கு இடதுசாரிக்கட்சிகள் அறைகூவல்

**ஜூலை 9ஆம் தேதி நடைபெறும் அகில இந்திய பொது வேலைநிறுத்தத்தை மகத்தான வெற்றி பெறச் செய்ய வேண்டும் என நாட்டு மக்களுக்கு இடதுசாரிக்கட்சிகள் அறைகூவல் விடுத்துள்ளன.**

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் டி.ராஜா, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் எம்.ஏ.பேபி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (மா.லெ) லிபரேசன் பொதுச்செயலாளர் தீபங்கர் பட்டாச்சார்யா, புரட்சிகர சோசலிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் மனோஜ் பட்டாச்சார்யா, அகில இந்திய பார்வர்ட் பிளாக் பொதுச்செயலாளர் தேவராஜன் ஆகியோர் கூட்டாக அறிக்கை வெளியிட்டுள்ளனர். அதில்,

"மத்தியத் தொழிற்சங்கங்கள் மற்றும் அகில இந்திய துறை வாரியான சங்கங்கள், கூட்டமைப்புகள் இணைந்து அறிவித்துள்ள ஜூலை 9 அகில இந்திய பொது வேலைநிறுத்தத்திற்கு எங்களுடைய முழுமையான ஆதரவை உரித்தாக்கிக் கொள்கிறோம். இந்தப் பொது வேலைநிறுத்தம், முதன்மையாக தொழிலாளர்களின் கூட்டுபேர உரிமை மற்றும் அணிதிரளும் உரிமை உட்பட அடிப்படை ஜனநாயக உரிமைகளை நசுக்கக்கூடிய விதத்திலும், கார்ப்பரேட் நிறுவனங்களின் விருப்பத்தை நிறைவேற்றும் வகையிலும் புதிய தொழிலாளர் சட்டத் தொகுப்புகளை (Labour Codes) நடைமுறைப்படுத்துவதற்கு எதிராக அறிவிக்கப்பட்டுள்ளது.

மூன்றாவது முறையாக ஆட்சியில் அமர்ந்துள்ள பாஜக தலைமையிலான ஒன்றிய அரசாங்கம் இந்தத் தொழிலாளர் சட்டத் தொகுப்புகளைப் பயன்படுத்தி நவீன தாராளமயத்தை மூர்க்கத்தனமான முறையில் செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. பாதுகாப்புத்துறை மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை போன்ற கேந்திரமான பொதுத்துறை நிறுவனங்களைக்கூட தனியாரிடம் தாரைவார்க்க நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. தொழிலாளர் விரோதக் கொள்கைகளுக்கு எதிரான அனைத்து எதிர்ப்புகளையும் நசுக்கவும் முயன்று வருகிறது.

இந்தப் பொது வேலைநிறுத்தத்திற்கு சம்யுக்த கிசான் மோர்ச்சா மற்றும் விவசாயத் தொழிலாளர் சங்கங்களும் தங்கள் ஆதரவை அறிவித்துள்ளன. வேலைநிறுத்தத்திற்கு ஆதரவாக விவசாயிகள், பொதுமக்களை அணிதிரட்டவும் அறைகூவல் விடுத்துள்ளன.

தொழிலாளர்களிடம் வெறுப்பை விதைத்து அவர்களைப் பிரித்தாள முயற்சிக்கும் அரசின் அனைத்து நடவடிக்கைகளையும் தகர்த்தெறிந்து தொழிலாளர் ஒற்றுமையை உருக்குப் போன்று உருவாக்கிட பொது வேலைநிறுத்தம் உதவிடும்.

இந்த வேலைநிறுத்தத்திற்கு பொதுமக்கள் தங்கள் ஆதரவை அளிப்பதுடன், பெரிய அளவில் அணிதிரண்டு வேலை நிறுத்தத்தை மகத்தான வெற்றிபெறச் செய்ய வேண்டும் என இடதுசாரிக் கட்சிகள் சார்பில் அறைகூவி அழைக்கிறோம்" என்று அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர். ■

## அறிவிக்கப்படாத அவசரநிலை: காங்கிரஸ் குற்றச்சாட்டு

ஜனநாயகத்தின் மீது கடந்த 11 ஆண்டுகளாக ஐந்து அடுக்குத் தாக்குதல் நடந்துவருவதாக காங்கிரஸ் குற்றம்சாட்டியுள்ளது. 1. அரசியலமைப்பின் மீதான தாக்குதல் 2. நாடாளுமன்றத்தை பலவீனப்படுத்துதல் 3. தேர்தல் ஆணையம், கணக்கு தணிக்கைத்துறை (சிஏஜி) போன்ற அரசியலமைப்புச் சட்ட அமைப்புகளின் தன்னாட்சியை பறிக்கப்படுதல் 4. ஒன்றிய மாநில உறவுகளை அழித்தல் 5. நீதித்துறைக்கு சேதம் விளைவித்தல் என்ற ஐந்து அடுக்குத் தாக்குதல் நடந்துவருகிறது. இவற்றுடன், வரி பயங்கரவாதம், வணிக மற்றும் நிறுவனங்களுக்கு அச்சுறுத்தல், அரசுக்கு எதிரான ஊடகங்கள் மீதான கட்டுப்பாடு, செய்தி நிறுவனங்களுக்கு மிரட்டல். எதிர்க்கட்சிகளின் தலைவர்களைத் துன்புறுத்த அமலாக்கத்துறை, சிபிஐ, வருமான வரித்துறை போன்ற நிறுவனங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன என்று காங்கிரஸ் குற்றம்சாட்டியுள்ளது.

## உத்தரப்பிரதேச அரசுக்கு உச்சநீதிமன்றம் அபராதம்

உத்தரப் பிரதேச மாநிலம் காசியாபாத் சிறையில் உள்ள குற்றவாளி ஒருவருக்கு கடந்த மாதம் விசாரணை நீதிமன்றம் பிணை வழங்கியது. ஆனால், வழக்கின் துணைப்பிரிவை காரணம் காட்டி கைதியை சிறை அதிகாரிகள் விடுவிக்கவில்லை. இதனை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தனர். அந்த வழக்கை விசாரித்த நீதிபதி விஸ்வநாதன் அமர்வு, நீதிமன்ற உத்தரவுப்படி கைதியை விடுவிக்க மறுத்ததற்கு கடும் கண்டனம் தெரிவித்தனர். இதேபோன்று எத்தனை பேர் இன்னும் சிறையில் உள்ளனர் என்றும் கேள்வி எழுப்பினர். பின்னர், உத்தரப்பிரதேச சிறைத்துறை கண்காணிப்பாளருக்கு 5 லட்சம் ரூபாய் அபராதம் விதித்து, அதனை பாதிக்கப்பட்ட நபருக்கு வழங்க வேண்டும் என உத்தரவிட்டனர்.

## 4 மாநில இடைத்தேர்தல்: ஒரு தொகுதியில் வென்ற பாஜக

கேரளா உட்பட 4 மாநிலங்களில் 5 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கு நடைபெற்ற இடைத்தேர்தலில் பாஜக ஒரு தொகுதியில் மட்டும் வெற்றி பெற்றுள்ளது.

குஜராத், கேரளா, பஞ்சாப், மேற்கு வங்கம் ஆகிய 4 மாநிலங்களில் 5 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கு ஜூன் 19 அன்று இடைத்தேர்தல் நடைபெற்றது. இதில், பதிவான வாக்குகள் ஜூன் 23 அன்று எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட்டன. அதில், குஜராத் மாநிலத்தில் 2 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கு நடைபெற்ற இடைத்தேர்தலில் பாஜக மற்றும் ஆம் ஆத்மி கட்சிகள் தலா ஒரு தொகுதியில் வெற்றி பெற்றுள்ளன. கேரளாவில் காங்கிரஸ் கட்சியும், பஞ்சாபில் ஆம் ஆத்மி கட்சியும், மேற்கு வங்கத்தில் திரிணமூல் காங்கிரஸ் கட்சியும் வெற்றி பெற்றுள்ளன.

கட்சிக் கடிதம்

# செங்கடலில் சங்கமிக்க சேலம் வாரீர்!



**மாநில மாநாட்டை நோக்கி... 2**

போர்க்குணமிக்க தோழர்களே!

**சேலம் மாநகரில் சங்கமிக்க நாம் ஆயத்தமாகி வரும் நிலையில் உலகின் பல நாடுகளில் அப்பாவி மக்களின் அழுகுரல் நாளுக்கு நாள் மேலும் மேலும் அதிகரித்து வருகின்றது.**

உலகில் வாழும் எந்நாட்டவரும் விரும்புவது போரையல்ல, மாறாகப் போரற்ற உலகம் வேண்டும் என்றே ஒவ்வொருவரும் போராடி வருகின்றனர்.

அமெரிக்க ஏகாதிபத்தியம் ஒவ்வொரு நாட்டிலும் தன் மூக்கைத் நுழைத்து அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் தன் அயோக்கியத்தனத்தை ஈவு, இரக்கமற்ற முறையில் செய்து கொண்டே இருக்கும்.

எத்தனை ஆயிரம் மக்கள் மாண்டு மடிந்தாலும் ஏகாதிபத்தியத்திற்குக் கவலை இல்லை.

நாடுகளுக்கிடையே நயவஞ்சகமான முறையில் தன் மூக்கை நுழைத்து, போரை உருவாக்கிக் குண்டு மழை பொழியச் செய்யும். பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் என அநியாயமாகக் கொல்லப்படுவதும் பல்லாயிரக்கணக்கான மக்கள் படுகாயமடைந்து துயரப்படுவதையும், அம்மக்களின் அழுகுரலைக் கேட்டு ஆணவச் சிரிப்பு, சிரிப்பதுதான் ஏகாதிபத்தியம்.

பாலஸ்தீன மக்களுக்குரிய நாட்டை அபகரித்த இஸ்ரேல், ஒண்ட வந்த பிடாரி ஊர்ப்பிடாரியை விரட்டியது என்ற பழமொழிக்கேற்ப, பாலஸ்தீன மக்களை நாடற்ற மக்களாக்கியது மட்டுமல்ல, அம்மக்களின் மீது இஸ்ரேல் குண்டு மழை பொழிந்து நாள்தோறும் கொன்று குவிப்பது மட்டுமல்ல, மக்களுக்கு உணவுகூடக் கிடைக்கச் செய்யாமல் பட்டினி போட்டு அணுஅணுவாகச் சாகடிக்கும் செயல் கண்டு உலகமே கண்ணீர் வடிக்கின்றது.

இவைமட்டுமன்றி, இஸ்ரேல் திடீரென்று இரான் மீது ஜூன் 13ஆம் நாள் பெரும் தாக்குதலை நடத்தியது. அத்தாக்குதலை உலகம் கண்டிக்கின்றது. இத்தாக்குதலுக்கும் தனக்கும் சம்பந்தமில்லை, இது எனக்குத் தெரியாது என்று ‘அப்பன் குதிருக்குள் இல்லை’ என்று கூறியது போன்று அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஏஜென்ட் ட்ரம்ப் கூறினார்.

ஆனால் அடுத்த சில நாட்களில் தங்கள் நாட்டின் அபாயகரமான போர் விமானத்தை அனுப்பி இரான் மீது கொடிய தாக்குதலை நடத்தியுள்ளனர்.

சென்ற வார ஜனசக்தியின் தலையங்கம் போர் குறித்து விரிவாகவே விவரித்துள்ளது.

அமெரிக்காவின் அடாவடித்தனத்தை உலகின் பல்வேறு பொறுப்பு வாய்ந்த நாடுகள் தங்களின் கடுமையான கண்டனத்தைப் பதிவு செய்துள்ளன.

அமெரிக்கக் கம்யூனிஸ்ட் கட்சி, இஸ்ரேல் கம்யூனிஸ்ட் கட்சி ஆகியன தனது கடும் கண்டனத்தைத் தெரிவித்துள்ளன.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உட்பட இடதுசாரி கட்சிகள் அனைத்துமே தன் கண்டனத்தைத் தெரிவித்தது மட்டுமின்றி, கடந்த 17ஆம் தேதி முதல் 25 ஆம் தேதி வரை நாடு முழுவதும் கண்டன ஆர்ப்பாட்டங்களையும் நடத்தியுள்ளன.

இராக்கில் அபாயகரமான ஆயுதங்களை சதாம் உசேன் குவித்து வைத்துள்ளார் என அமெரிக்கா குற்றம்சாட்டியது.

இராக்கைச் சோதனை போட வேண்டும் என நிர்பந்தம் செய்தது. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நிர்பந்தங்களுக்கு அடிபணிந்த ஐக்கிய நாட்டு சபை நிபுணர்களை அனுப்பி இராக்கைச் சல்லடை போட்டுச் சலித்துச் சோதனை செய்துவிட்டு, அந்நாட்டில் அபாயகரமான ஆயுதங்கள் எதுவுமில்லை என அறிக்கை அறிவித்தது.

ஆனால் அமெரிக்கா இல்லை இல்லை, அங்கே ஆயுதம் இருக்கின்றது. ஐக்கிய நாடுகள் சபை சதாம் உசேனுக்கு ஆதரவாக உள்ளது என்று குற்றம்சாட்டியது.

ஆட்டுக்குட்டியின் மீது ஓநாய் குற்றம் சுமத்தித் தானே தீர்ப்பும் வழங்கி ஆட்டுக்குட்டியை ஓநாய் அடித்துக் கொன்று தின்றது என்கிற குட்டிக் கதையைப் போன்று அமெரிக்கா சதாம் உசேன் மீது வீண்பழி சுமத்தித் தூக்கிலிட்டுக் கொன்ற கொடூரத்தை உலக மக்கள் மறந்திருக்க மாட்டார்கள்.

இன்று அதுபோலவே இரான் நாட்டு மதத் தலைவர் அலி காமெனியைக் கொல்வோம் என்று பகிரங்கமாக இஸ்ரேல் அறிவிக்கின்றது.

நீ இருக்கும் இடம் எனக்குத் தெரியும் ஓடி ஒளியாதே சரண்டராகு என அமெரிக்கா அச்சுறுத்துகின்றது.

ஐக்கிய நாட்டு சபை உட்பட உலக நாடுகள் அனைத்தும் இது மூன்றாம் உலகப் போராக மாறி விடுமோ என அஞ்சுகின்றன.



எல்லா நாடுகளும் போர் ஆயுதங்களைக் குவிக்கும், தங்களின் நாட்டுப் பாதுகாப்பு கருதி நாங்கள் குவித்துக் கொள்வோம், இது எங்களின் தற்காப்பிற்கு என நியாயப்படுத்துகின்றன. இவர்களின் நியாயம் இரானுக்குப் பொருந்தாது என்று ஒருதலைப்பட்சமாகக் கூறுகின்றார்கள்.

இத்தனை அநியாயங்களும் உலகின் கண்முன்னே நடந்து கொண்டிருக்கின்றன. ஆனால் இந்தியா என்ற நம் பெருநாட்டின் பிரதமர் கண்ணை மூடிக் கொள்கிறார்.

நேரு காலம் தொட்டு பாலஸ்தீன மக்களுக்கு ஆதரவளித்தது மட்டுமல்ல, பாலஸ்தீனத்தை அன்றைய பிரதமர் நேரு அங்கீகரித்தார். அம்மக்களுக்கு ஆதரவாகக் குரல் எழுப்பினார். ஆனால் இன்றைய ஆர்எஸ்எஸ் காரரான மோடி அக்கிரமக்காரனான இஸ்ரேலுக்கு ஆதரவுக் கரம் நீட்டுகின்றார். அமெரிக்கச் சார்புநிலை எடுக்கின்றார் என்பதல்ல; அமெரிக்காவின் பக்கம் முழுமையாகச் சாய்ந்து விட்டார்.

இத்தகையச் சூழலில்தான் நாம் சேலத்தில் கூடுகின்றோம். உலகில் எங்கோ ஏதோ நடக்கிறது, இதற்கும் சேலம் மாநாட்டிற்கும் என்ன சம்பந்தம் எனக் கேட்கலாம்!

தோழர்களே உலகம் கண்ட இரண்டாம் உலகப்போரை எவரும் எளிதில் மறந்திட இயலாது. கொடியவர்கள் ஹிட்லரும், முசோலினியும் மேற்கொண்ட பாசிசப் போருக்கு முடிவு கட்டி, உலகிற்கு ஜனநாயகத்தை மீட்டுத் தந்த பெருமை நம் கரங்களில் உயர்ந்து நிற்கும் செங்கொடி தாங்கிய சோவியத் செஞ்சேனையின் சாதனையாகும்.

இரண்டு கோடி மக்களைப் பலிகொடுத்து பாசிசம் தோற்கடிக்கப்பட்டது.

1939 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் முதல் நாள் தொடங்கிய போர் 1945 மே 8ம் நாள் வரை நீடித்து பாசிசம் முழுமையாகத் தோற்கடிக்கப்பட்டு, மே 9 ஆம் நாள் ஜெர்மனி நாடாளுமன்றத்தில் சோர்ந்து தொங்கிக்கொண்டிருந்த, மரணக் குழியைத் தேடிக் கொண்டிருந்த ஹிட்லரின் ஸ்வஸ்திக் கொடியை இறக்கிவிட்டு, அக்கம்பத்தில் அரிவாள் சுத்தியல் பொறிக்கப்பட்ட செங்கொடி பட்டொளி வீசிப் பறந்தது.

அத்தகைய செங்கொடிப் புதல்வர்கள் வழித்தோன்றல்கள் கூடும் வேளையில் உலகில் நடக்கும் அநியாயங்களை அலட்சியப்படுத்திவிட்டு நாம் உண்டு, நமது வேலை உண்டு என்று ஒதுங்கி நிற்கலாகாது.

இரண்டாம் உலகப்போரின் போது அதனைத் தடுக்கத் தவறியது அல்லது கண்டும் காணாமல் இருந்தது குறித்து வெந்து வேதனைப்பட்டு, தனது மனச்சாட்சியின் குரலாக ஜெர்மானியப் பாதிரியார் கவிஞர் மார்ட்டின் நீயே மெல்லர் கூறுகின்றார்.

அவர்கள் கம்யூனிஸ்டுகளைக் கொன்ற போது நான் அதுகுறித்துக் கவலைப்படவில்லை. ஏனெனில் நாம் கம்யூனிஸ்ட் இல்லை.

தொழிற்சங்கத் தலைவர்களைக் கொன்று குவித்தபோது, நான் அதுகுறித்து கவலைப்படவில்லை. ஏனெனில் நான் தொழிற்சங்கவாதி அல்ல.

யூதர்களைக் கொன்ற போது நான் அதுகுறித்து கவலைப்படவில்லை. ஏனெனில் நான் யூதர் அல்ல.

இன்று அவர்கள் என்னைக் கொல்ல வந்த போது ஏன் எனக் கேட்க எவருமில்லை.

என்ற கவிஞரின் கருத்து எவ்வளவு ஆழமுள்ளது, அர்த்தம் மிக்கது என்பது குறித்து நாம் ஒருமுறை அல்ல, ஓராயிரம் முறை ஆழ்ந்து யோசிக்க வேண்டும்.

அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு உலகத்தின் சட்டாம் பிள்ளை எனத் தன்னைத் தானே நியமனம் செய்து கொண்டுள்ளது.

உலகம் தன் குடைக்குள் அடங்கி ஒடுங்கி இருக்க வேண்டும். தன்னைவிட, தன் இனத்தை விட உலகில் வேறு எவரும் அறிவாளிகள் இல்லை எனக் கூறி இரண்டாம் உலகப்போருக்கு வித்திட்டான் கொடியவன் குற்றவாளி ஹிட்லர்.

இன்று அதேபோன்று உலகம் தன் கட்டுப்பாட்டில் அடங்கி ஒடுங்கி இருக்க வேண்டுமெனக் கொக்கரித்து மூன்றாம் உலகப் போருக்கு வித்திட்டு வருகின்றது அமெரிக்க ஏகாதிபத்தியம்.

இத்தகைய நெருக்கடிமிக்க நேரத்தில் செங்கொடியின் தவப்புதல்வர்கள் சேலம் மாநகரில் சங்கமிக்க இருக்கின்றார்கள். ஆகஸ்ட் 15 இல் தொடங்குகின்றது மாநில 26வது மாநாடு.

நாடு விடுதலை பெற்ற நன்னாளாம் ஆகஸ்ட் 15 காலை மாநாட்டு முகப்பில் தேசியக் கொடி ஏற்றப்பட உள்ளது.

சுதந்திரத்தைப் பாதுகாப்போம் சோசலிசம் சமைப்போம் என்ற முழக்கத்தோடு தேசியக்கொடி ஏற்றப்பட உள்ளது. அதனைத் தொடர்ந்து அனைத்து மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கும் அரிவாள், சுத்தியல் பொறிக்கப்பட்ட செங்கொடி ஏற்றப்பட உள்ளது. தொடர்ந்து நான்கு நாட்கள் நடைபெறும் மாநாட்டில் மாவட்ட மாநாடுகள் தேர்வு செய்த தோழர்கள் அறிக்கைகள் மீது விவாதங்கள் மேற்கொண்டு அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானங்கள் நிறைவேற்றப்படும்.

மாநாட்டின் முதல் மற்றும் இரண்டாம் நாள் மாலை சிறப்பு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. அவைகுறித்த

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்



மே.து.ரா.

**ஒன்றிய பாரதிய சனதாக் கட்சி அரசு வெற்று வெறுப்பு முழக்கங்களிலேயே வெற்றிகளைக் குவித்துவிடலாம் எனக் கனவு காண்கிறது.**

# மாற்று உருவாகும் வரை அறிவு மொழி ஆங்கிலத்தை அகற்ற இயலாது




அண்மையில் நூல் வெளியீட்டு விழாவொன்றில் கலந்துகொண்ட ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்சா, ‘இந்தியாவில் ஆங்கிலம் பேசுவோர் விரைவில் வெட்கப்படுவார்கள், தங்களை இழிவாக உணர்வார்கள்’ என்றும், ‘அத்தகைய சமூகம் உருவாகும் காலம் வெகு தொலைவில் இல்லை’ என்றும் பேசியுள்ளார்.

‘நமது நாட்டின் மொழிகள் நம்முடைய பண்பாட்டின் முத்துக்கள் என்று நான் நம்புகிறேன்; நமது மொழிகள் இல்லையென்றால் நாம் உண்மையான இந்தியனாக இருக்க மாட்டோம்; நமது நாட்டையும் நமது பண்பாட்டையும் நமது வரலாற்றையும் நமது சமயத்தையும் புரிந்துகொள்ள எந்த அந்நிய மொழியும் போதுமானதாக அமையாது’ என்றும் அமித்சா கூறியுள்ளார்.

## வாக்குகளைப் பெற வெற்றுப் பேச்சு

சமக்கிருதத்தை முன்னிறுத்தி, சனாதனம் மட்டுமே அனைத்துக்கும் மேலானது, இந்திய ஒன்றியத்தில் உள்ள இனங்களின் வாழ்முறைக்கு அடிப்படையாக இருப்பது என்ற ஒற்றைப் பண்பாட்டினை முன்னிறுத்தும் பா.ச.க.வின் அமித்சா இப்படியெல்லாம் பேசத் தொடங்கியிருப்பது வியப்புக்குரியதல்ல.

சில நாள்களுக்கு முன் மதுரைக்கு வந்திருந்த அமித்சா, தான் தமிழில் பேச முடியாமைக்கு வருந்துவதாகக் கூறியதை எவரும் மறக்கவில்லை.

இந்திய ஒன்றியத்தின் தலைமை அமைச்சர் மோடியும் தமிழ்நாட்டுக்கு வரும்பொழுதெல்லாம், தமிழின் பெருமை பேசுவதும், தமிழ் உலகின் தொன்மையான மொழி என்று பெருமைப்படுத்துவதும், சில குறள்களை எடுத்துக்காட்டுவதும் வழக்கமாக இருந்து வருவதுதான்.

இந்திய மொழிகளுக்கெல்லாம் தாய் சமக்கிருதம் என்ற கருத்தைத் தொடர்ந்து திணித்தும் பரப்பியும் வரும் அமித்சா, இந்திய மொழிகள் அனைத்தையும் நமது பண்பாட்டின் முத்துக்கள் என்று இப்போது ஏற்றிப் போற்றத் தொடங்கியிருக்கிறார்.

இவை யாவும் உண்மையில் ஏற்பட்ட மனமாற்றமா அல்லது ஊரை ஏமாற்றுகிற மாய வேடமா என்பது புரிந்துகொள்ள முடியாத புதிரில்லை. தமிழக மக்களின் வாக்குகளைக் கவர எதை வேண்டுமானாலும் அவர்கள் பேசுவார்கள்.

## பேசாத மொழி சக்கிருதத்துக்கு 2500 கோடி

ஆனால், ஒன்றிய பா.ச.க. அரசின் செயல்பாடுகளே இவற்றுக்கெல்லாம் விளக்கங்களைத் தந்துவிடுகின்றன.

2014 முதல் 2025 வரையிலான 10 ஆண்டுகளில், அதாவது பா.ச.க. ஒன்றிய அரசுப் பொறுப்பேற்ற பின்னர் 24,821 எண்ணிக்கையினர் மட்டுமே பேசுவதாகச் சொல்லப்படுகின்ற சமக்கிருத மொழிக்கு ரூ.2532.59 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால், ஏழு கோடி மக்கள் பேசுகின்ற தமிழுக்கு 113.48 கோடி மட்டுமே தரப்பட்டுள்ளது. இந்திய மொழிகளுக்காக ஒதுக்கப்பட்ட கூட்டளவில் 61% சமக்கிருத மொழிக்கு மட்டுமே தாரை வார்க்கப்பட்டுள்ளது. மலையாளம், தெலுங்கு, கன்னடம், ஒரியா ஆகிய மொழிகளுக்கு 34 கோடி மட்டும்தான். தமிழ் உள்ளிட்ட அய்ந்து மொழிகளுக்கும் ஒதுக்கப்பட்ட கூட்டளவினைவிட 17 பங்கு மிகுதியாகச் சமக்கிருதத்துக்குக் கொட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்திய ஒன்றியத்தின் மொழிகள் நம்முடைய பண்பாட்டின் முத்துக்களாக விளங்குகின்றன என்றால், அனைத்து மொழிகளையும் புறக்கணித்துவிட்டு, இந்த சமக்கிருதத்துக்கு மட்டும் பெருந்தொகை தருவது ஏன் என்பதைப் பா.ச.க.வினர் விளக்கவில்லை.

மொழி வளர்ச்சி மட்டுமல்லாது, தமிழ்ப் பண்பாட்டையும் தொன்மையையும் மறுக்கும் வகையில் கீழடி அகழ்வு முடிவுகளை மூடி மறைக்க முயல்வதும் மேற்கொண்டு அகழ்வுகள் மேற்கொள்ள மறுப்பதும் தொடர்ந்து வருகிறது. அத்துடன், தமிழ் மக்களின் வளர்ச்சித் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகையைக்கூட ஒன்றிய அரசு தர மறுத்து வருகிறது.

இந்திய மொழிகள் அனைத்தும் பல்வேறு இன மக்களின் பண்பாடுகளை வெளிப்படுத்தும் வகையில் சிறப்புடன் விளங்குகின்றன என்பதில் அய்யம் ஏதுமில்லை. ஆனால், இவற்றையெல்லாம் புறக்கணித்தும், இவற்றின் வளர்ச்சிக்குத் தடை ஏற்படுத்தியும்தான் சமக்கிருதம் முதன்மைப்படுத்தப்படுகிறது. இந்த வேறுபட்ட பண்பாடுகளை மறைத்துத்தான் சமக்கிருதம் முன்னிறுத்தப்படுகிறது.

## ஆங்கிலத்தின் இப்போதைய பயன்

இந்திய ஒன்றியத்தில் இடம்பெற்றுள்ள பல்வேறு இனங்களின் தன்மைகளையும் பெருமைகளையும் சிறப்புகளையும் ஒருவருக்கொருவர் அறிந்துகொள்ள ஆங்கிலம்தான் பேருதவியாகப் பயன்பட்டது என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

அந்த ஆங்கிலம் வேற்று நாட்டின் மொழியாக இருக்கலாம். மக்களைப் பல நூற்றாண்டுகள் அடிமைப்படுத்திய ஆட்சியாளரின் மொழியாக இருக்கலாம். உலகத்தின் தொடர்புகளுக்கு ஆங்கிலம் வேண்டியிருக்கிறது என்றாலும், அதற்கான மாற்றினை ஏற்படுத்திக்கொள்வதும் எளிதானதுதான்.

ஆனால், அறிவு மொழியாகத் தற்போது ஆங்கிலம் பயன்பட்டுக்கொண்டிருக்கிறது என்ற உண்மையைப் புரிந்துகொள்ள வேண்டும்.

இந்திய ஒன்றியத்தின் பல்வேறு இனங்களைப் பொருத்த வரை, தற்போதைக்கு ஆங்கிலம்தான் அறிவு மொழியாக நீடித்து வருகிறது. அறிவியல், தொழில்நுட்பம், மருத்துவம், வேளாண்மை உள்ளிட்ட வெவ்வேறு துறைகளின் அறிவு நுட்பங்கள் அனைத்தையும் அள்ளித் தருகின்ற இடத்தில் ஆங்கிலம் இப்போதும் தொடர்கிறது.

அன்றாடம் நாம் அறியாமலேயே அறிவியல் நுட்பத்தின் உயர் பயன்களைத் துய்த்து வரும் நிலை ஏற்பட்டுவிட்டது. மருத்துவம், போக்குவரவு, தொலைத்தொடர்பு, வேளாண்மை, ஊடகம், விண்கலன்கள், படைக் கருவிகள், எல்லைக் காப்பு என எத்துறையை எடுத்தாலும் அவை அனைத்திலும் உயர் அறிவியல் நுட்பங்கள் ஊடுருவி நிற்கின்றன. பணி வாய்ப்புகள் பலவும் உயர் நுட்ப அறிவின் தெரிதலையொட்டி அமைந்து கிடக்கின்றன.

இவற்றையெல்லாம் ஆங்கிலத்தின் வழியாகவே இன்றைய நிலையில் இந்திய ஒன்றிய இனங்கள் பெற்று வருகின்றன.

ஆங்கிலத்துக்கு மாற்று உருவாக்கப்படவில்லை

ஆங்கிலத்தில் பேசுவோர் விரைவில் வெட்கப்படவேண்டிய நிலை ஏற்படும் என்று அச்சுறுத்தும் அமித்சா, ஆங்கிலத்துக்கான மாற்று என்ன என்பதை எடுத்துக் கூறவில்லை.

மருத்துவம், பொறியியல் போன்ற படிப்புகளைத் தமிழில் கொண்டுவரத் தமிழ்நாடு தவறிவிட்டது என்று தமிழகம் வந்து இப்போது குறை கூறுகின்றனர் தலைமை அமைச்சரும் உள்துறை அமைச்சரும். ஆனால், அவர்கள் ஆட்சியில் பல்லாண்டுகளாகத் தொடர்ந்து இருக்கும் குசராத் போன்ற மாநிலங்களில் குசராத்தி போன்ற மொழிகளை மருத்துவம், பொறியியல் கற்றுத் தரும் மொழிகளாக மேம்படுத்திவிடவில்லை. இந்திக்கும் இதே நிலைதான்.

நாடு விடுதலை பெற்று 78 ஆண்டுகள் கழிந்த பின்னர். இப்போதுதான் தலைமை அமைச்சர் ஒருபுறமும் மற்ற அமைச்சர்கள் மறுபுறமும் தாய் மொழிக் கல்வி என்று உதடுகளில் உருகத் தொடங்கியுள்ளனர். அதுவும் ஒன்று முதல் அய்ந்தாம் வகுப்பு வரை மட்டுமே தேசியக் கல்விக் கொள்கையில் வலியுறுத்தப்படுகிறது.

ஆங்கிலத்துக்கு மாற்று எதுவுமில்லை என்று எவரும் கூறவில்லை. ஆங்கிலம் அகற்றப்படுவதால் ஏற்படும் வெற்றிடத்தை நிரப்புவதற்கான மாற்று உருவாக்கப்படவில்லை என்பதுதான் வெளிப்படையான உண்மை. ஆங்கிலத்தை அகற்றக்கூடிய வகையில், இந்திய ஒன்றியத்தில் இருக்கும் எந்த மொழியும் இதுவரை மேம்படுத்தப்படவில்லை என்பதைப் புறக்கணித்துவிட முடியாது.

## மொழிபெயர்ப்புகள் போதுமானவையல்ல

மருத்துவம், பொறியியல் போன்ற படிப்புகளுக்கான பாடநூல்கள் மாநில இனங்களின் மொழிகளில் பெயர்க்கப்பட்டு வருகின்றன என்று கூறப்படுகிறது. மேலும், உச்ச நீதிமன்ற, உயர்நீதிமன்றத் தீர்ப்புகளும் பெயர்க்கப்பட்டு வருகின்றன. இவை வரவேற்கத் தக்கன என்பதில் அய்யமில்லை.

ஆயினும், பள்ளி மற்றும் கல்லூரிப் பாடப் பகுதிகளை மொழிபெயர்ப்பது மட்டுமே தாய் மொழிக் கல்விக்குப் போதுமானதாக இருக்காது. பாடங்களுக்கும் மேலாகப் பல்வேறு துறைகளில் வெளிவந்துள்ள அரிய நுட்ப நூல்களும் தாய்மொழியில் இருக்கவேண்டும்.

இதற்கு அடிப்படையாக அமைவது, அந்த நுட்பங்களை உருவாக்கும் அளவுக்கு அந்த மொழியினர் உயர்நிலை பெறவேண்டும். ஆய்வுகள், கண்டுபிடிப்புகள் போன்றவற்றை உருவாக்கத் தக்கவாறான கட்டமைப்புகளை ஒன்றிய அரசும் மாநில அரசும் ஏற்படுத்தித் தரவேண்டும்.

## அறிவு மொழி வேண்டும்

அறிவுத் துறைகள் அனைத்தையும் உள்ளடக்கிக் கொண்டிருக்கும் அளவுக்கான ஒரு மொழி இப்போது வேண்டப்படுகிறது. அறிவையும் ஆற்றலையும் ஆக்கத்தையும் திறனையும் கற்றலையும் பயன்படுத்தலையும் செயல்படுத்தலையும் அளிக்கக்கூடிய மொழி ஒன்று இல்லாமல் எந்தவொரு இன மக்களும் வாழ முடியாது என்ற நிலையில் இன்றைய உலகம் இருக்கிறது.

புதிய கண்டுபிடிப்புகளில் ஈடுபட வாய்ப்பில்லாத சிறு நாடுகளில்கூட, அன்றாடச் செயல்பாடுகளுக்கு உயர் நுட்பங்கள் வேண்டப்படுகின்றன. அறிவு மொழி என ஒன்றில்லாமல் இவற்றைச் செயல்படுத்தும் சூழல் இன்றில்லை என்பதுதான் உண்மை நிலை.

இன்று உலக அரங்கில் ஆங்கிலம், ரசியன், சீனம் ஆகிய மூன்று மொழிகள் மட்டுமே அறிவுத் துறைகள் அனைத்தையும் உள்வாங்கிக் கொண்டுள்ளன எனலாம். செர்மன், பிரெஞ்சு, சப்பானியம், கொரியம் போன்ற மொழிகள் அவற்றுக்கு இணையாக இல்லாவிட்டாலும் ஈடு கொடுக்கும் நிலையில் மேலோங்கி நிற்கின்றன. உயர் கல்விக்கும் அப்பால், ஆய்வுகளுக்கும் கண்டுபிடிப்புகளுக்கும் ஏதுவான நிலையினை அவை எட்டியுள்ளன.

ஆங்கிலத்தை உடனடியாகத் தூக்கியெறிய வேண்டுமெனில், இந்த மொழிகளில் ஏதாவதொன்றினை எடுத்துக்கொள்ளாமல், இன்றைய நிலையில், அறிவுப் பெருக்கத்தினை எட்ட முடியாது. அதாவது, அறிவுத் தேடலுக்கு ஏற்ற மொழியொன்று அனைவருக்கும் தவிர்க்க இயலாததாகிவிட்டது.

இந்திய மொழிகளில் ஒன்றை அல்லது

தொடர்ச்சி 5 ஆம் பக்கம்

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 88 இதழ் 13

## மாமிசம் உண்பது இழிவானதா?

திருப்பரங்குன்றம் குறித்து இன்னொரு தீர்ப்பு வந்திருக்கிறது. திருப்பரங்குன்றம் மலையில் எந்த இடத்திலும் மிருகங்களை பலி கொடுக்கக் கூடாது, பலியிடப்பட்ட மிருகங்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட உணவை வழங்கக்கூடாது என்றும் தடை விதிக்கக் கோரி பிப்ரவரி 16, 17 தேதிகளில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களின் மீது வந்த தீர்ப்பு இது.

அந்த மனுவோடு சேர்த்து, திருப்பரங்குன்றம் மலைக்கு சிக்கந்தர் மலை என்று பெயரிட வேண்டும், சமணர் குன்று என்று பெயரிட வேண்டும் என்று தாக்கல் செய்யப்பட்ட இடையீட்டு மனுக்களும் விசாரிக்கப்பட்டுள்ளன.

தில்லியில் இருந்து வெளியிடப்படும், ஆர்.எஸ்.எஸ்.சின் ஆர்கனைசர் பத்திரிகை, அதன் பிப்ரவரி 7ஆம் தேதியிட்ட இதழில், பிப்ரவரி 4 அன்று திருப்பரங்குன்றத்தில் இந்து அமைப்புகளைச் சார்ந்தவர்களின் 'பிரம்மாண்டமான' ஆர்ப்பாட்டத்தில் "வெற்றிவேல், வீரவேல், காப்போம் காப்போம் ஸ்கந்த மலையைக் காப்போம்" என்று 50 பேர் முழக்கமிட்டதாகச் செய்தி வந்திருக்கிறது.

'ஸ்கந்த மலை' எனப் பெயரிட வேண்டும் என்று எந்த மனுவும் தாக்கலாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது!

ஒரு கோரிக்கை நேர்மறையாகத்தான் இருக்க வேண்டும் என்றில்லை; எதிர் விளைவை உருவாக்கவும் வைக்கப் படலாம்.

இரண்டு நீதிபதிகள் கொண்ட, சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரைக் கிளை அமர்வு ஜூன் 24ல் வழங்கிய 107 பக்கத் தீர்ப்பில், இரு நீதிபதிகளும் மாறுபட்ட கருத்தைக் கூறி, மூன்றாவது நீதிபதி ஒருவரை நியமித்துத் தீர்வு காணுமாறு கூறியிருக்கிறார்கள்.

நீதிபதி நிஷா பானு வழங்கிய தீர்ப்பில், "மதங்களுக்கு இடையேயான அமைதி மற்றும் நல்லிணக்கத்தில் தலையிட விரும்பவில்லை என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளார்.

இந்துக் கோவில்களிலும் விலங்குகளைப் பலியிடுதல் பாரம்பரியமாக மேற்கொள்ளப்படுவதைச் சுட்டிக்காட்டி, விலங்குகளைப் பலியிடுவதை ஒட்டுமொத்தமாகத் தடை செய்ய இயலாது என்கிறார் அவர்.

ஜெயலலிதா முதலமைச்சராக இருந்தபோது, ஆடு கோழி உள்ளிட்ட விலங்குகளை இறைவனுக்குப் பலியிடக் கூடாது எனச் சட்டம் அமல் நடத்தப்பட்டபோது, அதனை எதிர்த்து தமிழ்நாடு கொதித்தெழுந்தது. எனவே அந்தச் சட்டம் விலக்கிக் கொள்ளப்பட்டது. இதையும் நினைவில் கொள்ள வேண்டும்.

"திருப்பரங்குன்றம் மலையின் உச்சியில் அமைந்துள்ள தர்காவில் விலங்கு பலியிடுதல் என்பது பழங்காலத்திலிருந்தே முஸ்லிம்களால் மட்டுமல்ல, பிற சமூகங்களாலும் ஒரு மத நடைமுறையாக உள்ளது என்பது தெளிவாகிறது.

முருகன் கோவில், காசி விஸ்வநாதர் கோவில், சிக்கந்தர் தர்கா ஆகியவை மலையின் வேறு வேறு பகுதிகளில் உள்ளன. எந்த ஒரு சமூகத்தின் வழிபாட்டு முறையும் இன்னொரு வழிபாட்டுத் தலத்தின் புனித வெளியை ஆக்கிரமிக்கவில்லை.

திருப்பரங்குன்றத்தில் பாரம்பரியமாக நிலைத்திருக்கிற பொது அமைதி, நல்லிணக்கத்தைச் சீர்குலைக்க முயற்சிக்கிற நபர்கள் மற்றும் அமைப்புகள் மீது அதிகாரிகள் உறுதியான, உடனடி நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்" என்று அந்த நீதிபதி உத்தரவிட்டிருக்கிறார்.

இன்னொரு நீதிபதியான ஸ்ரீமதி அவர்கள், மலை மீதுள்ள தர்காவில் பாரம்பரியமாக விலங்குகள் பலியிடப்படுவதற்கு எந்தச் சான்றும் இல்லை என்கிறார்.

மேலும் திருப்பரங்குன்றம் கோவில் அருகில் இறைச்சி விற்கும் கடைகள் இல்லை என்பதாலும், அங்குள்ள திருமண மண்டபங்களில் மாமிச உணவு பரிமாற அனுமதிக்கப்படவில்லை என்பதாலும், கோவிலில் புனிதத் தன்மை பாதுகாக்கப்படுகிறது என்று கூறியிருக்கிறார்.

தமிழ்நாடு முழுவதும், பல திருமண மண்டபங்களில், புலால் உணவு பரிமாற அனுமதிக்கப்படுவதில்லை. இவையெல்லாம் கோவிலின் புனிதத்தை காப்பதற்கானது அல்ல.

திருப்பரங்குன்றம் ஊரில், மிகப் பெரும்பான்மையானவர்களின் வீடுகளில் மாமிச உணவு சமைக்கப்படுகிறது. இதனால் அவர்கள் கோவிலில் புனிதத்தைக் கெடுத்து விட்டார்கள் என்றும் கூற முடியாது.

திருப்பரங்குன்றத்தைச் சுற்றி, கருப்பண்ணசாமி கோவில் உள்ளிட்ட ஏராளமான நாட்டார் தெய்வ வழிபாடு உண்டு. இங்கெல்லாம் விலங்குகளைப் பலியிடுவது மரபு. ஒட்டுமொத்தமாகப் பலியிடக் கூடாது என்று தீர்ப்புரைக்கப்பட்டால், பாதிக்கப்படுவது முஸ்லிம்கள் மட்டுமல்ல, இந்துக்களும்தான்.

தமிழ்நாட்டில் 98 சதவீதம் பேர் மாமிச உணவு சாப்பிடுபவர்கள்தான். மாமிசம் உண்பதே இழிவானது, தரக்குறைவானது என்று ஒரு குற்ற உணர்வுக்குள் தள்ள, மீதமுள்ள இரண்டு சதம் உயர்சாதி இந்துக்கள் முனைகிறார்கள்.

"நீதிமன்றங்களை விட உயர்ந்த நீதிமன்றம் ஒன்றுண்டு. அது மனசாட்சி நீதிமன்றம். அது மற்ற எல்லா நீதிமன்றங்களையும் விட மேலானது" என்பார் காந்தியடிகள்.

திருப்பரங்குன்றத்திற்குள் பாரம்பரியமாக நிலவும் மத நல்லிணக்கத்தைச் சீர்குலைத்து, தமிழ்நாட்டைக் கலவரக் காடாக்கும் சூழ்ச்சிகளைத் தமிழ் மக்கள் முறியடிக்க வேண்டும்.

## பத்மாசுரன்கள் வேலைப் பிடித்தால் முருகனாகி விடுவார்களா



திருப்பரங்குன்றத்தில் முருகனுக்காக நடத்தப்படும் விழாக்கள் ஏராளம்.

◆ பங்குனித் திருவிழா சில வாரங்கள் தொடர்ந்து நடத்தப்படுவது. அதன் மையமாக முருகன் திருக்கல்யாணம் இருக்கும். அடுத்த நாள் திருப்பரங்குன்றம் மலையைச் சுற்றி தேரோட்டம் நடக்கும்.

மக்கள் உற்சாகமாக வடம்பிடித்து இழுப்பார்கள். முன்பு மரச் சட்டத்தாலான சக்கரம் இருந்தது. சில மேடு அல்லது பள்ளத்தில் தேர் நின்று கொள்ளும். அசைக்க முடியாது. மதுரை கோட்ஸ் தொழிலாளர்கள் திருப்பரங்குன்றம் ரயிலில் வந்து இறங்குவார்கள். சீத்தாலட்சுமி மில் தொழிலாளர்கள், மகாலட்சுமி மில் தொழிலாளர்கள் ஷிப்ட் விட்டு வருவார்கள்.

அவர்களும் சேர்ந்து சென்று அந்தத் தேரை இழுப்பார்கள். யானை வந்து பின்னால் நின்று தள்ளும். மாலைக்குள் நிலைக்குக் கொண்டு வந்து விடுவார்கள்.

◆ வைகாசி விசாகத்தன்று சாரி சாரியாக முருக பக்தர்கள் தலையில் பால்குடம் சுமந்து வருவார்கள். தவில் நாதஸ்வரம் முழங்க ஆடுவார்கள். கீழே விழுந்து விடாமல் உறவினர்கள் நண்பர்கள் அவர்களைப் பிடித்துக் கொள்வார்கள்.

◆ தை கார்த்திகை அன்று, தெப்பத் திருவிழா நடைபெறும். தண்ணீருக்குள் தேர்கட்டி, மைய மண்டபத்தை ஒட்டி தெப்பம் மூன்று முறைச் சுற்றி வரும்.

◆ கந்த சஷ்டியை ஒட்டி, கோவிலுக்குள்ளயே கூட்டம் கூட்டமாக அமர்ந்து உண்ணாவிரதம் இருப்பார்கள்.

◆ அப்புறம் மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் கல்யாணத்தைப் பார்ப்பதற்காக முருகன் இங்கிருந்து மதுரைக்கு எழுந்தருள்வார். கோவிலுக்குள் தங்கத் தேரோட்டம் நடக்கும்.

வருடம் முழுவதும் ஒவ்வொரு மாதமும் ஏதோ ஒரு விழா நடந்து கொண்டே இருக்கும்.

பல்லாயிரமாய் பக்தர்கள் வருவார்கள். காசு கொடுத்து ஆள் பிடித்து, வேனில் ஏற்றிக் கொண்டுவரப்பட்டவர்கள் அல்ல அவர்கள். தன் மீது பக்தி கொண்ட மக்களை, முருகனே தன்னை நோக்கி இழுப்பான்.

"முருகா முருகா" என்ற குரல் நாலா திசையிலும் ஒலிக்கும்.

அரோகரா அரோகரா என்று பக்தியில் உடம்பு சிலிர்க்க பக்தர்கள் முழங்குவார்கள்.

முருகனின் சன்னிதானத்தில், கரம் கூப்பி, கண் மூடி, கண்ணீர் ஒழுக, உதடுகள் துடிக்க பல நிமிடங்கள் நின்று உளமாரப் பிரார்த்தித்த பலரை நான் பார்த்திருக்கிறேன்.

அந்த விழாக்களுக்கு ஒரு போஸ்டர் இல்லை, புண்ணாக்கு இல்லை.

அத்தனை விழாவிலும் முருகன்தான் கதாநாயகன்.

திருப்பரங்குன்றத்தில் பிறந்து, மலைக்குப் பக்கத்திலேயே 35 ஆண்டுகள் வளர்ந்த நான் கண்டு சிலிர்த்த காட்சிகள் இவை.

இரண்டு நாட்களாக இயக்கப் பணிக்காக மதுரையில் இருக்கிறேன். திரும்பிய பக்கம் எல்லாம் முருகன் மாநாடு போஸ்டர்கள்.

அந்த போஸ்டர்களில் ஏராளமான கதாநாயகர்கள். தமிழ்க் கடவுள் முருகனை வழிபட, தமிழே அறியாத தலைவர்கள் அந்த போஸ்டர்களில் ஜொலிக்கிறார்கள். முருகனை மட்டும்தான் காணோம்! சில போஸ்டர்களில் போனால் போகிறது என்று முருகனைச் சின்னதாக அச்சிட்டு 'சைடுஆக்டர்' ஆக்கி இருந்தார்கள்.

பல லட்சக்கணக்கான பக்தர்கள் கூடும் திருச்செந்தூர் சூரசம்ஹாரத்துக்கு, காவல்துறையும் இல்லை, வழக்கும் இல்லை. கலவர பயமில்லை. எங்கும் நிறைந்தவன் முருகன் மட்டுமே!

தமிழர்கள் தம் நிலத்தை ஐந்து வகையாகப் பிரித்தார்கள். ஒவ்வொரு திணைக்கும் ஒவ்வொரு தலைவனை வைத்தார்கள்.

மலையும் மலை சார்ந்த இடமும் குறிஞ்சி. அதற்கு, வேலன் என்ற முருகன்தான் தலைவன். அவன் மீதே வேலெறிந்த ஆரிய சனாதனவாதிகள், அவனை சுப்பிரமணியன் ஆக்கிவிட்டார்கள்.

முருகன் ஐயர், முருகன் ஐயங்கார் என்று எந்தப் பெயரும் நீங்கள் கேள்விப்பட்டு இருக்க மாட்டீர்கள். ஏனென்றால் முருகன் அவர்களுடைய ஆள் இல்லை. சுப்பிரமணியனைக் கொண்டு வந்து நமது முருகன் மீது 'சூப்பர் இம்போஸ்' செய்தார்கள்.

இப்போது அந்த முருகனையே, திராவிடத்தின் மீது போர்தொடுத்து அழிக்கச் சொல்லி போஸ்டர் போட்டு அழைக்கிறார்கள்.

அரசியல் பேச மாட்டோம் என்று நீதிமன்றத்தில் வாக்களித்துவிட்டு, பேசியது அத்தனையும் அரசியல் தான்.

அகத்திக் கீரையைக் காட்டி ஆட்டைப் பின் தொடர வைப்பது போல, முருகனைக் காட்டி தமிழ் மக்களை தமக்கு ஆதரவாக இந்த நாலாந்தர அரசியல்வாதிகளால் மாற்றிவிட முடியாது.

ஏனென்றால் முருகன் யார்? என்று தமிழ் மக்களுக்குத் தெரியும்.

பத்மாசுரன்கள் வேலைப் பிடித்தால் முருகனாகி விடுவார்களா என்ன?

**திருப்பரங்குன்றம் மலையாண்டி மூர்த்தி**

## ◀◀ செங்கடலில் சங்கமிக்க சேலம் வாரீர்...

2 ஆம் பக்கத் தொடர்ச்சி

விவரங்களை அடுத்த வாரத்தில் காணலாம்.

மாநாட்டின் நிறைவு நாளான ஆகஸ்ட் 18 ஆம் நாள் சேலம் மாநகர் செங்கடலாய்க் காட்சியளிக்க உள்ளது. ஆம் தமிழகம் எங்குமிருந்தும் செம்படைத் தோழர்கள் குடும்பத்தோடு சங்கமிக்கும் மாபெரும் நம் குடும்ப விழா. ஆண்களும் பெண்களும் நம் குழந்தைகளும் பேரன் பேத்திகளும் குடும்பம் குடும்பமாய்ச் சங்கமிக்கும் நம் குடும்ப விழா.

ஒவ்வொரு தோழரும் சிவப்புச் சட்டை அணிந்து ஒவ்வொரு சகோதரியும் சிவப்புச் சேலை அணிந்து அதுபோன்றே நம் குழந்தைகளும் சிவப்புடை அணிந்து சங்கமிக்கும் விழா.

சேலம் மாநகரம் இதுவரைக் கண்டிராத மாபெரும் மகத்தான செங்கடலைக் காண உள்ளது. செங்கடலில் சங்கமிக்க தோழர்களே குடும்பத்தோடு பங்கேற்க ஆயத்தமாகி விட்டீர்களா?

ஆகஸ்ட் 18 தொலைதூரத்தில் இல்லை இன்னும் ஒரு சில வாரங்களே உள்ளன என்பதனை நினைவில் கொள்க!

அணிவகுக்க ஆயத்தமாவீர்!

மீண்டும் சந்திப்போம்...

தோழமைமிக்க,



(இரா.முத்தரசன்)
மாநிலச் செயலாளர்



ப.பரமசிவம்

# 1948லிருந்து 1956 வரை சேலம் மாவட்டத்தில் நடைபெற்ற இயக்கங்கள்

சேலம் ஜில்லா விவசாயிகள் முதலாவது மாநாடு 2.5.1949 ஞாயிற்றுக்கிழமை அன்று நடைபெற்றது.

திருச்செங்கோடு தாலுகா ஆனங்கூர் ரயில்வே ஸ்டேசன் அடுத்த நெட்ட வேலம்பாளையத்தில் விவசாயிகள் மைதானத்தில் நடைபெற்றது.

அகில இந்திய கிசான் கவுன்சில் அங்கத்தினர் ஸ்ரீமதிலதா அண்ணாஜி தலைமை வகித்தார். தமிழ்நாடு விவசாயிகள் சங்கத் தலைவர் ஸ்ரீபூவாரகவன் மாநாட்டைத் திறந்து வைத்தார்.

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத் தலைவர் ஜனாப் கே.எம்.கே.மீரான் செங்கொடி ஏற்றினார்.

நிகழ்ச்சி நிரல்படி மாநாட்டு நிகழ்ச்சி நடைபெற்றது. இரவு 10 மணிக்கு ஈரோடு புதுமைக்கலா மன்றத்தாரின் கலா நிகழ்ச்சி நடைபெற்றது.


சேலம் மாவட்ட விவசாயிகள் 2வது மாநாடு கிருஷ்ணகிரியில் 1953 மார்ச் 29, 30 தேதிகளில் நடைபெற்றது. பஞ்சமும், பட்டினியும், தொத்து நோய்களும் சேலம் மாவட்டம் முழுவதையும் பிடித்திந்த அத்தருணத்தில் இம்மாநாடு நடைபெற்றது. மேலும், அந்நெருக்கடியான நிலையிலிருந்து மீளவும் இம்மாநாடு பெரிதும் உதவியது.

விவசாயிகளின் நலனுக்காக இடைவிடாது உழைக்கும் தலைவர்களான தமிழ்நாடு உழைப்பாளி கட்சித் தலைவர் கடலூர் தோழர் ஏ.கோவிந்தசாமி நாய்க்கர் எம்.எல்.ஏ.

வெள்ளை ஏகாதிபத்திய ஆட்சியில் தேசிய விடுதலைப் போரில் பங்கு கொண்டு பலமுறை சிறை சென்றவரும் காங்கிரஸ் ஆட்சியாளரின் ஆட்கொல்லிச் சட்டத்திற்குப்பலியாகிஇரண்டு ஆண்டுகள் பாதுகாப்பில் வைக்கப்பட்டவருமான தமிழ்நாடு விவசாயிகள் சங்கத் தலைவர் மதுரை தோழர் எம்.கே.மீரான்.

தஞ்சை விவசாய இயக்கத்தின் சிற்பி தேசிய விடுதலைப் போரில் பெரும் பங்கு கொண்டு பலமுறை சிறை வைக்கப்பட்டவருமான ஆட்கொல்லிச் சட்டத்திற்கு இரையாகாமல் பல ஆண்டுகள் தலைமறைவாக இருந்து தமிழ்நாடு விவசாயிகள் இயக்கத்தைக் கட்டிக் காத்தவருமான தோழர் மணலி கந்தசாமி எம்.எல்.ஏ.

தென்பகுதி இரயில்வே தொழிலாளர்களின் மாணிக்கம் வெள்ளையன் ஆட்சியிலும் காங்கிரஸ் ஆட்சியிலும் பல ஆண்டுகள் சிறை வைக்கப்பட்டவருமான ஈரோடு தோழர் கே.டி.ராஜூ எம்.எல்.ஏ.



விவசாயிகள் இயக்கத்தின் இளங்காளைகள் தோழர் கே.வி.ராமசாமி எம்.எல்.ஏ, தோழர் டி.எஸ்.அர்த்தநாரி எம்.எல்.ஏ அவர்களும் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்கள்.

சேலம் ஜில்லா விவசாயிகள் சங்க மூன்றாவது மாநாடு, 1956 ஏப்ரல் 16, 17 தேதிகளில் பெத்தநாயக்கன் பாளையத்தில் சேலம் சிறைத் தியாகிகள் அரங்கில் நடைபெற்றது.

மாநாட்டிற்குத் தோழர்கள் தமிழ்நாடு விவசாயிகள் சங்கத் தலைவர் தோழர் மணலி கந்தசாமி எம்.எல்.ஏ, தமிழ்நாடு விவசாயிகள் சங்க காரியதரிசி தோழர் சீனிவாசராவ், ரயில்வே சங்கத் தலைவர் தோழர் கே.டி.ராஜூ எம்.எல்.ஏ தோழர்கள் ஜி.சாமுவேல் கே.செல்லப்பன், தோழியர் ஷாஜாதி ஆகியோர் கலந்து கொண்டு சேலம் மாவட்ட மூன்றாவது மாநாட்டைச் சிறப்பித்தார்கள்.

## பொதுக்கூட்டம்

ஆத்தூர் சந்தைப்பேட்டை மைதானத்தில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அதுசமயம் தமிழ்நாடு விவசாயிகள் சங்க காரிதரிசியும் தஞ்சாவூர் விவசாய இயக்க முக்கியஸ்தருமான தோழர் பி.சீனிவாசராவ் அவர்களும், பேராசிரியர் ஜி.சாமுவேல் எம்.ஏ அவர்களும் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்கள்.

அன்றே தமிழ்நாடு விவசாயிகள் சங்க உடையம்பட்டி கிளை அலுவலகத்தைத் திறந்தும் வைத்தார்கள். நிகழ்ச்சியில் தோழர் டி.ராமச்சந்திரன், தோழர் டி.சண்முகம், வாழப்பாடி சந்திரன், ஐ.பாஜாகான் கலந்து கொண்டு பேசினார்கள். தலைமை தோழர் ஏ.நடேசன். ஆத்தூர் கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கியத் தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

ஆணையாம்பட்டியில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுக்கூட்டம் 02.05.1954 தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6.00 மணியளவில் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

தலைவர் எஸ்.ராமுகோனார் தலைமை வகித்தார். பேச்சாளர்கள் தோழர் எஸ்.எம். ராமய்யா (ஜில்லா கட்சியின் காரிதரிசி), தோழர் எஸ்.டி.சீனிவாசன், மேட்டூர் டேம் தோழர் வாழப்பாடி எஸ்.சந்திரன் மற்றும் தோழர்கள் ஐ.பாஜாகான், டி.ராமசந்திரன், டி.சண்முகம் ஆகியோர் கலந்து கொண்டு பேசினார்கள். கடைசியில் இரவு 9.30 மணிக்கு வே.நா.திருமூர்த்தியின் கலா கோஷ்டியாரால் ‘சொர்க்கத்தில் காந்தி’ என்ற கலை நிகழ்ச்சி நடைபெற்றது.

சேலம் மாவட்டத்தில் தமிழ்நாட்டுத் தலைவர்களான தோழர்கள் ஸ்ரீமதி லதா அண்ணாஜி, ஸ்ரீ பூவாராகன் ஜனாப் கே.எம்.கே.மீரான், மணலி கந்தசாமி, கடலூர் தோழர் கோவிந்தசாமி நாயக்கர் எம்.எல்.ஏ, ஈரோடு கே.டி.ராஜூ எம்.எல்.ஏ, பி.சீனிவாசராவ் ஆகிய மாநிலத் தலைவர்களும் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

ஒன்றுபட்ட சேலம் மாவட்டத்தின் தலைவர்கள் தோழர்கள் எஸ்.எம். ராமய்யா, எஸ்.டி.சீனிவாசன் மேட்டூர் டேம், வாழப்பாடி எஸ்.சந்திரன், ஐ.பாஜாகான், டி.ராமச்சந்திரன், டி.சண்முகம், எஸ்.ராமுக்கோனார், கே.வி.ராமசாமி, டி.எஸ்.அர்த்தனாரி ஜி.சாமுவேல் எம்.ஏ, கே.செல்லப்பன் சேலம் நகரச் செயலாளர், தோழர் ஷாஜாதி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

மேற்கண்ட பிரசுங்களைப் பாதுகாத்துக் கொடுத்த ஆணையாம்பட்டி ஓய்வு பெற்ற தோழர் தங்கவேல் ஆசிரியருக்கு நன்றிக் கடன் பட்டுள்ளோம். ஒன்றுபட்ட சேலம் நாமக்கல் தர்மபுரி கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியையும் வர்க்க வெகுஜன அமைப்புகளை உருவாக்க மாநிலம் முழுவதுமிருந்து வந்த தலைவர்கள் வழிகாட்டினார்கள். சேலம் மாவட்டத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 100 வது ஆண்டு விழாவின் போது ஆக 15, 16, 17, 18 தேதிகளில் மாநில மாநாடு நடைபெறுகிறது. செம்படைப் பேரணி நடைபெற இருக்கிறது. அணி அணியாகத் திரண்டு வந்து சேலம் மாவட்டம் மேலும் வளர உதவுங்கள் தோழர்களே!!!

**தொடர்புக்கு: 9442995040**

---

# அறிவு மொழி ஆங்கிலத்தை அகற்ற இயலாது...

3 ஆம் பக்கத் தொடர்ச்சி

அனைத்தையும் உயர் அறிவு தரும் நிலையில் மேம்படச் செய்ய முடியாதா என்ற வினா இங்கு எழலாம். முடியும்; முடியாதது எதுவுமில்லை. ஆனால், அமித்சா எதிர்பார்ப்பது போன்று ஆங்கிலத்தை அகற்றுவது விரைவில், உடனடியாக நடந்துவிடக் கூடியதாக இருக்காது. அந்த நிலையினை எட்டிப் பிடிக்கப் பல்லாண்டுகள் முயற்சிக்கவேண்டும். பல கட்டங்களைத் தாண்டியாக வேண்டும்.

## முயன்றால் முடியும்

இந்தியா விடுதலை பெற்ற காலத்தினை ஒட்டித்தான் சீனாவும் கொரியாவும் விடுதலை அடைந்தன. இந்த முக்கால் நூற்றாண்டில் சீன, கொரிய மொழிகள் அடைந்த மேம்பாட்டினை, இந்திய மொழிகள் பெறுவதற்கான எத்தகைய முயற்சிகளும் முன்னேற்பாடுகளும் செய்யப்படவில்லை என்பதை வருத்தத்துடன் ஒப்புக்கொள்ள வேண்டியுள்ளது.

மக்கள் பேசும் மொழியாகவும் பயன்பாட்டு மொழியாகவும் இல்லாததால் சமக்கிருதத்தைப் பயிற்சி மொழியாகவும் அறிவு மொழியாகவும் மேம்படுத்துவதற்கான வாய்ப்புகள் இல்லவே இல்லை. ஆயிரக்கணக்கான கோடிகளை அள்ளிக் கொடுத்தாலும் பழைய புராணங்களுக்குள் வட்டமடித்துக் கொண்டிருக்க முடியுமேயன்றி, புத்தாக்கங்கள் உருவாகும் நிலை சமக்கிருதத்துக்கு வரப்போவதில்லை. 25,000 எண்ணிக்கை கொண்டோர் அந்த நிலையினை எட்டிப் பிடிக்கவும் முடியாது. தாய் மொழியல்லாத சமக்கிருதத்தைப் பிறர் பயின்று அறிவுப் புத்தாக்கங்களைத் தரும் சூழலும் ஏற்படப்போவதில்லை.

ஆனால், இந்திய ஒன்றியத்தில் உள்ள பிற இனத்தினர் மேல் இந்தியைத் திணிக்க முயற்சிக்கும் ஒன்றிய ஆட்சியினர் அதனை அறிவு மொழியாக மேம்படுத்தத் தவறி விட்டனர். ஒருவேளை அறிவு மொழியாக இந்தி மேம்பட்டுவிட்டால், சமக்கிருதத்தின் ‘பெருமை’ மங்கிவிடும் என மருண்டார்களா என்பது தெரியவில்லை.

இந்த அடிப்படையில்தான், இந்திய ஒன்றியத்தில் உள்ள பிற இன மக்களின் மொழிகளின் வளர்ச்சியும் மேம்பாடும் தடுக்கப்பட்டுள்ளது என்பதை மறுக்க முடியாது.

140 கோடி மக்கள் எண்ணிக்கையும் வற்றாத உற்பத்தி வளமும் பொருளிய முன்னேற்றமும் கொண்ட சீனா, தனது மொழியினை மேம்படுத்திக்கொண்டதில் வியப்பில்லைதான். ஆனால், கொரிய நாடுகளின் நிலை வேறு. வடகொரியா 2.65 கோடி, தென் கொரியா 5.17 கோடி என எட்டுக் கோடிக்கும் குறைவாக மக்கள் வாழ்கின்ற இந்த இரு நாடுகளிலும் கொரிய மொழியின் வளர்ச்சி, மேம்பாடு, செயல்பாடு, கண்டுபிடிப்புகள் ஆகியன போற்றத் தக்கதாகத் தெரிகின்றன.

தனிமைப்படுத்தப்பட்டுள்ள வடகொரியா தனது மொழியினைப் பயன்படுத்தி அணுக் கருவிகள், ஏவுகணைகள் போன்றவற்றையெல்லாம் உருவாக்கும் நுட்ப வளம் பெற்றுள்ளது.

தமிழ்நாட்டின் மக்கள் எண்ணிக்கைக்கு இணையாக இருக்கும் கொரிய நாடுகளால் தங்களது கொரிய மொழியினை மேம்படுத்த முடியும் என்றால், தமிழுக்கும் அத்தகைய தகுதிகள் வந்து சேரும் என்பதில் அய்யமேதுமில்லை.

தன்னாட்சியும் தனியுரிமையும் இல்லாத நிலையில், தமிழ் எதிர்பார்ப்புகளோடு ஏங்கிக் கிடக்கிறது என்றுதான் கூறவேண்டியுள்ளது.

ஒரு மொழியிலிருந்து இன்னொரு மொழிக்கு எளிதில் பெயர்த்துத் தருகின்ற மொழிபெயர்ப்பு நுட்பங்கள் இன்று வளர்ந்துள்ளன. வளர்ந்து வரும் செயற்கை நுண்ணறிவுத் திறன் மொழிபெயர்த்தலை மேலும் விரைவாகவும் சிறப்பாகவும் செய்து முடிக்கலாம்.

ஆனால், மொழிபெயர்ப்புகள் மட்டுமே ஒரு மொழியினை மேம்படுத்திவிட முடியாது. அந்த மொழியிலேயே புதிய ஆக்கங்களும் படைப்புகளும் கண்டுபிடிப்புகளும் பயன்பாடுகளும் வரவேண்டும்.

பயிற்று மொழி என்பது வேறு அறிவுமொழி என்பது வேறு என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும். பாடத்திட்டத்தில் உள்ள பகுதிகளை மொழிபெயர்த்துப் பயிற்று மொழியாகத் தொடங்கிவிடலாம்.

ஆனால், அறிவு மொழி என்பது உலகம் இன்று பெற்றுள்ள நுட்பங்கள் அனைத்தையும உள்ளடக்கியிருப்பது. இது அடுத்த கட்ட வளர்ச்சி.

இன்று தொடங்கினால் அடுத்த 30 முதல் 50 ஆண்டுகளுக்குள் படிப்படியாக தமிழ் உள்ளிட்ட எந்த மொழியாக இருந்தாலும் அறிவு மொழியாக மேம்படுத்த முடியலாம். இதற்கேற்ற மனித வளம் தமிழினத்திடம் உள்ளது. பிற ஒன்றிய இனங்களிலும் இருக்கலாம்.

ஒவ்வொரு துறையிலும் நுட்ப அறிவினைப் பெற்று, புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்கும் புதிய தலைமுறை தலையெடுத்து வரவேண்டும்.

இவற்றுக்கான முயற்சிகளை ஒன்றிய அரசு உடனடியாகத் தொடங்கவேண்டும்

நிலையானது எனத் தன்னைக் கூறிக்கொள்ளும் சனாதனம் அறிவு வளர்ச்சியில்லாத வேத கால நிலையிலேயே மக்கள் வாழவேண்டும் என்ற எண்ணத்தைக் கொண்டிருக்கலாம். சனாதனிகள் மட்டும் கற்று உயர் பொறுப்புகளுக்குச் செல்லலாம், பிறர் பழமையிலேயே கிடக்கவேண்டும் என்னும் எதிர்பார்ப்போடு ‘ஆங்கிலம் பேசுவோர் வெட்கப்படவேண்டும்‘ என்ற கூற்று வெளிப்பட்டிருக்கும் எனக் கருதலாம்.

ஆங்கிலம் பேசுவோர் வெட்கப்படுவது ஒருபுறம் இருக்கட்டும். கடந்த முக்கால் நூற்றாண்டுக்கும் மேலாகத் தமிழ், இந்தி உள்ளிட்ட இந்திய மொழிகளை மேம்படுத்தாமல் இருந்தமைக்குத்தான் அன்றைய, இன்றைய ஆட்சியாளர்கள் உண்மையில் வெட்கப்படவேண்டும்.

**தொடர்புக்கு : 9444075561**




வ.மணிமாறன்

**முருக பக்தர்கள் மாநாடு ஆன்மீக மாநாடல்ல. அரசியல் மாநாடு. அதுவும் மக்களின் பக்தியை இந்து வாக்கு வங்கியாக, இந்துத்துவ அரசியலாக மாற்றிவிடத் துடிக்கும் மாநாடு என்பதை வெளிப்படுத்தியிருக்கிறது.**

# பாசிச அரசியலுக்கு அணிதிரட்ட முருக பக்தர்கள் மாநாடு






மதுரையில் ஜூன் 22 ஆம் தேதி முருக பக்தர்கள் மாநாடு நடைபெற்றது. இதனையொட்டி, முருகன் சிலையுடன் அறுபடை வீடுகளின் அசத்தலான செட் போடப்பட்டு, ஒரு வாரமாக வழிபாடுகள் நடைபெற்றன. ஜூன் 22 அன்று மாநாட்டு மேடையை அலங்கரிக்கும் வகையில் அறுபடை வீடுகளின் செட் இடம் மாற்றப்பட்டது. அரசியலா..? அதற்கும் எங்களுக்கும் தொடர்பே இல்லை. முற்றிலும் ஆன்மீக மாநாடு என்று உயர்நீதிமன்றத்தில் சத்தியம் செய்து (உறுதியளித்து), அதனை நீதிமன்றமும் மலை போல் நம்பி(!) அனுமதியளித்தது. வெற்றி வேல், வீர வேல் என்று பாடி முருக பக்தர்கள் மாநாட்டுப் பணிகளை சங்கிகள் தொடங்கினர்.

அறுபடை வீடுகளின் அசத்தல் செட்டை ஒன்றிய அமைச்சர் எல்.முருகன், தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி, மகாராஷ்டிரா மாநில ஆளுநர் சி.பி.ராதாகிருஷ்ணன் உட்பட சங் பரிவாரங்களின் பிரமுகர்கள் வந்து வழிபட்டுச் சென்றனர். உள்ளூர் மக்களும் வந்து அறுபடை வீடுகளின் அசத்தல் செட்டை கண்டும் வழிபட்டும் சென்றனர்.

## மாநாட்டில் நடந்தது என்ன?

முருக பக்தர்கள் மாநாட்டுக்கும் அரசியலுக்கும் தொடர்பு இல்லை. ஆன்மீக மாநாடு, ஆன்மீகம் மட்டும்தான் பேசப்படும் என நீதிமன்றத்தில் உறுதியளித்து அனுமதி பெற்றார்களே. அதன்படிதான் மாநாடு நடந்ததா?

இந்த மாநாட்டில் ஆந்திர மாநில துணை முதலமைச்சர் பவன் கல்யாண், புதுவை மாநில சட்டப்பேரவைத் தலைவர் செல்வம், தமிழ்நாடு பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன், முன்னாள் தலைவர் அண்ணாமலை, பாஜக மூத்த தலைவர்கள் பொன்.ராதாகிருஷ்ணன், தமிழிசை சவுந்தரராஜன், எச்.ராஜா, அதிமுக முன்னாள் அமைச்சர்கள் செல்லூர் ராஜு, ஆர்.பி.உதயகுமார், கடம்பூர் ராஜு, அமைப்புச் செயலாளர் வி.வி.ராஜன் செல்லப்பா, அதிமுக தகவல் தொழில்நுட்ப மாநில செயலாளர் ராஜ்சத்யன் உள்ளிட்ட நிர்வாகிகள் மற்றும் பல்வேறு அமைப்பினர் கலந்து கொண்டனர். ஆன்மீக (?) மாநாட்டில் பங்கேற்ற இந்த அரசியல் பிரபலங்களுடன் மடாதிபதிகள், ஜீயர்கள், சிவாச்சாரியார்களும் கலந்து கொண்டனர்.

மாநாட்டில் பேசிய அண்ணாமலை, “இந்து என்பதற்காக நம்முடைய கடைக்கோடித் தொண்டர்கள் கொல்லப்படுகிறார்கள்” என்று ஆவேசம் காட்டினார்.

“முருகனைப் பற்றி கேள்வி கேட்கும் நீங்கள், அரேபியாவில் இருந்து வந்த மதங்கள் பற்றி இதே கேள்வி கேட்க முடியுமா? அதற்கான துணிச்சல் உங்களுக்கு உண்டா? சீண்டிப் பார்க்காதீர்கள்” என்று தெலுங்கு கலந்த தமிழில் பேசிய ஆந்திர துணை முதலமைச்சர் பவன் கல்யாண் எச்சரித்தார்.

“தமிழகத்தில் இரண்டு சட்டங்கள், இந்துவுக்கு ஒரு சட்டம், இந்து மதத்தை சாராதவர்களுக்கு ஒரு சட்டம் என்று எதற்காக இருக்கிறது? இதைக் கேட்பதற்காகத்தான் மதுரை மண்ணில் நின்று கொண்டிருக்கிறோம்” இது அண்ணாமலையின் பேச்சு.

“இது கலி யுகம் முருகன் நேரில் வரமாட்டான். நாமே முருகனின் உணர்வாக மாறிவிடுவோம். நாசகார சக்திகளை நிர்மூலமாக்கிடுவோம்” என்று பவன் கல்யாண் காற்றில் கத்தி வீசினார்.

மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட ஐந்தாவது

தொடர்ச்சி 7 ஆம் பக்கம்

## ஆலயங்களும் அறநிலையத்துறையும்

முருக பக்தர்கள் மாநாட்டில் “அறங்கெட்ட அறநிலையத்துறை ஆலயங்களை விட்டு வெளியேற வேண்டும்” என்றொரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அதாவது, அறநிலையத்துறை அறங்கெட்டு நடக்கிறது. அது கோவில்களை விட்டு வெளியேற வேண்டும் என்கிறது மாநாட்டுத் தீர்மானம்.

சங் பரிவாரம் இப்படிப் பேசுவது புதிதல்ல. அண்ணாமலை மாநிலத் தலைவராக இருந்தபோது, “பாஜக ஆட்சிக்கு வந்தால் அதன் முதல் கையெழுத்து இந்து சமய அறநிலையத் துறையை ஒழிப்பதே” என்று அறிவித்திருக்கிறார்.

பெருங்கோயில்கள் செல்வ வளமும் பெருஞ்சொத்தும் கொண்டுள்ளன. அவை அனைத்தும் மாமன்னர்களால் கட்டப்பட்டு பராமரிக்கப்பட்டன. இதற்கென கிராமங்களைத் தானமாகக் கொடுத்தனர். அவற்றில் உழைப்பதற்காக கூட்டம் கூட்டமாக மக்களையும் ஒதுக்கினர். இவை பற்றிய கல்வெட்டுகள் கோவில்களில் உள்ளன. மன்னராட்சிக் காலம் வரை கோவில்கள் அனைத்தும் மன்னர்களின் கட்டுப்பாட்டிலேயே இருந்து வந்தன.

கிழக்கிந்தியக் கம்பெனி, பின்னர் பிரிட்டிஷ் அரசாட்சி காலத்தில் இந்தக் கோவில்களைக் கட்டுப்படுத்துவது யார்? முறைப்படுத்துவது எப்படி? என்ற கேள்வி எழுந்தது.

1817ல் கோயில்களுக்கு வழங்கப்படும் நிதியுதவி முதலான அறக்கொடைகளைக் கண்காணிக்க சட்டம் கொண்டுவரப்பட்டது. அந்தப் பொறுப்பு வருவாய் வாரியத்திடம் தரப்பட்டது. பின்னர், பிரிட்டிஷ் அரசின் நேரடி ஆட்சியின் கீழ் வந்தபோது, 1857ல் “மத விவகாரங்களில் தலையிடுவதில்லை” என அரசு முடிவெடுத்தது. இதனால், கோவில்கள் அந்தந்தப் பகுதி தர்ம கர்த்தாக்களின் கட்டுப்பாட்டுக்குள் சென்றன. தர்ம கர்த்தாக்களாக பண்ணையார்கள், செல்வந்தர்கள், சனாதனிகள்தான் இருந்தனர். அவர்கள் கோவில் சொத்துக்களைச் சூறையாடினர். இதுபற்றி பிரிட்டிஷ் அரசுக்குப் புகார்கள் பல சென்றன. ஆனால் பிரிட்டிஷ் அரசு கண்டுகொள்ளவில்லை.

பிரிட்டிஷ் அரசு இந்தியர்களுக்கும் ஆட்சியில் பங்கு கொடுத்தது. இதனையடுத்து, 1920 ஆம் ஆண்டு சென்னை மாகாணத்தில் நடைபெற்ற தேர்தலில் நீதிக்கட்சி ஆட்சிக்கு வந்தது. கோயில் சொத்துகள் கொள்ளை போவதைத் தடுக்க நீதிக்கட்சி அரசாங்கம் முடிவெடுத்தது. பிரிட்டிஷ் அரசும் ஒப்புதல் அளித்தது. இதனையடுத்து, 1927ல் இந்து சமய அறநிலைய வாரியம் உருவாக்கப்பட்டு, அதன் கீழ் கோயில்கள் கொண்டுவரப்பட்டன.

நாடு விடுதலை அடைந்த பிறகு, 1951ல் இந்து சமய அறக்கொடைகள் சட்டம் கொண்டுவரப்பட்டது. இதனைத்தொடர்ந்து, காமராஜர் ஆட்சிக் காலத்தில் 1959ஆம் ஆண்டு, இந்துசமய அறநிலையத்துறை என்ற தனி அரசுத்துறை உருவாக்கப்பட்டது. அதன் கீழ் கோயில்கள் கொண்டுவரப்பட்டன. தற்போது சமணக் கோயில்கள் உட்பட 46 ஆயிரம் கோயில்கள் உள்ளன. இவற்றுக்குச் சொந்தமாக ஐந்து லட்சம் ஏக்கர் நிலங்கள் உள்ளன. விளைநிலங்கள் தவிர மனைகள் மற்றும் கட்டடங்கள் உள்ளன. மன்னர்களும் மக்களும் கொடுத்த விலை மதிக்கமுடியாத தங்க, வைர ஆபரணங்கள் இருக்கின்றன. (இவை பற்றிய விரிவான விவரங்கள் இந்துசமய அறநிலையத்துறை இணையதளத்தில் உள்ளன)

கோவில்களில் தங்க, வைர நகைகள், விலையுயர்ந்த ஆபரணங்கள், பல லட்சம் ஏக்கர் விளைநிலங்கள், வருவாய் ஈட்டித்தரக்கூடிய சொத்துகள் குவிந்துகிடக்கின்றன. அவை அந்தந்த வட்டாரத்தில் அதிகாரம் செலுத்தும் மையங்களாகவும் இருக்கின்றன. திருவிழாக்கள், கொண்டாட்டங்களுடன் அப்பகுதி மக்கள் குவியும் இடங்களாகவும் கோயில்கள் உள்ளன. இதனால், இந்துத்துவ அரசியலின் பின்னால் மக்களைத் திரட்டுவதற்கும், ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கும் கோயில்கள் உதவியாக இருக்கும் என ஆர்எஸ்எஸ் கணக்குப் போடுகிறது. தங்களின் மதவெறி அரசியலைப் பயிற்றுவிக்கும் இடங்களாக அவற்றைப் பயன்படுத்தலாம் எனத் திட்டமிடுகிறது. இதற்காக சங்கிகள் அறங்கெட்டு பேசுவதுதான் அறநிலையத்துறையே ஆலயங்களை விட்டு வெளியேறு என்பது.

தீட்சிதர்களின் கட்டுப்பாட்டில் உள்ள சிதம்பரம் கோவில், கேரளாவில் உள்ள கோவில்கள் படும்பாடுகள் எல்லாம் சங்கிகளின் பேச்சுக்கு எதிராக உள்ளன. மன்னர்களும் செல்வந்தர்களும் தானமாகக் கொடுத்தவை அனைத்தும் மக்களுக்கு உரியவை. அவை அரசின் கட்டுப்பாட்டில்தான் இருக்க வேண்டும்.

# பாசிச அரசியலுக்கு அணிதிரட்ட...

6 ஆம் பக்கத் தொடர்ச்சி

தீர்மானம் "வரும் தேர்தலில் இந்து ஓட்டு வங்கியை நிரூபித்துக் காட்ட வேண்டும்" என்கிறது.

இந்தப் பேச்சுகள் அரசியல் இல்லையாம். ஆன்மீகமாம். அதை உலகம் நம்ப வேண்டுமாம்.

உண்மையில் இவை வெறும் அரசியல் பேச்சுகள் அல்ல. நச்சு அரசியல். மக்களின் மனதில் நஞ்சை விதைக்கும் அரசியல். மத வெறுப்பைத் தூண்டும், சமூக நல்லிணக்கத்தைச் சீர்குலைக்கும் அரசியல். நாடு ஏற்றுக் கொண்டிருக்கும் அரசியலமைப்புக்கு (Constitution) எதிரான அரசியல். தமிழ்ச் சமூகம் இத்தனை ஆண்டுகளாக நிராகரித்து வரும் அரசியல். இதனை முருகன் பெயரிலும், முருக பக்தர்கள் பெயரிலும் திணிக்கும் முயற்சிதான் முருகன் பெயரிலான இந்த மாநாடு.

### முருகனுக்கு ஆபத்தா?

திருப்பரங்குன்றம், திருத்தணி, பழனி.. என குன்று தோறும் இருக்கும் முருகனை ஆண்டு தோறும் பல லட்சம் மக்கள் திரண்டு வழிபடுகின்றனர்.

குமரகிரிப் பெருமானே!
மனத்தையும் மாய்த்திடுவீர்!
பச்சைமலை முருகா!
இச்சையைக் களைந்திடப்பா
பவழமலை ஆண்டவனே!
பாவங்களைப் போக்கிடப்பா
விராலிமலை சண்முகனே
விரைவில் நீ வந்திடப்பா
வயலூர் குமாரரே!
ஞானவரம் எனக்கு அருள்வீரே
வெண்ணெய் மலை முருகா!
மெய்வீட்டைத் தந்திடுவீர்
கதிர்காம வேலவனே!
மன மாயை அகற்றிடுவாய்
காந்த மலைக் குமரா!
கருத்துள் வந்திடுவீர்..

திக்கற்றவர்களுக்கு தெய்வமே துணை என முருகனை நாடித் தேடி ஓடி வருகின்றனர். மானிடர்களுக்கு இல்லாத சக்தி, ஆற்றல் அந்த முருகனுக்கு இருக்கிறது என்று நம்பி வேண்டுகின்றனர். விரதம் இருக்கின்றனர். பாத யாத்திரை செல்கின்றனர். பால் காவடி தூக்குகின்றனர். தூக்க நேர்ச்சை செய்கின்றனர். அபலைகளை அந்த ஆண்டவன் காப்பாற்றுவான் என மருகி வேண்டுகின்றனர்.

இந்த மக்களிடம் சென்று முருகனுக்கு ஆபத்து, முருகன் இருக்கும் மலைக்கும் ஆபத்து, பக்தர்களே வாருங்கள் என்று கூவுகிறது சங்கிக் கூட்டம். மக்களின் பக்தியை இந்து வாக்கு வங்கியாக, இந்துத்துவ அரசியலாக மாற்றிவிடத் துடிக்கிறது இந்தக் கூட்டம். இதுதான் முருக பக்தர்கள் மாநாட்டிலும் நடந்திருக்கிறது.

### சிக்கந்தர் மலை என்று சொல்வது யார்?

கார்த்திகை தீபம் அன்று, திருப்பரங்குன்றனத்தில் தீபம் ஏற்றுவதற்கென தூண் இருக்கிறது. அதில் தீபம் ஏற்ற மாட்டோம். மலை உச்சியில், சிக்கந்தர் தர்காவுக்கு அருகேயுள்ள சர்வே கல் தான் தீபத்தூண். அதில் தான் தீபம் ஏற்றுவோம் என்று 25 ஆண்டுகளாக இந்து முன்னணி பேசிக் கொண்டிருக்கிறது. இந்த இந்து முன்னணி நடத்தும் முருக பக்தர்கள் மாநாட்டிலும் "திருப்பரங்குன்றம் மலை உச்சியில் தீபம் ஏற்றுவோம்" என தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறார்கள்.

"சென்னிமலையை உரிமை கொண்டாடினார்கள். இப்போது திருப்பரங்குன்றத்திற்கு வந்திருக்கிறார்கள்" என்று மாநாட்டில் பேசியது மட்டுமல்ல, "திருப்பரங்குன்றம் உட்பட குமரன் இருக்கும் அனைத்து மலைகளும் (குன்றுகளும்) காக்கப்பட வேண்டும்" என்று தீர்மானமும் நிறைவேற்றி இருக்கிறார்கள்.

"சிக்கந்தர் மலையை இடம் மாற்ற வேண்டும். திருப்பரங்குன்றத்தை அயோத்தியாக மாற்றுவோம்" என பாஜக மூத்த தலைவர் எச்.ராஜா தொடர்ந்து பேசி வருகிறார்.

சென்னிமலையை ஏசு மலை என்றும், திருப்பரங்குன்றத்தை சிக்கந்தர் மலை என்றும் மாற்ற முயற்சிக்கின்றனர். அதனை தடுத்தே தீருவோம் என மாநாட்டில் தீர்மானம் போட்டுள்ளனர்.

அரசு ஆவணங்கள், மக்களின் பேச்சு வழக்குகள் என அனைத்திலும் சென்னிமலையை சென்னிமலை என்றுதான் குறிப்பிடுகின்றனர். திருப்பரங்குன்றத்தை திருப்பரங்குன்றம் என்றுதான் சொல்லுகின்றனர். தர்கா நிர்வாகம் கூட, திருப்பரங்குன்றம் மலை மீது இருக்கும் சிக்கந்தர் தர்கா என்றுதான் குறிப்பிடுகிறது.

சிக்கந்தர் மலை என்று மாற்றப் போவதாகச் சொன்னது யார்? பெயரை மாற்றத் துடிக்கும் அமைப்பு எது? அவர்களின் நோக்கம் என்ன?

இது பற்றி பாஜகவோ, இந்து முன்னணியோ இவற்றை வழிநடத்தும் ஆர்.எஸ்.எஸ் அமைப்போ பேசவில்லை. அவர்களின் நோக்கம் பொய்யான அரசியல் எடுத்துரைப்பை (Fake Political Narratives) உருவாக்கி, திருப்பரங்குன்றம் வட்டாரத்தில் மதப் பதற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதுதான். முருக பக்தர்கள் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களும் இதனைத் தான் செய்திருக்கின்றன.

இத்தனையும் செய்துவிட்டு, "இந்து முன்னணி பெரியவர்களுக்கும் அரசியலுக்கும் சம்பந்தம் கிடையாது" என்று அடித்துப் பேசுகிறார் அண்ணாமலை.

சோற்றுக்குள் முட்டையை மறைக்கலாம். முழுப் பூசணியை மறைக்க முடியுமா? மதப் பதற்றத்தையும் மத வெறியையும் மக்களிடம் ஏற்படுத்தி, பாசிச அரசியலின் பின்னால் தமிழ்நாட்டு மக்களை அணிதிரட்ட ஆர்எஸ்எஸ் களமிறங்கி இருக்கிறது. அதன் பரிவாரங்கள் அனைத்துத் தளங்களிலும் வேலை செய்கின்றனர்.

கீழடி முதல் சித்தர்கள், வள்ளலார் வரையிலான மதச்சார்பற்ற பாரம்பரியம் கொண்ட தமிழ் மண், பெரியார் மண் என்று மட்டும் பேசிக்கொண்டிருக்காமல், ஜனநாயக சக்திகளையும் ஒருங்கிணைத்துக் கொண்டு நடைமுறையில் எதிர்கொள்வதற்கான செயல்திட்டம் வேண்டும். பாசிசத்தை எதிர்கொள்வதற்கான அவசர அவசியத் தேவையும் இதுதான்.

தொடர்புக்கு: 9500001224

## நீதிமன்றம் எப்படி நம்பியது?

அரசியலமைப்புச் சட்டத்தை சங் பரிவார் எப்பொழுதும் மதித்தது இல்லை. பாபர் மசூதியை இடிக்க மாட்டோம் என நீதிமன்றத்தில் உறுதி அளித்தனர். பாஜகவின் முன்னோடிகளான எல்.கே. அத்வானி, முரளி மனோகர் ஜோஷி, உமா பாரதி, மாநில முதல்வர் கல்யாண் சிங் உள்ளிட்டோர் இடித்துத் தள்ளினர். இதுபோன்ற எடுத்துக்காட்டுகள் பல உள்ளன.

முருக பக்தர்கள் மாநாடு, அரசியல் மாநாடு அல்ல, ஆன்மீக மாநாடு. அரசியல் பேச மாட்டோம் என உயர்நீதிமன்றக் கிளையில் உறுதிமொழி கொடுக்கின்றனர். அதனை நீதிமன்றமும் நம்புகிறது. அனுமதியை வாரி வழங்குகிறது.

நடந்தது என்ன? அதற்கு நேர்மாறாக அரசியல் பேசியது மட்டுமல்ல. மதவெறியையும் வன்முறையையும் சமூக நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் வகையில் மாநாட்டில் பேசினர். தீர்மானங்கள் நிறைவேற்றினர். இந்த அத்துமீறலை, நீதிமன்ற அவமதிப்பை உயர்நீதிமன்றம் தானாக முன்வந்து விசாரிக்குமா? தாமதமின்றி தீர்ப்பளிக்குமா?

## வன்முறையைத் தூண்டும் அண்ணாமலை



முருக பக்தர்கள் மாநாட்டில் பேசிய தமிழக பாஜக முன்னாள் தலைவர் அண்ணாமலையில் பேச்சு, மதவெறியைத் தூண்டும்வகையிலும் சமூகநல்லிணக்கத்தை சீர்குலைப்பதாகவும் இருந்தது. அவர் பேசும் போது, "அறுபடை வீடுகளில், முதல் வீடான திருப்பரங்குன்றத்தில் பிரச்சனை செய்தால் அனைத்து வீடுகளிலும் சூரசம்ஹாரம் செய்துவிட்டு, திருத்தணிக்கு அமைதியாக சென்றுவிடுவோம் என்று இந்த மாநாட்டின் மூலம் காட்டுகிறோம்" என்று எச்சரிக்கிறார்.

யார் பிரச்சனை செய்தது? யாருக்கு விடும் எச்சரிக்கை இது? பாரம்பரியமாக மத நல்லிணக்கத்தைக் கடைப்பிடிக்கும் திருப்பரங்குன்றத்து மக்கள் அனைவரையும் வீடு புகுந்து கொல்வோம் என்கிறாரா? இந்தப் பேச்சு வன்முறையையும் மதக் கலவரத்தையும் தூண்டும் பேச்சாகும். அரசியலமைப்புச் சட்டத்துக்கு எதிரானது. அண்ணாமலையின் இந்தப் பேச்சுக்கு எதிராக நீதிமன்றம் தானாக முன்வந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

"இந்து இனம்" என்றும் "இந்து இனமே எழுச்சி கொள்" என்றும் ஐ.பி.எஸ் படித்த அண்ணாமலை பேசுகிறார். இனம் (Ethnicity) என்பதும் மதம் என்பதும் ஒன்றல்ல. வழிபாட்டு முறை அடிப்படையில் இனம் வரையறுக்கப்படுவதில்லை. இந்த வேறுபாடுகூட தெரியாமல் 20 ஆயிரம் புத்தகங்களைப் படித்து என்ன தெரிந்து கொண்டாரோ?

"வட தமிழகத்தில் ஒரு குழந்தை திருநீறு பூசிக்கொண்டும் ருத்ராட்சம் அணிந்தும் பள்ளிக்குச் செல்ல முடியவில்லை" என்று அண்ணாமலை அங்கலாய்க்கிறார். இப்படி எங்கும் தடுக்கப்படவில்லை. அதேநேரத்தில் அந்தக் குழந்தை பள்ளிக்குச் செல்கிறதா? பஜனை மடத்திற்குச் செல்கிறதா? சமூகம் செயற்கை நுண்ணறிவு (ஏஐ) தொழில்நுட்பத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் நிலையில், மத்திய காலத்தில் இருந்தது போன்ற மதப் பழமைக்குள் சமூகத்தை கொண்டுசெல்ல சங்கிகள் துடிக்கின்றனர். அதற்கு இங்கு இடமில்லை என்பதை சங்கிகளுக்கு தமிழ்நாடு விரைவில் உணர்த்தும்.

## சங்கிகளுடன் சங்கமமாகிவிட்ட அதிமுக?





முருக பக்தர்கள் மாநாட்டில் ஒளிபரப்பான காணொளியில், "அதர்மம் அகற்ற.." என்று குரல் ஒலிக்கும்போது பேரறிஞர் அண்ணாவையும் பெரியாரையும் காட்டுகின்றனர். "போலி திராவிடத்தை வேட்டையாடிய சிங்கம்.." என ஒலிக்கும் போது, பெரியார், அண்ணா உள்ளிட்ட திராவிட இயக்கத் தலைவர்களைக் காட்டுகின்றனர். இதேபோன்று, "நாத்திக நரிகளை நறுக்கி.." என்று ஒலிக்கும் போதும் காட்டுப்படுகிறது.

இந்தக் கணொளி ஒளிபரப்பாகும் போது, அதிமுக முன்னாள் அமைச்சர்கள் செல்லூர் ராஜு, ஆர்.பி.உதயகுமார், கடம்பூர் ராஜு, ராஜேந்திர பாலாஜி, அமைப்புச் செயலாளர் வி.வி.ராஜன் செல்லப்பா உள்ளிட்டோர் மேடையில் அமர்ந்திருத்தனர். அவதூறுக் காட்சி ஒளிபரப்பாகும் போது அவர்கள் எந்தவித எதிர்வினையும் ஆற்றாமல் அமைதியாக இருந்தனர். இதற்கு கடும் எதிர்ப்பு எழுந்தது.

இதனையடுத்து, "முருக பக்தர்கள் மாநாட்டில் அரசியல் இருக்காது என்ற நம்பிக்கையில் பங்கேற்றோம். மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களுக்கும் அதிமுகவுக்கும் தொடர்பு இல்லை. மாநாட்டில் நாங்கள் பின் வரிசையில் இருந்ததால் பெரியார், அண்ணா குறித்த விமர்சன வீடியோவை பார்க்கவில்லை. அண்ணா, பெரியார் குறித்த அவதூறு வீடியோக்களுக்கு கண்டனம் தெரிவிக்கிறோம்" என்று முன்னாள் அமைச்சர் உதயகுமார் தெரிவித்துள்ளார்.

ஆனால் அடுத்த நாள் நடைபெற்ற ஆர்.எஸ்.எஸ் நிகழ்ச்சியில் பங்கேற்ற அதிமுக மூத்த தலைவர் வேலுமணி, ஆர்.எஸ்.எஸ் தலைவர் மோகன் பகவத்துக்கு வேல் கொடுத்து சிறப்பித்தார். சங்கிகளுடன் அதிமுக சங்கமமாகி விட்டதன் வெளிப்பாடுகள் என்பதை மறுக்க முடியுமா?

# ஈரான் அணு உலைகள் மீது அமெரிக்கா பேரழிவு குண்டு வீச்சு



மு.வீரபாண்டியன்

**ஈரான் யுரேனியம் செறிவூட்டுகிறது, அணு ஆயுதத் தயாரிப்பில் ஈடுபடுகிது எனக் கூறி, முன்அறி விப்புகள் ஏதுமின்றி இஸ்ரேல், ஈரான் நாட்டிற்குள் அத்துமீறி விமானங்கள் மூலம் குண்டு வீசி பெரும் தாக்குதலைத் தொடுத்தது.**

இதற்கும் தனக்கும் சம்பந்தம் இல்லை என டிரம்ப் கூறினார். இது பொய் என உலகம் அறியும்.

யுரேனியச் செறிவூட்டலைக் கைவிட வேண்டும், அணுச் சோதனைகளைக் கைவிட வேண்டுமென ஈரானை அமெரிக்கா மிரட்டியது. ஈரான் இதை ஒப்புக் கொள்ளவில்லை. பேரழிவு நிச்சயம் என்றது. ஈரான் மிரட்டலுக்கும் இணங்கவில்லை. யுரேனியச் செறிவூட்டல் என்பது எங்கள் மின்தேவைக்கு, உள்கட்டமைப்புக்கு அவசியம் அணு ஆயுதம் நோக்கம் இல்லை எனக் கூறியது ஈரான். இதை ஏற்க மறுத்த அமெரிக்கா, இஸ்ரேலைத் தூண்டி விட்டுத் தாக்கியது.

பதிலுக்கு ஈரான் நினைத்துப் பார்க்க முடியாத பதிலடி கொடுத்தது. அதன் ஏவுகணைகள் ஆச்சரியமூட்டின. ஈரானோடு இஸ்ரேல் மோத முடியவில்லை. உதவிக்கு அமெரிக்காவை அழைத்தது. அமெரிக்க அனைத்து உதவிகளையும் இஸ்ரேலுக்கு வழங்கியதோடு, தனது நவீன பம்பர் ரக விமானங்கள் மூலம் அமெரிக்கா, ஈரான் அணு ஆய்வு மையங்கள் மீது குண்டு வீசியது.

அனைத்துச் சர்வதேச விதிகளையும் மீறி அமெரிக்கா குண்டு வீசியது. இதைப் பெரும் பிழை, அநீதி என ஐநா கண்டித்தது.

ஈரான் அணு ஆயுதத் தயாரிப்பில் ஈடுபடவில்லை என உலக அணு ஆராய்ச்சி மையம் உள்ளிட்ட இதர ஐ.நா. நிறுவனங்கள் கூறிய பிறகும் அமெரிக்கா, ஈரானை அழிப்பதிலேயே குறியாக இருக்கிறது.

### அமெரிக்காவிற்கு ஈரான் மேல் ஏன் இந்தக் கோபம்?

மத்திய கிழக்கில் தனது அடியாள் இஸ்ரேல் நாட்டை விட, ஈரான் வலிமை பெற்று விட்டது. அடுத்து சீனாவுடன், ரஷ்யாவுடன் ஈரான் காட்டும் நெருக்கம், குறிப்பாக சீனாவின் மாபெரும் திட்டமான ஒன் பெல்ட், ஒன் ரோடு திட்டத்திற்கு ஈரான் முழு ஆதரவு காட்டுகிறது.

அடுத்து ஹவுதிகள், இஸ்புல்லா, ஹமாஸ் போன்ற விடுதலைக் குழுக்களுக்கும் ஈரான் காட்டும் ஆதரவு.

அதேபோல் மத்திய கிழக்கின் இஸ்லாம் நாடுகள் அமெரிக்காவிடம் அடி பணியும் போது, ஈரான் மட்டும் எதிர்த்து நிற்கிறது.

பாலஸ்தீன விடுதலைக்கு ஆதரவு வழங்குகிறது.

இஸ்ரேல், கோலான் குன்றுகள், மேற்குக் கரையிலிருந்து இஸ்ரேல் வெளியேறி பாலஸ்தீனத்தின் சுதந்திரத்தை அங்கீகரிக்க வேண்டும் என்கிறது. மேற்கண்ட இதுபோன்ற அரசியல் காரணங்களும், அத்துடன், 'பிரிக்ஸ்' முன்னெடுக்கிற புதிய உலகு ஒழுங்குமுறையை ஆதரிக்கிறது.

புதிய உலக ஒழுங்கு முறை என்பது டாலர் வர்த்தகப் பரிவர்த்தனையை உலகு மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

அந்தந்த நாடுகளின் ரூபாய் அல்லது ரூபிள், யென், பவுண்ட் என வர்த்தகம் நடத்த வேண்டும்.

உலகில் எந்த நாட்டின் ராணுவத் தளங்களும் பிற நாட்டில் கூடாது.

ஐநா சபையில் பாதுகாப்பு கவுன்சில் மாற்றி அமைக்கப்பட வேண்டும்.

இந்தியா போன்ற நாடுகள் இதில் இடம்பெற வேண்டும்.

ஐரோப்பிய நாடுகளின் கடைசிக் காலனிகூட உலகில் இருக்கக் கூடாது.

அனைத்தும் சுதந்திர நாடு என அறிவிக்கப்பட வேண்டும்.

எண்ணெய் வள நாடுகளில் புதிய வர்த்தக முறை தேவைப்படுகிறது.

எண்ணெய் வள நாடுகளில் உள்ள அமெரிக்கா, நேட்டோ ராணுவ முகாம்கள் கலைக்கப்பட வேண்டும்.

இப்படியான புதிய உலக ஒழுங்கு முறையை ஈரான் ஆதரிக்கிறது.

இவை மட்டுமல்ல, உலக வர்த்தகத்தில் 100க்கு 40 சதம் ஈரான் கடல் வழியைத்தான் பயன்படுத்த வேண்டும்.

இது சூயஸ் கால்வாய் போல் அமெரிக்க ஆதிக்கம் வேண்டும். இதற்கு ஈரான் இசைய வேண்டும். இதுபோன்ற பல நியாயமற்ற காரணங்களைக் கொண்டு ஈரானைத் தாக்குகிறது அமெரிக்கா. இஸ்ரேல் மூலம் போர் பதற்றங்களை தூண்டுகிறது அமெரிக்கா.

இது உலகப் போருக்கும், அணு ஆயுத போருக்கும் வழிவகுக்கும் என ரஷ்யா, சீனா எச்சரிக்கிறது.

ஈரான் எங்கள் நட்பு நாடு, ஈரானின் மின் வளர்ச்சிக்கு அணு கட்டுமானப் பணிகளில் ரஷ்யா ஈடுபடுகிறது. எங்கள் மீது தாக்குதல் என்றால் விளைவு கடுமையாக இருக்கும் என ரஷ்யா எச்சரிக்கிறது.

இதற்கிடையில் கொமேனியைக் கொல்வோம் என்கிறது இஸ்ரேல்.

அமெரிக்கா எங்களைத் தாக்கினால் பதிலடி என ஈரான் தலைவர் கூறினார்.

சதாம் உசேனை நரகத்திற்கு அனுப்பினோம், சதாம் நரகத்தில் தற்போது விளையாடுகிறார் என அமெரிக்கா அதிபர் பேசுகிறார்.

காசாவைச் சுடுகாடாக்கி, ஒரு லட்சம் மக்களை இஸ்ரேல் கொன்றது. அப்போது அமைதியாக இருந்த அமெரிக்கா, இஸ்ரேல் தாக்கப்பட்டவுடன் ஈரானை எச்சரிக்கிறது.

தற்போது உலகம் அமெரிக்காவைக் கேட்பது இதுதான்.

இஸ்ரேலிடம் அணுகுண்டு இருக்கலாம், ஈரானிடம் இருக்கக் கூடாதா?

இஸ்ரேலிடம் இருப்பது ஆதிக்கத்திற்கு, இரானிடம் இருப்பது தற்காப்பிற்கு.

ஈரானிடம் இருப்பதில் என்ன தவறு?

ரஷ்யாவிடம் இருக்கலாம், அமெரிக்காவில் இருக்கலாம், சீனாவிடம் இருக்கலாம், பிரிட்டன், பிரான்ஸ் நாடுகளிடம் இருக்கலாம், இந்தியா, பாகிஸ்தானிடம் இருக்கலாம்.

இவ்வளவு நாடுகளிடம் இருக்கும்போது, ஈரானிடம் இருக்கக் கூடாதா என்ன?

சரி, அணுகுண்டு இருந்தால் அதை மக்கள் தலையில் போடுவது யார்? போட்டது யார்? ஹிரோஷிமா, நாகசாகி யில் லட்சக்கணக்கான மக்களைக் கொன்றது யார்?

அமெரிக்கா பெரிய வலிமையான நாடு என்பதாலேயே, அனைத்து நாடுகளிலும் வெல்ல முடியுமா என்ன?

வியட்நாமிடம் தோற்றது யார்?

சரித்திரம் தந்த பாடத்தை அமெரிக்கா மறக்க முடியுமா என்ன?

விடுதலையை வெல்லும் ஆயுதம் ஏதும் உலகில் இல்லை!

பாலஸ்தீன விடுதலை வென்றே தீரும்!

இந்தியா இதை உரக்கப் பேச வேண்டும் மிகுந்த அரசியல் நேர்மையோடு!

---


# அமெரிக்க



த.லெனின்

நான் அரசியல் இல்லாத கவிதை
எழுத வேண்டுமானால்
பறவைகள் பாடுவதைக்
கேட்க வேண்டும்.
பறவைகள் பாடுவதை
நான் கேட்கவேண்டுமானால்
போர் விமானங்கள்
அமைதியாக இருக்க வேண்டும். என்றார்

பாலஸ்தீன கவிஞர்
மர்வான் மகோல்.




மத்திய கிழக்கில் அமெரிக்காவின் அடியாள், இஸ்ரேல் நடத்தும் இனப்படுகொலைகளைச் சொல்லி மாளாது. இரண்டாம் உலகப் போரில் ஹிட்லரின் இன வெறியாட்டங்களால் பாதிக்கப்பட்டனர் யூதர்கள். அவர்களை அன்பு பாராட்டி, அடைக்கலம் கொடுத்த பாலஸ்தீனர்களையே இன்று அடித்து விரட்டி வருகிறது. குழந்தைகள், பெண்கள் என்றும் பாராது 65 ஆயிரம் பேரை இனப் படுகொலை செய்த ஒரு போக்கிரி நாடு இஸ்ரேல்! திடீரென எந்த அறிவிப்பும் இன்றி ஈரான் மீது போர் தொடுத்தது. ஆனால் ஈரானோ திருப்பித் தாக்கி போர் என்றால் என்ன என்பதை இஸ்ரேலிய யூத மக்களையும் உணர வைத்திருக்கிறது.

### இஸ்ரேல் தாக்கியது ஏன்?

இஸ்ரேல் ஏன் இப்படி ஈரானைத் தாக்க வேண்டும்? அண்டை நாடுகளோடு ஏன் போர் புரிய வேண்டும்? இஸ்ரேலில் வெகு மக்களின் போராட்டம் சூடு பிடித்து வருகிறது. இது நெதன்யாகு ஆட்சிக்குப் பெரும் பதற்றத்தை உருவாக்கியுள்ளது. அங்கு ஜனநாயகம் சிதைக்கப்பட்டுள்ளது, நீதி பரிபாலனம் சீர்குலைந்து போய் உள்ளது. மிகச் சொற்ப இடங்கள் வித்தியாசத்தில்தான் இவர் வெற்றி பெற்றுள்ளார். எதிர்க்கட்சிகள் தொடர்ந்து போராடி வருகின்றன. மொத்தத்தில் ஒரு உள்நாட்டுப் போரை அது சந்தித்து வருகிறது. இந்தக் காரணத்தால்தான் தனது அரசியலுக்காக இந்தப் போரை நடத்துகிறார்.

தேர்தல்கள் வந்தால் இந்தியப் பாசிசச் சக்திகள் எப்படி போரை, பயங்கர வாதத்தைத் தனக்குப் பக்கபலமாக கொண்டு, அதன் மூலம் போலி தேச பக்தியை உருவாக்கி, தேர்தல் வெற்றியை எப்படிப் பெறுகிறார்களோ அப்படிப்பட்ட ஒரு நிலைதான் இஸ்ரேலில் ஆளும் நெதன்யாகுவுக்கும் இன்று ஏற்பட்டிருக்கிறது.

### ஆதிக்கம் செலுத்தும் அமெரிக்கா!

பல்லாயிரம் கிலோமீட்டர் தொலைவுக்கு அப்பால் உள்ள அமெரிக்காவிற்கு இங்கு என்ன வேலை? இந்தப் பகுதிகளில் உள்ள எண்ணெய் வளத்தைச் சுரண்டுவதற்கும், தனது உலக மேலாதிக்கத்தை நிலை நிறுத்துவதற்கும், இந்தப் பகுதிகளில் உள்ள நாடுகளில் சுமார் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட அமெரிக்கப் படை வீரர்களை நிரந்தரமாக வைத்துள்ளது.

அமெரிக்கா இந்தப் பகுதிகளில் 21 க்கும் மேற்பட்ட ராணுவத் தளங்களை அமைத்துள்ளது. ஓமன், ஐக்கிய அரபு எமிரேட்ஸ், சவுதி அரேபியா, கத்தார், பகரைன், குவைத், ஈராக், ஜோர்டான், சிரியா, சைப்ரஸ், லெபனான், காசா பகுதிகளில் இவை இருக்கின்றன. பல நாடுகளில் ஜனநாயக ஆட்சிகளைக் கவிழ்த்து தனக்கு ஆதரவான பொம்மை ஆட்சிகளை நிறுவி, தனது சுரண்டலை மேன்மேலும் அதிகரித்து வருகிறது.

இப்படித்தான் ஈராக் ரசாயன ஆயுதங்களை வைத்திருக்கிறது, என்று பொய்யான செய்தியைப் பரப்பி, போர் தொடுத்தது, அந்த நாட்டையே அழித்தது. சதாம் உசேனைப் பழி தீர்த்தது.

அதே வழியில்தான் இன்று ஈரான் அணு ஆயுதத்தைத் தயாரிக்கிறது என்று புதிய காரணம் கூறுகிறது. உண்மையில் ஈரானின் அணு சக்தி ஆய்வுகளைச் சர்வதேச அணுசக்தி முகமை பார்வை யிட்டுள்ளது. அதற்கான அனுமதியை ஈரான் எப்போதும் வழங்கி வருகிறது. ஆனால் இஸ்ரேல் ஒருபோதும் இதுபோன்ற அனுமதியைத் தருவதில்லை. இஸ்ரேலில் அணு ஆயுத உற்பத்தி செய்யப்படுகிறது. ஆனால் சர்வதேச அணு சக்தி முகமைச் சோதனையிட அனுமதிப்பதில்லை.


இஸ்ரேலுக்கு ஒரு நீதி ஈரானுக்கு இன்னொரு நீதியா? இதுதானா அமெரிக்க வழிபட்ட நீதி?

### பயங்கரவாத அமெரிக்கா!

இசுரேலின் பயங்கரவாத, பாலஸ்தீன் இன அழிப்பு போரில் உதவுவது, கிழக்காசியா பகுதியில் சீனாவிற்கு எதிராக வியூகம் வகுப்பதென இயங்கிவரும் அமெரிக்காவை நேரடிப் போரில் ஈரான் இழுத்திருக்கிறது என்றே கருத வேண்டும். ஈரான் பதிலடி தராது என நினைத்தது அமெரிக்கா நடத்திய தாக்குதலுக்கு எதிராக இந்தத் தாக்குதல் நடந்திருப்பது கவனத்திற்குரியது. அமெரிக்கா ஒன்றும் தோற்காத நாடு அல்ல. ஏற்கனவே பல போர்களில் அது படுதோல்விகளைச் சந்தித்து உள்ளது. வியட்நாமில் பேரழிவுகளைச் சந்தித்து தோற்றுப் போய் ஓடியது, ஆப்கானிஸ்தானில் தனது மூட்டை முடிச்சுகளை எல்லாம் கட்டிக் கொண்டு வெளியேறியது என்பதையெல்லாம் அறிந்துதான் உள்ளது ஈரான்.

அத்துடன் கடந்த 2020 ல் ஈராக்கிற்குச் சென்ற ஈரான் தளபதி சொலமானியை அமெரிக்கா படுகொலை செய்தது. இது அரச பயங்கரவாதமாகும். இது போன்று ஈரான் இப்போதும் அமைதி காக்கும் என்று அமெரிக்கா நினைத்தது. ஏனெனில் அப்போது ஈரான் தனது எதிர்த் தாக்குதலைத் தொடர்ந்து நடத்தவில்லை. ஆனால் ஈரான் இப்போது பதிலடி கொடுத்துள்ளது.

# முகமூடி கிழிந்தது!



### இஸ்ரேலோடு இணைந்த அமெரிக்கா!

அணு ஆயுத நாடாக மாறுவதைத் தடுக்கும் நோக்கம் என்று கூறிக்கொண்டு ஈரான் மீது இஸ்ரேல் கடந்த 13ந்தேதி முதல் தாக்குதல் நடத்தியது. இதற்கு ஈரானும் சளைக்காமல் கடுமையான பதிலடி கொடுத்தது. ஒரு வாரத்துக்கு மேலாக நீடித்த இந்தச் சண்டையில் அமெரிக்காவும் இணைந்தது. இஸ்ரேலுக்கு ஆதரவாக ஈரானின் அணுசக்தி தளங்களைக் குறிவைத்துத் தாக்கியது. ஈரானின் நட்டான்ஸ், இஸ்பகான் மற்றும் போர்டோ அணுசக்தித் தளங்கள் மீது அதிரடித் தாக்குதலை நடத்தியது. அதுவும் மலையைக் குடைந்து ஆழத்தில் அமைக்கப்பட்டுள்ள போர்டோ அணுசக்தித் தளத்தை பங்கர் பஸ்டர் குண்டுகள் மூலம் தாக்கி உலகையே அதிரச்செய்தது. இஸ்ரேல்ஈரான் இடையிலான போரில் அமெரிக்கா தலையிட்டுத் தாக்குதல் நடத்தியிருப்பது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஃபோர்டோவில் உள்ள முக்கியமான தளத்தில் முழு அளவிலான வெடிகுண்டுகள் வீசப்பட்டன. அனைத்து விமானங்களும் பத்திரமாகத் திரும்புகின்றன. இந்தச் சாதனையை நிகழ்த்திய அமெரிக்க வீரர்களுக்கு எனது வாழ்த்துகள். உலகில் இதைச் செய்யக்கூடிய ராணுவம் வேறு எந்த நாட்டிலும் இல்லை. அமைதிக்கு இதுவே சரியான நேரம்! இந்த விஷயத்தில் நீங்கள் காட்டிய கவனத்திற்கு நன்றி'' என்றும் கூறியுள்ளார் டிரம்ப்.

ஓமனில் அடுத்த சுற்று அமெரிக்க ஈரான் பேச்சுவார்த்தைகளுக்கு இரண்டு நாட்களுக்கு முன்பு, ஈரானைத் தாக்க அவர்கள் முடிவு செய்துள்ளனர். ஒரு முகம் பேச்சுவார்த்தை நடத்த, ஒரு முகம் போர்த் தாண்டவம். இதுதான் அமெரிக்காவின் ஆக்கிரமிப்புக் கொள்கையின் வெளிப்பாடு.

### அமெரிக்க நிலையில் மாற்றம்!

ஒபாமாவின் ஒப்பந்தத்தை விட தனது ஒப்பந்தம் சிறந்தது என்று கோமாளி டிரம்ப் கூற வேண்டியிருப்பதால், அவருக்கு இது மிகவும் அவசியமானதாகக் கருதப்படுகிறது. எனவே, அமெரிக்காவின் நிலைப்பாடு ஈரானில் அணுசக்தி செறிவூட்டலுக்கு வரம்பு விதிக்க வேண்டும் என்ற நிலையிலிருந்து, அணுசக்தி செறிவூட்டலையே மேற்கொள்ளாமல், அதன் முழு அணுசக்தி திட்டத்தையும் முறியடிப்பதாக மாறியது. டிரம்பின் சொந்த வார்த்தைகளில் சொல்வதானால் நிபந்தனையற்ற சரணடைதலாகும். ஆனால் ஈரான் இதற்கு உடன்படவில்லை.

ரஷ்யாவின் முன்னாள் அதிபரும், புதினின் நெருங்கியவருமான மெதவேவ் ஈரான் குறித்து 10 குறிப்புகளை வெளியிட்டார். அதில் ஈரானின் அணு உலைகளின் கொதிகலன்கள் மீது அமெரிக்காவின் தாக்குதலால் எவ்விதப் பாதிப்பும் ஏற்படவில்லை, அணு எரிபொருள் பாதுகாப்பாக அகற்றப்பட்டுவிட்டன. இனி ஈரானின் அணு ஆராய்ச்சி தடைபடாமல் நடைபெறும். ஆயுத உற்பத்திக்கான உதவிகளை நட்பு நாடுகள் செய்யத் தயாராக உள்ளன என ட்விட்டரில் கூறியுள்ளார்.

### அமெரிக்கத் தளங்கள் மீது தாக்குதல்

மத்திய கிழக்கில் உள்ள அமெரிக்க ராணுவத் தளங்கள் மீது ஈரான் ஏவுகணைத் தாக்குதல் நடத்தியுள்ளது. மத்திய கிழக்கில் அமெரிக்க ராணுவத் தளங்களைக் குறிவைத்து ''பஷாரத் அல் ஃபத்'' என்ற பெயரில் இந்தத் தாக்குதலை ஈரான் நடத்தி உள்ளது.

இப்பிராந்தியத்தில் உள்ள மிகப்பெரிய அமெரிக்க ராணுவ நிறுவங்களில் ஒன்றான கத்தாரில் உள்ள அல் உடேத் விமானத் தளம் உட்பட பல தளங்களைக் குறிவைத்து ஈரான் பாலிஸ்டிக் ஏவுகணைகளை ஏவித் தாக்கியுள்ளது.

கத்தார் மீது ஆறு ஏவுகணைகளும், ஈராக்மீது ஒரு ஏவுகணையும் ஏவப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்தத் தாக்குதல்கள் இரண்டுமே அந்நாடுகளில் நிறுத்தப்பட்டுள்ள அமெரிக்கப் படைகளை இலக்காகக் கொண்டதாகும்.

இதற்கு நேர்மாறாக, ஈரானில், விரிவான எதிர்ப்புப் போராட்டங்களின் வரலாறு இருந்தபோதிலும், பெரிய எழுச்சி எதுவும் இப்போது நடைபெறவில்லை. உண்மையில், பல எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தங்கள் நாட்டிற்கு எதிரான அமெரிக்காவின் வான்வழித் தாக்குதல்களுக்கு தங்களது தெளிவான எதிர்ப்பைக் காட்டியுள்ளனர், முன்னாள் மன்னரின் நாடுகடத்தப்பட்ட மகன் ரெசா பஹ்லவி, இப்போதைய ஆட்சியைக் கவிழ்க்க ஒரு கிளர்ச்சிக்கு அழைப்பு விடுத்தார். கடைவிரித்தார். ஆனால் கொள்வாரில்லை.

ஒரு வழியாகப் போர் நிறுத்தத்தை அறிவித்துள்ளது ஈரான். ஆனால் ஈரான் மீதான அமெரிக்க/இஸ்ரேலியத் தாக்குதல்களுக்கச் சட்டப்பூர்வ நியாயம் உள்ளதா? என்றால் அதுதான் இல்லை!

**தொடர்புக்கு: 9444481703**

# சர்வதேசச் சண்டியர் அமெரிக்காவும் சாவுகளின் குத்தகை நாடு இஸ்ரேலும்



ஆர்.ராமானுஜம்

**கெட்ட போரிடும் உலகின் ஒரு பகுதியைக் கண்டு ஆத்திரம், அழுகையோடு, இது மாறாதா, பிணக் குவியல் தணியாதா என ஆழ்ந்த கவலையுடன் நகர்கிறது உலக மக்கள் திரள்.**

ஏகாதிபத்தியம்என்னும்சொற்றொடரே இடதுசாரிகளின் கண்டுபிடிப்பு என்று ஏளனம் செய்பவர்களின் தகவலுக்காக : ''ஈரானின் மதத் தலைவர் ஆயத்துல்லா கமேனி கொல்லப்படும் நாள் வெகு தொலைவிலில்லை. ஈரான் உடனடியாக சரணாகதி அடைய வேண்டும்'' என அமெரிக்க குடியரசுத் தலைவர் டொனால்ட் ட்ரம்ப் கூச்சலிடுகிறார். சொல்லி முடித்த 2 நாட்களில் அமெரிக்கா ஈரானின் அணு உலைகளின் கட்டுமானங்கள்மேல் குண்டு வீசித் தாக்குதல் செய்கிறது. மனச்சாட்சியுள்ள மனிதக் குரலின் கேள்வி இது. அமெரிக்கா ஈரான் இரண்டும் அண்டை நாடுகளா? இவர்களுக்கிடையில் வர்த்தகப் பிரச்சினை ஏற்பட்டதா? அமெரிக்கா மீது ராணுவத் தாக்குதலை ஈரான் நிகழ்த்தியதா? பின் ஏன் ட்ரம்ப் இப்படிக் கொக்கரிக்கிறார்?

இந்தக் குரல் ''சர்வ தேசச் சண்டியர் நான்தான் என அறிவிக்கும் அபாயச் சத்தம் கேட்கிறது. என் அடிமை இஸ்ரேல். அந்த நாட்டோடு யார் மோதினாலும் நான் உங்கள் நாட்டை அழிப்பேன்.'' இந்தக் குரலைத்தான், ஏகாதிபத்தியத்தின் சண்டியர்த்தனம் என்கிறோம்.


இந்தப் பதற்றமான சூழலில், ஒன்றைக் கூர்ந்து கவனியுங்கள். சமீப காலங்களில், இஸ்ரேல் மீது ஈரான் எந்த வழியிலாவது தாக்குதல் தொடுத்ததா? ட்ரோன்கள் பறக்க விட்டதா? ஈரானின் அணுசக்தி தயார் நிலையே தங்களுக்குப் பாதுகாப்பற்ற நிலையைக் கொண்டு வந்து விட்டது என இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு கூவுகிறார். சர்வதேசக் கோட்பாடுகளின் படி, குறிப்பாக ஐக்கிய நாடுகள் பாதுகாப்புக் கவுன்சில் சட்டப் பிரிவு 51 இன் படி, ஒரு நாடு எவ்விதக் காரணத்திற்காகவும், மற்றொரு சுதந்திர நாட்டின் மீது 'முகாந்திரம் இன்றி'ப் போருக்குப் போக முடியாது. இதன்படி இஸ்ரேலின், அதன் பண்ணையார் அமெரிக்காவின் இப்போதைய போர் நடவடிக்கைகள் எல்லாம் போர்க்குற்ற நடவடிக்கைகள் மற்றும் சுதந்திர நாட்டொன்றின் மீது நடத்திய படையெடுப்பாகும்.

இரண்டாம் உலகப் போர் முடிந்து உலகம் போர்க் காயங்களின் வலியால் முனகி, மூச்சு விட்டுக் கொண்டிருந்த போது, அமெரிக்க ஏகாதிபத்தியம் தன் அணுகுண்டு வலிமையைக் காட்டி உலகை அச்சுறுத்தவே ஜப்பானின் ஹிரோஷிமா, நாகசாகி நகரங்களின் மீது ஹைட்ரஜன் குண்டுகளை வீசி லட்சக்கணக்கானோர் வாழ்வைப் பறித்து உலகிற்குத் தன் ''கொலைகாரக் கருவிகளின் கையிருப்பை, வலிமையைப்'' பறைசாற்றியது.

இந்த 2025 ஜூன் நிகழ்வும், அதே சர்வ நாசப் பாதகத்தின் மறு செயல் நிகழ்வு போலவே இருக்கிறது. ஏகாதிபத்திய எதிர்ப்புக் கூட்டமைப்பு ஒன்று உருவாகியே தீரவேண்டிய நிலையில் உலகம் இன்றுள்ளது. ஒருகாலத்தில் வளரும் நாடுகளின் நண்பர்களாக நாசர் (எகிப்து) ஃபிடல் காஸ்ட்ரோ (கியூபா) இந்திரா காந்தி (இந்தியா) அணி சேர்ந்து சர்வதேசப் பிரச்சினைகளில் ஒரு திடமான நம்பிக்கை வழி காட்டினர். ஐ.நா சபையின் தீர்மானங்களும் ஓரளவு கவனத்தில் கொள்ளப்பட்டன. ஆனால், இன்றோ, அப்படி ஒரு கூட்டமைப்பும் இல்லை. பாதுகாக்க ஓடி வரும் சோவியத் ஒன்றியமும் இல்லை.

இஸ்ரேலின் எல்லாப் போர்க் குற்றங்களும், படையெடுப்பும், இனப் படுகொலைகளும் நில அபகரிப்பும் தங்கு தடையின்றி நடக்கிறது. இஸ்ரேலின் ஆக்ஸிஜன் வாஷிங்டன், இஸ்ரேலின் ஆக்ஸிஜன் இங்கிலாந்து, குறிப்பாக வணிகக் கொள்ளைக்காகவே அமெரிக்காவை எதிர்த்து முணுமுணுக்கக் கூடத் தயாரில்லாத வளைகுடா இஸ்லாமிய நாடுகள். இதுவே இஸ்ரேலின் தெம்பு மருந்து.

நம்முடைய ஊடக வாசிப்பில், தெரிதலில் நாம் அறிந்தது : இஸ்ரேலின் பன்முகப் பேரழிவுத் தாக்குதலில் காஸாவில் சுமார் 60,000 + சாமானியர்கள் கொல்லப்பட்டுள்ளனர். உலகின் பல நாடுகள் உரத்த குரலில் இதைக் கண்டித்தும் சிறிதும் சட்டை செய்யாது தனிச் சுதந்திர நாடு எனப் பாலஸ்தீனம்



அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ''அதை நிர்மூலமாக்குவோம், காஸாவை இஸ்ரேலுடன் இணைப்போம் ; ஆகவே அங்கிருந்து வெளியேறுங்கள்'' என இஸ்ரேல் ராணுவ அமைச்சர் கொக்கரிக்கிறார். இதன் பின்புலத்தில் என்னதான் உள்ளது?

பாலஸ்தீனம் என்ற சிறிய சுதந்திர நாட்டிற்குத் தனியாகப் பெருமளவில் படைபலம் இல்லை. ஆயுதங்களை வைத்திருப்பவர்கள் முன்னாள் பாலஸ்தீன விடுதலை அமைப்பைச் சேர்ந்தவர்கள் மற்றும் ஹமாஸ் தீவிரவாதக் குழுவினர் மாத்திரமே.

சௌதி அரேபியா உலகில் ராணுவச் செலவிற்கு அதிகம் செலவிடும் நாடுகளில் நான்காம் இடத்தில் உள்ளது. அதன் எண்ணெய் வயல்களில் பொருளாதார முதலீடுகள் அமெரிக்கா, இங்கிலாந்து, ஜெர்மனி போன்ற நாடுகளின் மிகப் பெரும் கார்ப்பரேட் கம்பெனிகளால் நிரப்பப்பட்டுள்ளன. பாலஸ்தீனத்திற்காக

தொடர்ச்சி 10 ஆம் பக்கம்

# தமிழ்நாடு அரசு மாங்காய் கொள்முதல் செய்திட தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் வலியுறுத்தல்

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் பி.எஸ்.மாசிலாமணி விடுத்துள்ள அறிக்கை வருமாறு :

ஆந்திரா போன்று தமிழ்நாடு அரசின் மானியத்துடன் மாங்காய் கிலோ ரூபாய் 20 விலையில் கொள்முதல் செய்திட வேளாண் வணிகத்துறையை ஈடுபடுத்திட தமிழக முதல்வர் அவசர நடவடிக்கை எடுத்திட வேண்டும். மாங்காய் விளைவித்த விவசாயிகள் நடப்பாண்டு உரிய நியாயமான விலையில் விற்பனை செய்திட வாய்ப்பில்லாமல் வேதனையில் உள்ளனர்.

கடந்த சில ஆண்டுகளாக மாங்காய் விளைச்சல் மிக மிகக் குறைந்து விவசாயிகள் பாதித்தனர். தற்பொழுது விளைச்சல் அதிகரித்துள்ள நிலையில், கட்டுப்படியான விலை இல்லாது அவதிப்படுகின்றனர்.

இந்தியாவின் 7 மாநிலங்களில் அதிகமான மா சாகுபடி உள்ள நிலையில், விளைச்சலில் 6வது இடத்தில் தமிழ்நாடு உள்ளது. மாங்காய் விளைச்சலுக்கு ஏற்ற பருவ நிலைகள் உள்ளதால், நடப்பாண்டு கூடுதல் விளைச்சல் கண்டிருக்கிறது.

தமிழ்நாட்டில் மாம்பழக்கூழ் தயாரிக்கும் ஆலைகள் தனியார்களிடம் மட்டுமே உள்ளன. கிருஷ்ணகிரியில் மட்டுமே 24 ஆலைகள் உள்ளன. சீரான முறையில் மாங்காய்கள் விளையும் ஆண்டுகளில் அருகாமை மாநிலங்களான கர்நாடகம், ஆந்திராவிலிருந்து கிருஷ்ணகிரிக்கு வந்து மாம்பழக் கூழ் தயாரிக்கும் ஆலைகளின் தேவைக்காகக் கொள்முதல் செய்வார்கள். இங்கிருக்கும் ஆலைகளும் கொள்முதல் செய்யும் பொழுது விலை சீராக விவசாயிகளுக்குக் கிடைத்து வந்தது. ஆனால் நடப்புப் பருவத்தில் தென்மாநிலங்களிலும் கூடுதல் விளைச்சல் கண்டுள்ள நிலையில், வாங்குவார் இன்றி கிலோ 4க்கும் கீழே படுபாதாளத்திற்குச் சென்று விட்டது. எனவே மாங்காய்களைப் பறிக்காமலேயே விட்டுவிட்டனர்.

ஒரு டன் சராசரி 25 ஆயிரம் ரூபாய் விலையில் கடந்த காலங்களில் கொள்முதல் செய்யப்பட்டு வந்தது. இந்த நிலையில் ஆந்திர மாநில அரசு மானியமாக கிலோ ஒன்றுக்கு 4 ரூபாய் கொடுத்து, வியாபாரிகள் மற்றும் மாம்பழக்கூழ் ஆலைகள் கிலோ ரூபாய் 12 விலையில் விவசாயிகளிடம் கொள்முதல் செய்திட வேண்டுமென உத்தரவிட்டு நடைமுறைப்படுத்தி விவசாயிகளைப் பாதுகாக்கக் கூடிய இடைக்கால ஏற்பாடு செய்துள்ளது வரவேற்கத்தக்கதாகும்.

எனவே தமிழக அரசு வேளாண் ஒழுங்குமுறை விற்பனை அலுவலர்களைக் கொண்டு மாங்காய் விளையும் பகுதிகளில், அரசே நேரடியாக மாங்காய்களைக் கொள்முதல் செய்து, கூழ் தயாரிக்கும் ஆலைகளுக்குக் கொடுத்திடும் நடவடிக்கைளை எடுத்திட வேண்டும். அரசின் மானியத் தொகையுடன் குறைந்தபட்சம் கிலோ 20 ரூபாய் நிர்ணயம் செய்து கொள்முதல் செய்திட வேண்டும்.

இதுவரை மாங்காய்களைப் பறித்து விற்பனை செய்ய முடியாத விவசாயிகளுக்கு உரிய இழப்பீடு வழங்கிட வேண்டும்.

கூடுதல் மா சாகுபடி உள்ள இடங்களில், அரசு குளிர்ப்பதனக் கிடங்குகளை அமைத்துத் தர வேண்டும். தமிழ்நாடு அரசு எதிர்காலத்தில் கூழ் தயாரிக்கும் ஆலைகளைத் தொடங்கிட வேண்டும். இதுதான் விவசாயிகளுக்கு உரிய கட்டுப்படியான விலை கிடைக்கும் ஏற்பாடாகும்.

தமிழ்நாடு அரசே மாம்பழக்கூழ் தயாரிக்கும் ஆலைகளைத் தொடங்கிட வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறோம் என்று அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# முருக பக்தர்களைத் தவறாக வழிநடத்தும் மதவெறி அரசியல் மாநாட்டிற்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தனது அறிக்கையில் கூறியிருப்பதாவது:

வி.டி.சாவர்க்கரின் சிந்தனையில் பிறந்த 'இந்துத்துவ' அரசியல் கருத்தியலை அடிப்படையாகக் கொண்டு செயல்படும் ஆர்.எஸ்.எஸ் என்கிற ராஷ்டிரிய சுயம் சேவக் தன்னை அரசியல் அமைப்பாகக் காட்டிக் கொள்வதில்லை. பகுத்தறிவு, சுயமரியாதை, பொதுவுடமைக் கருத்துக்கள் வலிமை பெற்றுத் திகழ்வதால் தமிழ்நாட்டில் ஆர்.எஸ்.எஸ் வெளிப்படையாகச் செயல்பட முடியவில்லை. இந்நிலையில் கடந்த 1981–82 ஆம் ஆண்டுகளில் மீனாட்சிபுரத்தில் ஏற்பட்ட மதமாற்ற நிகழ்வையொட்டி, ஆர்.எஸ்.எஸ், இந்து முன்னணி என்ற பெயரில் புதிய அமைப்பாக உருவானது. இதன் அமைப்பாளர் ராமகோபாலன் வாழ்நாள் முழுவதும் பல்வேறு இடங்களில் மோதல்களை உருவாக்கி வந்ததையும், இதனால் ஏற்பட்ட பேரழிவுகளையும் தமிழ்நாட்டு மக்கள் நன்கறிவார்கள்.

வட மாநிலங்களில் ஆர்.எஸ்.எஸ் கையில் எடுத்த இதிகாச நாயகன் ராமர், அரசியல் ஆதாயம் தேட கை கொடுத்தது போல், தமிழ்நாட்டில் பயன்படவில்லை என்பதால், அவர்கள் தேடிக் கண்டுபிடித்த கருவி, 'முருக கடவுள்'.

கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னர், ஈரோடு மாவட்டத்தில் சிறுபான்மைக் குடும்பம் ஒன்று, அவர்களது வீட்டுக்குள் வழிபட்டு வந்ததைப் பலவந்தமாகத் தடுத்து, பெரும் பதற்றச் சூழலை உருவாக்கியது. அண்மையில், வழிவழியாக அமைதியாக வாழ்ந்து வரும் திருப்பரங்குன்றம் பகுதியில் 'முருகனின்' பெயரால் பெரும் பதற்றத்தை உருவாக்கி, அதனை அரசியல் களத்தில் இறக்கிவிட்டுள்ளனர்.

இதன் தொடர்ச்சியாக 22.06.2025 அன்று மதுரையில் நடந்த முருக பக்தர்கள் மாநாடு மதவெறி அரசியலை அப்பட்டமாக வெளிப்படுத்தியுள்ளது. இதன் விளைவுகளின் ஆபத்தை உணர்ந்த அரசு அனுமதி கொடுக்கத் தயங்கிய போது, உயர் நீதிமன்றம் சென்று அனுமதி பெறப்பட்டது. "முருக பக்தர்கள் மாநாட்டில் அரசியல் கருத்துக்கள் இடம் பெறக் கூடாது" என்ற அறிவுரை வழங்கி, மாநாடு நடத்த அனுமதி வழங்கியது. நீதிமன்ற அறிவுரையை எள்முனையளவும் மதிக்காமல் அவமதிக்கப்பட்டுள்ளது.

ஆனால், என்ன நடந்தது, முருக பக்தர்கள் மாநாட்டில், சனாதனக் கருத்துக்களை ஆதரிக்கும் சந்நியாசிகளும், ஆதீனங்களும் கலந்து கொண்டனர். இவர்கள் அனைவரும் முருகனை மட்டுமே ஏற்றுக் கொண்ட பக்தர்களா? என்ற வினாவும் எழுகிறது. அதே சமயம், உயர் நீதிமன்றத்தின் அறிவுரையை முற்றிலும் நிராகரிக்கும் முறையில் ஆர்.எஸ்.எஸ், பாஜக கட்சித் தலைவர்கள் பங்கேற்றனர். அவர்களின் உரை முழுவதும் அரசியல் சார்ந்தே அமைந்திருந்தது. பாஜகவின் கூட்டணிக் கட்சித் தலைவர், ஜனசேனா கட்சி நிறுவனர், ஆந்திர மாநில துணை முதலமைச்சர் என்ற நிலையில் பங்கேற்று, மதச்சார்பற்ற அரசின் கொள்கையைச் சிறுமைப் படுத்தியுள்ளார். மாநாட்டு நிகழ்வுகள் ஆரம்பம் முதல் கடைசி வரை, தமிழ்நாட்டில் அடுத்து வரும் 2026 சட்டமன்றத் தேர்தலில் ஆதாயம் தேடும் நோக்கம் என்பதைப் பட்டவர்த்தனமாக வெளிப்படுத்தியது. மாநாட்டின் தீர்மானங்களில் 'இந்து வாக்கு வங்கி உருவாக்குவது' உட்பட பல தீர்மானங்கள் தேர்தல் ஆணையம் வகுத்தளித்துள்ள நடத்தை விதிகளை அத்துமீறியுள்ளன. உறுதி மொழி வாசகங்கள் "முருகனின் பெயரால் கலகங்களையும், மோதல்களையும் உருவாக்கும் தீய உள்நோக்கம் கொண்டிருப்பதைத் தமிழ்நாட்டு மக்கள் எளிதில் புரிந்து, உணர்ந்து மதவெறி அரசியலை நிராகரிப்பார்கள் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயற்குழு உறுதியாக நம்புகிறது.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்கிற தொன்மை மரபும், தமிழர் சமூக வாழ்வு மதச்சார்பற்ற மரபில் வளர்ந்துள்ளது என்பதற்கு மறுக்க முடியாத சான்றுகளைத் தரும் கீழடி ஆய்வும் தமிழர்களின் தனித்துவப் பண்புகளையும், கலாச்சாரத்தையும் முன்னெடுத்து வரும் தமிழகம் மதவெறி அணி திரட்டலை அனுமதிக்காது. தமிழ்நாட்டின் சமூக அமைதிக்குக் குந்தகம் செய்யும் இந்து முன்னணியின் பெயரால் ஆர்.எஸ்.எஸ், பாஜகவின் ஜனநாயக விரோத அரசியல் நடவடிக்கைகளை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயற்குழு வன்மையாகக் கண்டிக்கிறது என்று மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# இஸ்ரேல், அமெரிக்காவைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்

ஈரான் மீதான இஸ்ரேல், அமெரிக்காவின் கூட்டு நடவடிக்கைகளைக் கண்டித்து, விருதுநகரில் இடதுசாரி கட்சிகளின் சார்பில், சிபிஐ நகரச் செயலாளர் த.பாண்டியன், சிபிஎம் நகரச் செயலாளர் ஜெயபாரத் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் சிபிஐ மாநிலக் குழு உறுப்பினர் பாலமுருகன், மாவட்ட துணைச் செயலாளர் சமுத்திரம் கண்டன உரையாற்றினார்கள். சிபிஐ வடக்கு ஒன்றியச் செயலாளர் சக்கணன் முன்னிலை வகித்தார். விருதுநகர் வடக்கு ஒன்றிய துணைச் செயலாளர் மாரியப்பன், நகரப் பொருளாளர் மாரீஸ்வரி, மணிமுத்து, மூத்த தோழர் காளியப்பன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



சர்வதேசச் சண்டியர் அமெரிக்காவும்...
9 ஆம் பக்கத் தொடர்ச்சி

ஏகாதிபத்தியம், அதன் மேற்காசியக் கிளை இஸ்ரேலை எதிர்த்துக் குரலெழுப்பியே ஆக வேண்டும்.

ஏகாதிபத்தியத்தை (அதன் ஒட்டுவால் அடிமை இஸ்ரேலை) எதிர்க்கப் பெரும் வளமுள்ள சௌதி, கத்தார், பஹ்ரைன் போன்ற நாடுகள் தயாராயில்லை. இஸ்ரேல் காஸா போர் நிறுத்தப்பட வேண்டும் என்னும் எளிய அமைதித் தீர்மானத்திற்குக் கூட விஸ்வகுரு ஆளும் இந்தியா ஆதரவு தரவில்லை. கண்முன்னே படுபாதகம், சர்வநாசம் நிகழ்த்தப்படும் போது 'நடுநிலை' என்பது, பாதகம் செய்பவர்களுடன் கைகோர்ப்பதேயன்றி வேறொன்றில்லை. மோடி அரசின் நிலைப்பாடு இத்தகையதே!

மற்றொன்று, மன்னராட்சி, ஆதிக்க ஆட்சி நடத்தப்படும் வளைகுடா நாட்டு ஆட்சியாளர்கள், தங்கள் நாட்டில் அரசியல் வெகுஜன இயக்கங்கள் முளைப்பதை விரும்புவதும் இல்லை. அது அவர்களின் அதிகாரத்தைப் பின்னொரு நாள் தட்டிக் கேட்கும் அபாயம் உள்ளடங்கியது என்றும் நினைக்கின்றார்கள்.

பாலஸ்தீனம் என்னும் நிலப் பரப்பு, பாலஸ்தீனியர்களின் சொந்தச் சுதந்திர நாடு இவை பறிக்கப்படக் கூடாது என நினைத்தால், உலகின் மனச்சாட்சி கொண்ட மக்கள்திரள் மத, இன வேறுபாடின்றி

பாலஸ்தீனத்தில் தினசரி சாவு எண்ணிக்கை ஆயிரங்களில் கூடிக்கொண்டே போவதைத் தடுக்காது விட்டு விட்டால் ஒரு இனமே, ஒரு நாடே மொத்தமாய் அழிந்து போகும் பேராபத்து நேரிடும். இஸ்ரேலின் நடவடிக்கை அண்டை நாட்டுடன் ஆன போர் அல்ல. குழந்தைகளின் பள்ளிக் கூடங்கள், மசூதிகள், மருத்துவமனைகள், குடியிருப்புக் கட்டிடங்கள் என எல்லாவற்றையுமே சுக்குநூறாக்கும் இஸ்ரேலின் செயல்" இன அழித்தொழிப்பே.

சியோனிஸ்ட் கொலை வெறியர்களையும், அதற்கு இடைவிடாது எல்லா உதவிகளையும் செய்யும் சர்வதேசச் சண்டியர் அமெரிக்காவையும் எதிர்கொள்ள உலக ஜனநாயகச் சக்திகள் முழுமையாகக் கரத்தால், கருத்தால் இணைந்து நிற்க வேண்டிய தருணமிது. வீடு பற்றி எரியும் போது நடுநிலை வகிக்கச் சொல்லும் 'விஸ்வகுரு' வின் வார்த்தைகளை நாம் புறம் தள்ளுவோம்.

உரத்துச் சொல்வோம் நாம் : "பாலஸ்தீனியர்கள் அநாதைகள் அல்ல!!"

# ஆன்மீகக் கதாகாலட்சேபம் செய்து வரும் முகுந்த்மணி சிங் யாதவ் மீது பார்ப்பனர்கள் தாக்குதல்!

பொதுவாக சனாதனம் இந்து மக்களிடையே சமத்துவத்தைத் தரும் என்று தொடர்ந்து பேசி வருகின்றனர். ஆர்.எஸ்.எஸ்ஸும், பாஜகவும் மனுநீதிதான் மானுட நீதி என்பதைப் போல பேசி வருகின்றன. உண்மையில் சாதி ஏற்றத் தாழ்வு நீதிதான் மனுநீதி என்பதைப் பல காலமாக முற்போக்காளர்களும், இடதுசாரிகளும் எழுதியும், சொல்லியும் வருகின்றனர்.

கோவில் கருவறைக்குள்ளோ, பூஜை செய்யவோ மற்ற சாதிகளுக்கு எந்தக் காலத்திலும் அனுமதி இல்லை. இப்போது கதாகாலட்சேபம் செய்வது கூடத் தங்களுக்கு எதிரானது அது தங்கள் வருமானத்தைப் பாதிக்கும் என்று கருதி உ.பியில் பெரும்பான்மைச் சமூகமாகக் கருதப்படும் யாதவக் குலத்தைச் சார்ந்தவர்களையே கடுமையாகத் தாக்கி உள்ளனர். அத்துடன் அவர்களது பொருட்களையும் பறித்துத் திருடிச் சென்றுள்ளனர்.

உத்தரபிரதேசத்தில் கடந்த 15 வருடங்களாக கதாகாலட்சேபம் செய்து வருபவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதனை பார்ப்பனர் அல்லாதார் செய்யக் கூடாது என அவருக்கு மிரட்டல் விடுக்கப்பட்டுத் தாக்குதல் நடைபெற்றது.

உ.பி.யின் அவுரய்யா நகரில் வசிப்பவர் முகுந்த்மணி சிங் யாதவ். இவர் தனது குழுவினருடன் கடந்த 15 வருடங்களாக உ.பி முழுவதும் கதாகாலட்சேபம் செய்து வருகிறார். இதற்கு நல்ல வரவேற்பும் உள்ளது. இச்சூழலில் அவர் மேற்கு உ.பி.யின் எட்டாவா மாவட்டம், தந்தர்பூர் கிராமத்தில் கடந்த 2 வாரங்கள் கதாகாலட்சேபம் செய்ய அழைக்கப்பட்டுள்ளார்.

கடந்த சனிக்கிழமை இரவு ஒரு கும்பல் திடீரென இவரைச் சூழ்ந்து கடுமையாகத் தாக்கியது அவரது தலையை மொட்டை அடித்து, அவமானப்படுத்தி விரட்டியுள்ளது. அவரது உதவியாளர் சந்த் குமார் யாதவும் அப்போது தாக்கப்பட்டார். இது தொடர்பான வீடியோ பதிவு சமூக வலைதளங்களில் பரவி நாடு முழுவதும் பெரும் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தி உள்ளது.

சம்பவம் குறித்து முகுந்த்மணி சிங் அளித்த புகாரில், "எனது சமூகம் என்னவென்று கேட்டு, நான் பிராமணர் இல்லை என்று உறுதி செய்த பிறகு அக்கும்பல் என்னைத் தாக்கியது. என்னிடம் இருந்த ரூ.25,000 ரொக்கம் மற்றும் தங்கச் செயினைப் பறித்துக் கொண்டது" என்று கூறியுள்ளார்.

இந்தச் சம்பவத்தை ஆளும் பாஜகவோ அதன் முதல்வர் யோகியோ இதுவரைக் கண்டிக்கவில்லை. மாற்று மதத்தினர் என்றால் தான் புழுதி பறக்க புல்டோசர்கள் போகும்.

உ.பியில் நடைபெறுவது சட்டத்தின் ஆட்சி அல்ல மனுதர்ம ஆட்சி என்பதை இந்நிகழ்ச்சி மீண்டும் உறுதிப்படுத்தி இருக்கிறது.

த.லெ

# 100 நாள் வேலைத் தொழிலாளிகளின் வயிற்றில் அடிக்கும் பாஜக அரசு





ந.சேகரன்

**இந்தியாவில் வறுமையைக் குறைக்கவும், கிராமப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் இடதுசாரிகள் குறைந்தபட்ச செயல் திட்டத்தின் மூலம் கொடுத்த அழுத்தத்தால் அப்போது ஒன்றியத்தில் ஆட்சி புரிந்த மன்மோகன் சிங் தலைமையிலான காங்கிரஸ் கூட்டணி அரசால் 2005 இல் சட்டமாக்கப்பட்டு 2006 பிப்ரவரி மாதத்தில் இருந்து அமலில் கொண்டுவரப்பட்ட திட்டம்தான் மகாத்மா காந்தியின் தேசீய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம்.**

இந்தத் திட்டத்தின் மூலம் 100 நாட்கள் வேலை உறுதியாகக் கிடைக்கும் என்ற நோக்கத்தில் செயல்படுத்தப்பட்டு வந்தது. இந்தத் திட்டம் தொடங்கப்பட்ட போது கிராமங்களில், ஊரகப் பகுதிகளில் உள்ள கண்மாய் மற்றும் வாய்க்கால்கள் தூர்வாரும் பணிகள் மட்டுமே நடந்து கொண்டிருந்தன.ஆனால் தற்போது கிராமத்தில் உள்ள ஊராட்சி அலுவலகக் கட்டிடம், பொதுக் கட்டிடங்கள் மற்றும் பிரதமரின் வீடு கட்டும் திட்டம் உள்ளிட்ட பணிகளும் நடந்து கொண்டு வருகின்றன.

தேசீய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் வேலை செய்ய நாடு முழுவதும் 11 கோடியே 96 லட்சம் தொழிலாளிகள் பதிவு செய்துள்ளனர். நாட்டிலுள்ள அனைத்து மாநிலங்களிலும் இந்தத் திட்டத் தொழிலாளிகளுக்கு ஒரே மாதிரியான கூலி வழங்கப்படுவதில்லை. மாநிலத்திற்கு மாநிலம் தொழிலாளிக்கு வழங்கப்படும் கூலி வேறுபடவும் செய்கிறது. நடப்பாண்டில் தமிழகத்தில் 100 நாள் வேலைத்திட்டத்தில் பணியாற்றும் தொழிலாளிக்கு வழங்கப்படும் ஒரு நாள் கூலி ரூ.336 ஆகும்.

குறைந்தபட்சம் தினக்கூலி ரூ.500 வழங்கப்பட வேண்டும். வேலை நாட்களை 100 இல் இருந்து 200 ஆக உயர்த்தப்பட வேண்டும் என்பது தொழிலாளிகளின் கோரிக்கையாகும்.

ஆனால் ஒன்றிய பாஜக அரசு அந்தக் கோரிக்கையை உதாசீனம் செய்வது மட்டுமல்ல அந்தத் திட்டத்திற்கு வழங்கப்பட்டு வரும் பட்ஜெட் தொகையை வருடந்தோறும் குறைத்துக்கொண்டே வருகிறது.

அதாவது கடந்த 2023-24 ஆம் ஆண்டில் தமிழகம் ஒன்றிய அரசிடம் இருந்து மொத்தம் ரூ.12 ஆயிரத்து 136 கோடி நிதி பெற்றது. ஆனால் கடந்த ஆண்டில் வெறும் ரூ.7,583 கோடிதான் ஒன்றிய அரசு கொடுத்துள்ளது. நடப்பாண்டில் இந்த ஒதுக்கீடு மிகவும் குறைக்கப்பட்டு ரூ.3,200 கோடி என்ற அளவில் நிர்ணயம் செய்யப்பட்டுள்து. ஒரு வேளை கூடுதல் பணிகளைத் தமிழகம் செய்வதால் அதிகபட்சமாக ரூ.6000 கோடி மட்டுமே கிடைக்கும் எனத் தெரிகிறது.

தமிழக அரசு சார்பில் ஒன்றிய அரசுக்குப் பன்முறை வேண்டுகோள் விடுக்கப்பட்டும் கூட, 100 நாள் வேலைத்திட்டத்தில், தமிழ்நாட்டிற்கான நிதி ஒதுக்கீட்டை ஒன்றிய அரசு (பாஜக) குறைத்துக் கொண்டே வருகிறது.

இதனால் பொருட்கள் வாங்குவதற்குச் செலவு மட்டுமின்றி மனித உழைப்பு நாட்களும் வெகுவாகக் குறைந்து விட்டது. குறிப்பாக, 2023-24 ஆம் ஆண்டில், தமிழ்நாட்டில் மட்டும் 40 கோடி மனித நாட்கள் உழைப்பு செய்யப்பட்டிருந்தது.

ஆனால் ஒன்றிய அரசின் மிகக் குறைந்த நிதி ஒதுக்கீடு காரணமாக 100 நாள் வேலைத்திட்டத்தின் கீழ் 2024-25 ஆண்டில் தமிழகத்திற்கு 20 கோடி மனித உழைப்பு நாட்களை மட்டுமே ஒன்றிய அரசு அனுமதித்திருந்தது. ஆனால் 100 நாள் வேலைத்திட்டம் என்ற ஒரே ஒரு வாழ்வாதாரத்தை நம்பிவாழும் ஏழை எளிய தொழிலாளிகளின் பொருளாதார நிலையைக் கருத்தில் கொண்டு ஒன்றிய அரசு ஒத்துழைக்கா விட்டாலும் கூட தமிழ்நாடு அரசு 29 கோடி மனித நாட்களில் பணி செய்தது.

நிலைமை இன்னும் மோசமாகும் வகையில் ஒன்றிய அரசு செயல்பட்டு வருவதால், தமிழகத்திற்கு நடப்பாண்டிற்கு வெறும் 12 கோடி மனித உழைப்பு நாட்கள்தான் என்று நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இது மிக மிகக் குறைவான ஒதுக்கீடு ஆகும். ஒன்றிய அரசின் இந்த வஞ்சகப் போக்கினை எதிர்த்துத் தமிழக அரசு தனது எதிர்ப்பினைப் பதிவு செய்துள்ளது. ஒப்பீட்டு அளவில் பார்த்தால் 2023 ஆண்டுடன் ஒப்பிடும் போது தற்போது 100 நாள் வேலைத் திட்ட ஒதுக்கீடு பாதியாகக் குறைத்துள்ளது. இதன் விளைவாக மனித உழைப்பு நாட்களும் பாதிக்கும் கீழே குறைந்து விட்டன.

தமிழ்நாட்டில் மொத்தம் 100 நாள் வேலைத்திட்டத்தில் சுமார் 70 லட்சம் குடும்பங்கள் பதிவு செய்துள்ளன. அவற்றில் கடந்த 2023-24 ஆண்டில், 3 லட்சத்து 97 ஆயிரத்து 98 குடும்பங்களுக்கு மட்டுமே முழுமையாக 100 நாள் வேலை வழங்கப்பட்டது.

இதுவே 2024-25 ஆம் ஆண்டில் 1 லட்சத்து 18 ஆயிரத்து 515 ஆக குறைந்துவிட்டது. அதாவது முந்தைய ஆண்டையைக் காட்டிலும் 50 சதவீதம் அதாவது பாதிக்கும் கீழே குறைத்துள்ளது ஒன்றிய பாஜக அரசு.

கொடுமை என்னவெனில் நடப்பு நிதியாண்டில் 100 நாள் வேலைத் திட்டத்திற்காக ஒதுக்கீடு 40 சதவீதத்திற்குக் கீழே ஒன்றிய அரசு குறைத்துள்ளதால் ஒரு குடும்பத்திற்கு 100 நாட்கள் வேலை வழங்கப்பட்டு வந்த நிலையில் தற்போதை ஒன்றிய அரசின் பழிவாங்கும் போக்கினால் அதிகபட்சமாக 35 நாட்களுக்கு மேல் வேலை வழங்க முடியாது என்ற அவலநிலை ஏற்பட்டுள்ளது.

பழிவாங்கும் அரசியல் காரணமாக தமிழகத்தை வஞ்சிக்கும் வகையில் நிதிஒதுக்கீட்டை 100 சதத்திலிருந்து 35 சதமாகக் குறைத்துள்ளது. இதனால் 100 வேலை நாட்கள் 35 நாட்களாகக் குறைந்து விட்டது.

தமிழகத்தைப் பொறுத்து இந்தப் பழிவாங்கும் போக்கு ஒரு புறம் இருக்க 100 நாள் வேலைநாள் திட்டத்தைக் குழி தோண்டிப் புதைக்கும் வகையில் ஒன்றிய அரசு செயல்பட்டுவருவதை ஏற்கெனவே இடதுசாரிக் கட்சிகள் உள்பட இந்தியாவின் அனைத்து எதிர்க்கட்சிகளும் பாஜக அரசை வன்மையாகக் கண்டித்து வருகின்றன.

லிப் டெக் என்ற சமூக ஆர்வலர்கள் கல்வியாளர்கள் அமைப்பின் ஆய்வின் படி 100 நாள் வேலைத் திட்டத்தில் கடந்த 2023 ஏப்ரல் முதல் செப்டம்பர் வரை 39.3 லட்சம் பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்களை எதேச்சதிகாரமாக நீக்கியுள்ளது ஒன்றிய அரசு. இதனால் வெகுவாகப் பாதிக்கப்பட்ட மாநிலங்களாகத் தமிழகமும் ஒரிசாவும் உள்ளன. 8 கோடி தொழிலாளர்களின் வேலை அட்டைகள் செல்லாததாக்கப்பட்டுள்ளன. 153 கோடி மனித வேலை இழப்புக்கு உள்ளாக்கி உள்ளது ஒன்றிய அரசு.

இப்படி மிகக்குறைந்த கூலியை நம்பி வாழ்வை நடத்தும் ஏழைத் தொழிலாளிகளின் வயிற்றில் அடிக்கும் பாஜக ஒன்றிய அரசோ, மறுபக்கத்தில் பெரு கார்ப்பரேட் முதலாளிகளுக்கு லட்சக்கணக்கான கோடிகளில் கடன் வழங்குவதும், லட்சக்கணக்கான கோடிகளில் தள்ளுபடி செய்வதுமாக பெரும் கார்ப்பரேட் அரசாக இந்த அரசு செயல்பட்டு வருகிறது. அதற்குக் கைக்கூலியாக ஆயிரக்கணக்கான கோடிகளில் கார்ப்பரேட்டுகளிடருந்து நன்கொடை பெற்று அதைக்கொண்டு எதிர்க்கட்சிகளைப் பிளப்பதும், இழுப்பதும், கவிழ்ப்பதும் என அனைத்து வகையான பாசிசப் போக்குகளைக் கையாண்டு வருகிறது இந்த பாஜக ஒன்றிய அரசு.

தமிழகத் தொழிலாளிகளின் வயிற்றிலடிக்கும் பாஜக கட்சிக்கு, கல்வி நிதியா கிடையாது ரயில்வேதிட்ட நிதியா கிடையாது எனத் தமிழகத்தை வஞ்சிக்கும் இந்த பாஜக கட்சிக்கு வரும் சட்டமன்ற தேர்தலில் சரியான பாடம் புகட்டப்படவேண்டும். மக்கள் பாடம் புகட்டுவர். அதற்கு பாஜக எதிர்ப்பு சக்திகள் ஒன்றுபட்டு களத்தில் நின்று மக்களோடு மக்களாகப் பணியாற்றிட வேண்டும். இதுவே காலத்தின் அறைகூவல்.

தொடர்புக்கு: 9443120051

### மார்க்சிஸ்ட் கட்சி தோழர்கள் மீது

# இந்து முன்னணிக் கும்பலின் கொலைவெறித் தாக்குதல்

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்

மார்க்சிஸ்ட் கட்சி தோழர்கள் மீது, கருத்துரிமையைப் பறிக்கும் வகையில், இந்து முன்னணிக் கும்பல் கொலைவெறித் தாக்குதல் நடத்தியதற்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) அமைப்புகளும், உறுப்பினர்களும் 11.06.2025 ஆம் தேதி, 20.06.2025 வரை பத்து நாட்கள், பாஜக ஒன்றிய அரசின் மக்கள் விரோதக் கொள்கைகளுக்கு எதிராக தமிழ்நாடு முழுவதும் பரப்புரை இயக்கத்தை மேற்கொண்டனர்.

திண்டுக்கல் மாவட்டத்தில், திண்டுக்கல் ஒன்றியச் செயலாளர் ஆர்.சரத்குமார் தலைமையில் நடந்த பரப்புரை இயக்கத்தின் நிறைவு செய்து தாடிக்கொம்பு பகுதியில் ஆர்.சரத்குமார் பேசிக்கொண்டிருந்த போது, அங்கு வந்த இந்து முன்னணியைச் சேர்ந்த கும்பல், பேசுவதை நிறுத்தும்படி, கத்தியபடி ஆர்.சரத்குமார், பாக்கியம், சண்முகவேல் ஆகியோர் மீது கொலைவெறித் தாக்குதல் நடத்தியுள்ளது. மதவெறிக் கும்பலின் வன்முறைத் தாக்குதலில் மாற்றுத் திறனாளிகள், பெண்களும் படுகாயமடைந்துள்ளனர். வன்முறைக் கும்பலின் குற்றச் செயல்கள் தொடர்பாக காவல் நிலையத்தில் புகார் கொடுக்கச் சென்ற போது, அங்கும் கும்பலாக வந்து, தடுத்து தகராறு செய்துள்ளனர்.

படுகாயமடைந்த சரத்குமார், சண்முகவேலு இருவரும் திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். காயமடைந்தவர்களுக்கு சிகிச்சை அளிப்பதைத் தடுக்க வந்த மதவெறிக் கும்பல் “பாரத் மாதா கி ஜெ” என்று வெறித்தனமாகக் கூச்சலிட்டு, பெரும் தாக்குதல் நடத்த எத்தனித்தது. மார்க்சிஸ்ட் கட்சித் தோழர்களும், பொதுமக்களும், பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவாகத் திரண்ட, நிலையில் காவல்துறை தலையிட்டு அமைதி திரும்ப நடவடிக்கை எடுத்தது.

அரசின், கொள்கைகளை விமர்சிக்கவும், ஜனநாயக முறையில் மக்களைத் திரட்டி ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தவும், சமூகச் சீர்த்திருத்த கருத்துக்களையும் பொதுமக்களிடம் எடுத்துக் கூறி, அணிதிரட்டி, எதிர்த்துப் போராடவும் அரசியல் அமைப்புச் சட்டம், குடிமக்களுக்கு அடிப்படை உரிமையாக வழங்கியுள்ளது. அதிலும் நாடளுமன்றத்திலும், சட்டமன்றங்களிலும் பிரதிநிதித்துவம் பெற்றுள்ள அரசியல் கட்சிகள் கூடுதல் உரிமைகளைப் பெற்றுள்ளன. இந்த உரிமைகளை மறுத்து, இந்து முன்னணிக் கும்பல் சட்டத்தைக் கையில் எடுத்துக் கொண்டு, கும்பல் வன்செயல்களில் ஈடுபட்டதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயற்குழு வன்மையாகக் கண்டிக்கிறது. இந்த வன்முறை நடவடிக்கை தொடருமானால், அதனை, எதிர்கொள்ள கம்யூனிஸ்டுகளும் களம் இறங்குவார்கள் என எச்சரிக்கிறோம். அரசியல் ஆதாயம் தேடி வடமாநிலங்களில் இதிகாச நாயகன் ராமரைப் பயன்படுத்தியது போல, இங்கு, தமிழ்நாட்டில் “முருகனை” மையப்படுத்திக் கலகங்களை ஏற்படுத்தி, அரசியல் ஆதாயம் தேடும் மலிவான செயலுக்கான அரசியல் சதியை, திண்டுக்கல் சம்பவம் வெளிப்படுத்தியுள்ளது. இதனை ஆரம்ப நிலையிலேயே இரும்புக் கரம் கொண்டு ஒடுக்க வேண்டும். அல்லவெனில், இது நாளுக்கு நாள் அதிகரிக்கும் பேரபாயமாகும். திண்டுக்கல் வன்முறையில் ஈடுபட்ட இந்து முன்னணிக் கும்பலைச் சேர்ந்த அனைவரையும் கைது செய்து, கடுமையாகத் தண்டிக்க வேண்டும் என தமிழ்நாடு அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறோம் என மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில்

# ஆங்கிலவழிக் கல்விக்கு நன்கொடை வசூலிப்பதை நிறுத்துக

## இளைஞர் பெருமன்றம் தீர்மானம்



விருதுநகர் மாவட்டம் வத்திராயிருப்பு கட்சி அலுவலகத்தில், இளைஞர் பெருமன்ற மாவட்டக் குழு கூட்டம், மாவட்ட தலைவர் டிமிட்ரோ தலைமையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் பகத்சிங் நடைபெற்ற வேலைகள் குறித்துப் பேசினார்.

அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் ஆங்கிலவழிக் கல்வி முறையில் பயிலும் மாணவ, மாணவிகளிடம் சேர்க்கைக் கட்டணம், நன்கொடை, நோட்புக் மற்றும் இதரச் செலவு என ரூ.10 ஆயிரம் முதல் 20 ஆயிரம் வரை வசூல் செய்யப்படுகிறது. இதனால் ஏழை மாணவர்கள் அவதிக்குள்ளாகி படிப்பை இடைநிறுத்தம் செய்யும் நிலை உள்ளது. எனவே அரசு தலையிட்டு இக்கட்டணக் கொள்ளையைத் தடுத்து நிறுத்த வேண்டும் எனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பின்னர் வத்திராயிருப்பு கலையரங்கில் சேகுவேரா பிறந்த நாள் கருத்தரங்கம் கணேஷ்குமார் தலைமையில் நடைபெற்றது. சிபிஐ தேசியக் குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்.எல்.ஏ, மாவட்டச் செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்.பி, இளைஞர் பெருமன்ற மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் பகத்சிங், பொன்னுபாண்டியன் எக்ஸ் எம்.எல்.ஏ, மாவட்ட துணைச் செயலாளர் செந்தில்குமார், வட்டச் செயலாளர் கோவிந்தன் ஆகியோர் பேசினார்கள்.

தூத்துக்குடி மாவட்ட கட்டடத் தொழிலாளர் சங்கத்தின்

# அமைப்பு நிலை ஆய்வுப் பேரவை




தமிழ்நாடு ஏஐடியுசி கட்டடத் தொழிலாளர் சங்கத்தின் தூத்துக்குடி மாவட்ட அமைப்பின் அமைப்பு நிலை ஆய்வுப் பேரவைக் கூட்டங்கள் மாவட்டத் தலைவர் மகாராஜன் கயத்தாறிலும், மாவட்டத் துணைச் செயலாளர் சரவணராஜன் எட்டையபுரத்திலும் தலைமை தாங்கினார்கள்.

சங்கத்தின் மாவட்டச் செயலாளர் எஸ்.சேது முன்னிலையில், மாநிலப் பொதுச் செயலாளர் என்.செல்வராஜ், மாநிலப் பொருளாளர் இரா.முருகன் ஆகியோர் அமைப்பு நிலை மேம்பாடு குறித்து சிறப்புரை ஆற்றினார்கள். இரண்டு கூட்டங்களிலும் கிளைச் சங்கங்களின் நிர்வாகிகள் 250 பேர் கலந்து கொண்டார்கள்.

# ஆஷா பணியாளர்களுக்கு சம்பள உயர்வு கேட்டு தீர்மானம்



நெல்லை அம்பாசமுத்திரம் கட்சி அலுவலகத்தில், ஆஷா பணியாளர் கூட்டம் அம்பை சேரை ஒன்றியச் செயலாளர் பி.முருகன் தலைமையில் நடைபெற்றது. கட்சியின் மாவட்டச் செயலாளர் ஆர்.சடையப்பன், மாவட்ட துணைச் செயலாளர் ஏ.சேதுராமலிங்கம், தூய்மைப் பணியாளர் சங்கச் செயலாளர் பி.பரமசிவன் ஆகியோர் கலந்து கொண்டனர். ஆஷா பணியாளர்களுக்குத் தமிழக அரசிடம் சம்பள உயர்வு கேட்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# இந்தியாவில் கூட்டாட்சித் தத்துவம் ஆபத்தில் உள்ளது

## நீதிபதி முரளிதரன் பேச்சு

கூட்டாட்சித் தத்துவம் குறித்து இந்திய வழக்கறிஞர்கள் சங்கம், சமூக நீதிக்கான வழக்கறிஞர் சங்கம், டிஏஏ, ஏஐஎல்சி உள்ளிட்ட வழக்கறிஞர்கள் சங்கம் சார்பில், சென்னை பார் கவுன்சில் வளாகத்தில் இந்திய வழக்கறிஞர்கள் சங்க வடக்கு மண்டலப் பொறுப்பாளர் வி.எம்.சுபாஷ் பாரிவேந்தன், டி.கே.பாரதி, ஏ.ராஜா முகமது ஆகியோர் தலைமையில் கருத்தரங்கம் நடைபெற்றது. இதில் மூத்த வழக்கறிஞர் ப.பா.மோகன் விளக்க உரையாற்றினார். அகில இந்திய வழக்கறிஞர் சங்கத்தின் அருணாச்சலம், இசைக் கலைஞர் டி.எம். கிருஷ்ணா, முன்னாள் நீதிபதி அக்பர் அலி, முன்னாள் நீதிபதி முரளிதரன் ஆகியோர் கருத்துரை ஆற்றினர்.

இதில் முன்னாள் நீதிபதி முரளிதரன் பேசியது, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசு இருக்கும் பொழுது, ஜம்மு காஷ்மீர் மாநிலத்தை யூனியன் பிரதேசமாக, இந்திய அரசியலமைப்பு நோக்கத்திற்கு முரணாகச் சுருக்கப்பட்டது. இது சட்டவிரோதம்.

இந்தியாவின் கூட்டாட்சித் தத்துவம் தற்போது ஆபத்திற்கு உள்ளாகி இருக்கிறது. ஆளுநர், நிதி ஒதுக்கீட்டில், திட்டங்களைச் செயலாற்றுவதில் பாரபட்சம் என்று பல்வேறு விதமான வழிகளில் கூட்டாட்சித் தத்துவம் தொடர்ச்சியாகச் சிதைக்கப்பட்டு வருகிறது. கூட்டாட்சித் தத்துவம் மீது நடைபெறும் தாக்குதல் இந்தியாவின் மக்களைப் பிளவு படுத்துவதற்குச் சமம் என்று கூறினார்.

# சாலையில் குப்பைகளை கொளுத்துவதால் தொற்று நோய் பரவும் அபாயம்

கள்ளக்குறிச்சி மாவட்டம், சின்னசேலம் ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்ட கடத்தூர், எலியத்தூர், தொட்டியம், நமசிவாயபுரம், கனியாமூர் ஆகிய ஊராட்சிகள் கச்சிராயபாளையம் சின்னசேலம் பிரதான, மாநில நெடுஞ்சாலையில் அமைந்துள்ளன.

மேற்கண்ட கிராமங்களில் சேகரிக்கப்படும் குப்பைகளை சுற்றுச்சூழலை மாசு ஏற்படுத்தும் வகையிலும், துர்நாற்றம் வீசும் வகையிலும் சாலையில் கொட்டுவதால், அவ்வழியாகப் பயணிக்கும் வாகன ஓட்டிகள் முகம் சுழித்து, மூக்கைப் பிடித்து கடந்து செல்கின்றனர். ஒவ்வொரு ஊராட்சியிலும் பல லட்ச ரூபாய் செலவில் குப்பைக் கிடங்குகள் ஒதுக்கப்புறங்களில் அமைக்கப்பட்டுள்ளன. அதில் கொட்டாமல் சாலையோரங்களில், திறந்தவெளிகளில் குப்பைகளைக் கொட்டிக் கொளுத்தி வருகின்றனர். இதன்மூலம் மூக்கடைப்பு, மூச்சுத் திணறல், நுரையீரல் பிரச்சனை, தோல் நோய் ஏற்படுகின்றன.

சாலையோரங்களில் கொட்டப்படும் குப்பைகள் காற்றில் பறந்து, தார்ச்சாலைகளில் சிதறிக் கிடப்பதால் வாகன ஓட்டிகளுக்கு இடையூறு ஏற்பட்டு அவதியடைகின்றனர். பெரும் சுகாதாரச் சீர்கேடு ஏற்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

எனவே மேற்படி பிரதான சாலையில் அமைந்துள்ள கிராமங்களில் சேகரிக்கப்படும் குப்பைகளை, குப்பைத்தொட்டிகளில் கொட்டி முறையாகப் பராமரிக்க வேண்டும். அன்றாடம் சேகரிக்கும் தெருக்குப்பைகளை, அந்தந்த கிராமங்களில் அமைக்கப்பட்டுள்ள குப்பைக் கிடங்குகளில் கொட்ட வேண்டும். மக்கும் குப்பை, மக்காத குப்பை எனத் தரம் பிரித்துப் பொதுச் சுகாதாரத்தைப் பேணி காத்திட, சின்னசேலம் ஊராட்சி ஒன்றிய ஊரக வளர்ச்சித் துறை அதிகாரிகளுக்கு உரிய வழிகாட்டுதல்களைப் பின்பற்றுவதற்கு மாவட்ட ஆட்சியர் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் பொதுமக்களும், சமூக ஆர்வலர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**– கபில்தேவ்**

# பட்டா வழங்கக் கோரி கோவில்பட்டியில் ஆர்ப்பாட்டம்



கோவில்பட்டி அருகே மந்தித்தோப்பு கிராமத்தில் வசிக்கும் மக்களுக்குப் பட்டா வழங்க வலியுறுத்தி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தாலுகா குழு சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

கோவில்பட்டி அருகே மந்தித்தோப்பு இந்திரா நகர் மேற்குப் பகுதியைச் சேர்ந்த மக்கள் இந்தியக் கம்யூனிஸ்ட் தாலுகா செயலாளர் பாபு தலைமையில் வட்டாட்சியர் அலுவலகம் முன்பு திரண்டனர். அவர்கள் தாங்கள் வசிக்கும் வீடுகளுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கக் கேட்டுக் கோஷமிட்டனர். இதில், மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் சேதுராமலிங்கம், நகரச் செயலாளர் செந்தில் ஆறுமுகம், மாவட்டக் குழு உறுப்பினர் ரெங்கநாதன், தாலுகா உதவிச் செயலாளர் ராமகிருஷ்ணன், நகரத் துணைச் செயலாளர்கள் விஜயலட்சுமி, அலாவுதீன், தாலுகா குழு உறுப்பினர் மணிகண்டன், நகரப் பொருளாளர் சீனிவாசன், நகரக் குழு உறுப்பினர் செல்லையா மற்றும் கிராம மக்கள் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து அவர்கள் துணை வட்டாட்சியர் அருணாவிடம் வழங்கிய மனு விவரம்: கோவில்பட்டி அருகே மந்தித்தோப்பு இந்திரா நகரில் வீடு கட்டி வசித்து வரும் மக்கள் குடிநீர் மற்றும் மின் இணைப்புகள் பெற்றுள்ளனர். இதில், இந்திரா நகர் மேற்குப் பகுதியில் வசிக்கும் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. ஆனால், கிழக்குப் பகுதியில் வசிக்கும் மக்களுக்குப் பலமுறை முறையிட்டும் வீட்டுமனைப் பட்டா வழங்கப்படவில்லை. எனவே, அவர்கள் வசிக்கும் வீடுகளுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தெரிவித்திருந்தனர்.

கட்டடத் தொழிலாளர் சங்கத்தின்

# திருவண்ணாமலை மாவட்டக் குழு கூட்டம்




தமிழ்நாடு ஏஐடியூசி கட்டடத் தொழிலாளர் சங்கத்தின் திருவண்ணாமலை மாவட்டக் குழு கூட்டம் எம்.முருகன் தலைமையில் நடைபெற்றது. ஏஐடியூசி கொடியை மாவட்ட துணைத் தலைவர் ஆர்.செல்வராஜ் ஏற்றி வைத்தார். க.ஜோதி அஞ்சலித் தீர்மானம் வாசித்தார். மாவட்டப் பொருளாளர். பி.சங்கர் வரவேற்புரை ஆற்றினார். மாவட்டச் செயலாளர் எம்.எஸ்.மாதேஸ்வரன் செயலாளர் அறிக்கை முன்வைத்தார். அமைப்பு நிலை சம்பந்தமாகச் சங்கத்தின் மாநிலத் துணைப் பொதுச் செயலாளர் எம்.முனுசாமி விளக்க உரையாற்றினார். மாநிலத் துணைச் செயலாளர் வேலூர் சங்கர் மேஸ்திரி, கள்ளக்குறிச்சி மாவட்டச் செயலாளர் ஆருண் விளக்க உரையாற்றினார்.

# திருச்சியில் ப.மாணிக்கம் நினைவு நாள்




இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளராக 15 ஆண்டு காலம் சிறப்பான முறையில் கட்சியை வழி நடத்தியவர். சமரசமற்ற போராளி ப.மாணிக்கம் 26ம் ஆண்டு நினைவு நாளில் அலங்கரிக்கப்பட்ட அவரது திருவுருவப் படத்திற்கு, மேற்குப் பகுதி குழுவின் சார்பாக மலர்த்தூவி மரியாதை செலுத்தப்பட்டது.

இதில் மாமன்ற உறுப்பினர் க.சுரேஷ், கட்சியின் மாநகர மாவட்டச் செயலாளர் எஸ்.சிவா, மாணவர் பெருமன்ற மாநிலத் தலைவர் க.இப்ராஹிம், மேற்குப் பகுதிச் செயலாளர் சுரேஷ் முத்துசாமி, பொருளாளர் க.முருகன், துணைச் செயலாளர்கள் எஸ்.சத்யா, என்.எஸ்.பாட்ஷா, மாணவர் பெருமன்ற மாநகர் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் மௌ.ஜெய்லானி மற்றும் மாநகராட்சி நகர விற்பனைக் குழு உறுப்பினர் சுமதி, வை.புஷ்பம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## பாலஸ்தீனத்தின் மீதான இஸ்ரேல் தாக்குதலைக் கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம்




தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் சார்பில், திருவண்ணாமலை மாவட்டம் போளூர் நகரத்தில் ப.தி.ராஜேந்திரன் தலைமையில் பாலஸ்தீனத்தின் மீது, இஸ்ரேல் தொடர்ந்து தாக்குதல் நடத்துவதை உடனே நிறுத்தக் கோரி கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் சி.நாராயணசாமி, சி.பன்னீர்செல்வம், துரைசாமி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## ஜனசக்தி வளர்ச்சி நிதி



◆ ஈரோடு மாவட்டம் கொடுமுடி ஒன்றியம், சிவகிரி தெற்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கிளைச் செயலாளர் த.மணிவண்ணன் இல்ல திருமணம் 8.6.2025 அன்று சிவகிரியில் நடைபெற்றது. திருமண விழாவில் ஜனசக்தி வளர்ச்சி நிதியாக 3000 ரூபாயை ஈரோடு தெற்கு மாவட்டச் செயலாளர் எஸ்.டி. பிரபாகரன் அவர்களிடம் மணமக்கள் வழங்கினர்.

◆ இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் விருதுநகர் மாவட்டம், ராஜபாளையம் கிழக்கு ஒன்றியச் செயலாளர் ராமச்சந்திரன் அவர்களின் மகனும், அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் மாவட்டக் குழு உறுப்பினருமான ஆர்.அருண் திருமண நிகழ்வு, எஸ்.ராமலிங்காபுரத்தில் நடைபெற்றது. சிறப்பு விருந்தினர்களாகக் கட்சியின் விருதுநகர் மாவட்டச் செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்.பி, மாநிலக் குழு உறுப்பினர்கள் பாலமுருகன், செந்தில்குமார், காரியாபட்டி ஒன்றியச் செயலாளர் ஞானகுமார், ஏஐடியுசி அமைப்புச் செயலாளர் ரவி மற்றும் பலர் கலந்து வாழ்த்தினர். ஜனசக்தி வளர்ச்சி நிதியாக ரூ.2000 மணமக்களால் வழங்கப்பட்டது.



◆ கோவை சூலூர் தெற்கு வட்டாரம் கண்ணம்பாளையம் பேரூராட்சி முன்னாள் உறுப்பினரும், வடக்குக் கட்சிக் கிளை உறுப்பினருமான சரோஜினி, மாரப்பன் தம்பதியரின் மகன் மா.விக்னேஷ், இ.வசுந்தரா ஆகியோர் திருமண விழாவில், கட்சியின் மாவட்டத் துணைச் செயலாளர் மௌ.குணசேகர், மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் பெ.மௌனசாமி, வட்டாரச் செயலாளர் வே.வசந்தகுமார், மாவட்டக் குழு உறுப்பினர்கள் பி.சுப்பிரமணி, கே.கண்ணன், வட்டாரத் துணைச் செயலாளர் வீ.பேரின்பம், இளைஞர் பெருமன்ற மாநிலத் துணைச் செயலாளர் கலை அஸ்வினி ஆகியோர் பங்கேற்றனர். மணமக்கள் சார்பில் 3000 ரூபாய் ஜனசக்தி வளர்ச்சி நிதி வழங்கப்பட்டது. வாழ்க மணமக்கள்.

## அரசு உயர்த்திய கூலியை வழங்கக்கோரி நெசவாளர்கள் வேலை நிறுத்தம் செய்ய முடிவு



பவானி வட்டாரக் கைத்தறி ஜமக்காளம் பெட்ஷீட் நெசவாளர் மற்றும் சாயத் தொழிலாளர் சங்கத்தின் உறுப்பினர் பேரவைக் கூட்டம் 23.06.2025 அன்று, சங்க அலுவலகத்தில், சங்கத் தலைவர் பி.எம்.கந்தசாமி, கே.எம்.கண்ணையன் தலைமையில் நடைபெற்றது. செயலாளர் வ.சித்தையன் கைத்தறி நெசவாளர்களின் கூலி உயர்வு பிரச்சனையில் சங்கம் எடுத்த முயற்சிகளை விளக்கினார். பவானி அனைத்து ஜமக்காள தறிக்கூட நெசவாளர்கள் மற்றும் பெரிய மோளபாளையம் நெசவாளர்களின் கருத்துப்படியும், தமிழக அரசு உயர்த்திய நெசவுக்கூலியை வழங்காததைக் கண்டித்து 27.06.2025 இல் அடையாள வேலை நிறுத்தம் செய்ய முடிவு செய்யப்பட்டது.

# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் இடைக் குழு மாநாடுகள்

### பட்டுக்கோட்டை நகரம்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி பட்டுக்கோட்டை நகர 25வது மாநாடு, கட்சி அலுவலகத்தில் நடைபெற்றது. மாநாட்டின் கொடியினை ஆர்.பிரகாசம் ஏற்றினார். தியாகிகள் நினைவுச் சின்னத்தை இரா.கல்யாணசுந்தரம் திறந்து வைத்தார். மாநாட்டின் நிகழ்விற்கு வ.விஜயன், க.லதா தலைமையேற்றனர். தஞ்சை மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் சி.பக்கிரிசாமி தொடங்கி வைத்தார். மாநாட்டில் அ.கலியபெருமாள், வீரமோகன், த.கண்ணகி, இள.குமணன், சிவசிதம்பரம் வாழ்த்துரை வழங்கினார்கள்.

இதில் நகரச் செயலாளராக எம்.எம்.சுதாகர், துணைச் செயலாளராக மு.இளையராஜா, பொருளாளராக சி.அஜய்குமார் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டார்கள்.

பட்டுக்கோட்டை முதல் பாப்பநாடு, ஒரத்தநாடு, தஞ்சாவூர் வழியாக அரியலூர் வரை புதிய ரயில் இருப்புப் பாதை உடனே அமைத்துத் தர வேண்டும் போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. நிறைவுரையாக எம்.எம்.சுகுமார் நன்றி உரை ஆற்றினார்.





### எஸ்.எஸ்.குளம் ஒன்றியம்

கோவை மாவட்டம் எஸ்.எஸ்.குளம் ஒன்றியக் குழுவின் 15வது மாநாடு, கைகோளபாளையத்தில் கே.பாபுராஜ் அரங்கில், ஆர்.ரங்கராஜ், சி.சுப்பையன், எம்.மாரிமுத்து ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. கட்சிக் கொடியினை மூத்த தோழர் எம்.ஏ.பழனியப்பன் ஏற்றினார். மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர்கள் சி.தங்கவேலு, மு.வ.கல்யாணசுந்தரம், மாநிலக் கல்வி மைய இரா. ஜீவபாரதி ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்திப் பேசினர்.

ஒன்றியச் செயலாளராக சி.மோகன், துணைச் செயலாளராக பி.மகேந்திரன், பொருளாளராக ராஜு என்கிற ரங்கராஜ் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

### மதுரை மேற்குப் பகுதி

கட்சியின் மதுரை மேற்குப் பகுதி குழு மாநாடு எஸ்.சுப்ராம தலைமையில் நடைபெற்றது. மாநாட்டை மாநகர் மாவட்டப் பொருளாளர் எம்.இருளாண்டி வழிநடத்த, பகுதிச் செயலாளராக ஜனசக்தி என்.ஜீவா, துணைச் செயலாளராக எம்.ராமகிருஷ்ணன், பொருளாளராக ஜி.பாலகிருஷ்ணன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

### அம்பத்தூர் பகுதி

அம்பத்தூர் பகுதிக் குழு 19வது மாநாட்டின் முதல் நிகழ்வாக ஓரகடத்தில் உள்ள அம்பேத்கர் சிலைக்கு, கட்சியின் மாநிலத் துணைச் செயலாளர் நா.பெரியசாமி எக்ஸ் எம்.எல்.ஏ மாலை அணிவித்து பேரணியைத் துவக்கி வைத்தார். கட்சிக் கொடியை ஏ.எஸ்.கண்ணன் எக்ஸ் எம்.எல்.ஏ ஏற்றினார். மாவட்டச் செயலாளர் பா.கருணாநிதி தியாகிகளுக்கு அஞ்சலியைத் துவக்கி வைத்தார்.

மாநாட்டிற்கு அம்பத்தூர் பகுதிச் செயலாளர் இரா.விஜயகுமார், மாவட்ட துணைச் செயலாளர் ப.மாரியப்பன், கே.ரவிச்சந்திரன், வி.சுஜாதா ஆகியோர் தலைமையில், பகுதிக் குழு உறுப்பினர் ஏ.லோகேஷ் வரவேற்புரை ஆற்றினார். துணைச் செயலாளர் லோகநாதன் அஞ்சலித் தீர்மானத்தை முன்மொழிந்தார்.

மத்திய சென்னை மாவட்ட ஏஐடியுசி பொதுச் செயலாளர் மு.சம்பத், மாவட்டத் துணைச் செயலாளர் இரா.ரஞ்சித், மாவட்டப் பொருளாளர் மு.வரதன், வில்லிவாக்கம் பகுதிச் செயலாளர் ஜி.ஏழுமலை ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். மாநிலத் துணைச் செயலாளர் நா.பெரியசாமி எக்ஸ் எம்.எல்.ஏ சிறப்புரை ஆற்றினார்.

பகுதிச் செயலாளராக இரா.விஜயகுமார், துணைச் செயலாளர்களாக ஆர்.லோகநாதன், ஏ.லோகேஷ், பொருளாளராக கே.ரவிச்சந்திரன், அலுவலகச் செயலாளராக என்.கோபிநாதன் ஆகியோர் ஏகமனதாகத் தேர்வு செய்யப்பட்டனர். சென்னை மாநகராட்சி வீட்டு வரி, கழிவுநீர் இணைப்பு, குடிநீர் வரியைக் குறைக்க வேண்டும். அம்பத்தூரில் அரசுப் பொது மருத்துவமனை அமைக்க வேண்டும், அரசு கலைக் கல்லூரி, ஆண்கள் மேல்நிலைப்பள்ளி அமைக்க வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## வீட்டுமனைப் பட்டா வழங்கக் கோரி முற்றுகைப் போராட்டம்

திருவள்ளூர் மாவட்டம் மீஞ்சூர் ஒன்றியம், பொன்னேரி நகரத்திற்கு உட்பட்ட கும்மங்கலம் கிராமத்தில், பல்லாண்டு காலமாகக் குடியிருந்து வரும் மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கக் கோரியும், அரசு ஆவணங்களில் பட்டாவைப் பதிவேற்றம் செய்யக் கோரியும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டக் குழு உறுப்பினர் என்.ஜீவா தலைமையில், பாதிக்கப்பட்ட மக்களுடன் பொன்னேரி வட்டாட்சியர் அலுவலகம் முற்றுகைப் போராட்டம் நடைபெற்றது. பின்னர் அதிகாரிகள் தலையிட்டு உடனடியாக நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தனர்.



## கிராம சுகாதார செவிலியர் காலியிடங்களை நிரப்ப வேண்டும்

### சுகாதார செவிலியர்கள் சங்கம் கோரிக்கை



புதுக்கோட்டையில் அரசு அனைத்து சுகாதார செவிலியர்கள் சங்கத்தின் மாநிலச் செயற்குழுக் கூட்டம், சங்கத்தின் மாநிலத் தலைவர் இ.விசாலாட்சி தலைமையில் நடைபெற்றது. சமூகச் சமத்துவத்துக்கான மருத்துவர்கள் சங்க மாநிலப் பொதுச் செயலாளர் டாக்டர் ஜி.ஆர்.ரவீந்திரநாத், செவிலியர் சங்கத்தின் நிறுவனர் ஆர்.இந்திரா, மாநிலப் பொதுச் செயலாளர் பி.சத்யா, பொருளாளர் பி.பாத்திமாமேரி ஆகியோர் பேசினர்.

துணைச் சுகாதார நிலையத்தில், சுகாதார இடைநிலைப் பணியாளர்களை நியமிக்கக் கூடாது. இந்தத் திட்டத்தை ரத்து செய்ய வேண்டும். தடுப்பூசி போடும் பணியில் சுகாதார இடைநிலைப் பணியாளர்களை ஈடுபடுத்தும் சுகாதாரத் துறை இயக்குநர் உத்தரவைத் திரும்பப் பெற வேண்டும். மாநிலம் முழுவதும் 4 ஆயிரத்துக்கும் அதிகமாக உள்ள, கிராமச் சுகாதார செவிலியர் பணியிடங்களை, கிராமச் சுகாதார செவிலியர் பயிற்சி முடித்தவர்களை மட்டுமே கொண்டு நிரப்ப வேண்டும். மகப்பேறு மற்றும் சிசு மரணங்கள் உயர்வதைத் தடுக்க, சுகாதார செவிலியர்களின் நேரத்தையும், உழைப்பையும் முழுமையாக எடுத்துக் கொள்ளும் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டத்தைச் சமூக நலத்துறைக்கு மாற்ற வேண்டும். சுகாதார செவிலியர்களின் அறிக்கை உள்ளிட்டவற்றை இணையதளம் வழியாகவே அனுப்ப வேண்டும் என்ற நிலையில், ஆன்லைன் பதிவுப் பணிக்கு வேறு நபர்களை நியமிக்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இந்தக் கோரிக்கைகளை முன்வைத்து மாநிலம் முழுவதும், கோரிக்கை அட்டைகளை அணிந்து பணிபுரிவது என்றும், ஜூலை 10 ஆம் தேதி மாவட்டங்களில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தவும், ஜூலை 24ஆம் தேதி சென்னையில் மாநில அளவிலான கோரிக்கைப் பேரணி நடத்தவும் முடிவு செய்யப்பட்டது. போராட்டங்களில் இதரச் சங்கத்தினரையும் இணைத்துக் கொள்ளவும் முடிவு செய்யப்பட்டது.

# கலை இலக்கியப் பூங்கா

## மாநில அளவிலான நாடகப் பயிலரங்கு

நவீன ஊடகங்களின் அதிவேக வளர்ச்சியால் நாடகக் கலை பின்தள்ளப்பட்டுள்ள சூழலில், அதை உயிர்ப்பித்து அடுத்த தலைமுறையினருக்குக் கொண்டு செல்லும் நோக்கில், தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் மாநிலக் குழுவின் சார்பில், மாநில அளவிலான நாடகப் பயிலரங்கு, கோபிசெட்டிபாளையத்திலுள்ள தியாகசீலர் சி.எஸ்.சுப்ரமணியம் அரங்கில் ஜூன் 21, 22 இரண்டு நாட்கள் நடத்தப்பட்டது.



ஜூன் 20 பயிலரங்கத் தொடக்க விழாவில் பெருமன்றத் தலைவர் எஸ்.கே.கங்கா, பொதுச்செயலாளர் மருத்துவர் த.அறம், பொருளாளர் ப.பா.ரமணி வாழ்த்துரை வழங்க, நாடக இயக்குனர் பேரா.த.திலிப்குமார் மற்றும் நாடக் கலைஞர் நந்தகிஷோர் இணைந்து நெறிப்படுத்த, உடற்பயிற்சிகள், குரல் பயிற்சி, கிடைக்கும் எளிய பொருட்களைப் பயன்படுத்திக் காட்சிளை அமைப்பது, நடிப்புக்கலை ஆகிய பயிற்சி கொடுத்தனர். எ.ஜெ.செல்வின் இயக்கிய ‘பசி’ நாடகம் திரையிடப்பட்டது. எ.ஜெ.செல்வின் தனது நாடக அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார்.

இசைக் கலைஞர்கள், பி.சிவராமன், மு.ஆதிராமன், துருவன் பாலா, கணேசன், ரித்திகா ஆகியோர் பாடல்களைப் பாடினர். எழில் பெரியவேடியின் ‘பராரி’ படம் திரையிடப்பட்டது. நிகழ்வில், பழங்குடிச் செயல்பாட்டாளர் வி.பி.குணசேகரன் பங்கேற்றார். நாடகக் கலைஞர் ஆனந்த பாஸ்கர், நாடகக் கலையின் தோற்றம் வளர்ச்சி ஆகியன பற்றி விளக்கினார். புதுவை மாநில ‘இப்டா’ தலைவர் மு.ஆதிராமன் தெருக்கூத்துக் கலை பற்றி எடுத்துரைத்தார்.

நாடகக் கலைஞர் எஸ்.சங்கரநாராயணன், தற்காலப் பிரச்சனைகளைக் கருவாக்கிக் குறுகிய கால நாடகங்களை உருவாக்கும் உத்திகளை விளக்கினார். காசா போர் குறித்த நாடகம் பயிற்சியிலேயே உருவாக்கி நடிக்கப்பட்டது.

பயிலரங்கின் நிறைவில் முதல்வர் எம்.செல்வராஜ், பெருமன்றத் தலைவர் எஸ்.கே.கங்கா, பயிற்சி பெற்றோருக்குப் பங்கேற்புச் சான்றிதழ்களை வழங்கினர். பயிலரங்க ஆசிரியர்களான த. திலிப்குமார், எ.ஜெ.செல்வின், ஆனந்த பாஸ்கர், எஸ்.சங்கரநாராயணன், மு.ஆதிராமன் ஆகியோருக்குச் சிறப்பு செய்யப்பட்டது. நிகழ்வில் எழுத்தாளர் சுப்ரபாரதிமணியனின் ‘திரைக்கதைகள் நூல் வரிசை 10’ வெளியிடப்பட்டது.

கட்சியின் ஈரோடு வடக்கு மாவட்டச் செயலாளர் மோகன்குமார், கல்வியகத்தின் முதல்வர் எம்.செல்வராஜ், மேலாளர் முனைவர் கார்த்திவேல் ஆகியோர் பயிலரங்கிற்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்கினர்.

## மாநில அளவிலான சிறுகதைப் பயிலரங்கம்

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் மாநில அளவிலான சிறுகதைப் பயிலரங்கம் புதுக்கோட்டையில் ஜூன் 14, 15 தேதிகளில், அம்பிகா கல்வி அறக்கட்டளை கலைக்கூடத்தில் நடைபெற்றது. நிகழ்வை புதுக்கோட்டை மாவட்டத் தலைவர் அண்டனூர் சுரா தொகுத்து வழங்கினார். மாவட்டச் செயலாளர் பாலச்சந்திரன் நிகழ்வை ஒருங்கிணைத்தார். மாநிலத் தலைவர் எஸ்.கே. கங்கா தலைமை உரை ஆற்றினார். மாநிலப் பொருளாளர் ப.பா.ரமணி, அகில இந்திய முற்போக்கு எழுத்தாளர்கள் சம்மேளனத்தின் தேசியச் செயலாளர் டி.எஸ்.நடராஜன், அம்பிகா கல்வி அறக்கட்டளை நிறுவனர் சந்திர ரவீந்திரன், கவிஞர் கோ.கலியமூர்த்தி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

மாநிலப் பொதுச்செயலாளர் மரு.அறம் ‘கதையாளரின் கதை’ என்ற தலைப்பில் உரையாற்றினார். ‘சிறுகதை உருவாக்கம்‘ என்ற தலைப்பில் எழுத்தாளர் சு.வேணுகோபால் உரையாற்றினார். பேராசிரியர் கரு.முருகன் நெறியாளுகை செய்தார், எழுத்தாளர் ஏ.ஆர். முருகேசன் கருத்துரை வழங்கினார்.

‘சிறுகதையில் காலம் நிலம்’ என்ற தலைப்பில் எழுத்தாளர் எம்.எம்.தீன் உரை வழங்கினார், எழுத்தாளர் சோலச்சி நெறியாளுகை செய்தார், ஆங்கரை பைரவி கருத்துரை வழங்கினார்.



‘தென்னிந்திய சிறுகதைகள்’ என்ற தலைப்பில் எஸ்.செந்தில்குமார் உரையாற்றினார். பேராசிரியர் கணபதி இளங்கோ நெறியாளுகை செய்தார், கோவில் குணா கருத்துரை வழங்கினார். மூட்டாம்பட்டி ராஜ் தலைமையில் நடைபெற்ற குறும்படம் திரையிடல் நடைபெற்றது. கவிஞர் தங்கம் மூர்த்தி, வாசகர் பேரவைச் செயலர் விஸ்வநாதன் வாழ்த்துரை வழங்கினர்.

அகிலா கிருஷ்ணமூர்த்தி ‘சிறுகதையில் பெண் பாத்திரப் படைப்புகள்’ என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினார், மாதர் சம்மேளன, தேசியச் செயலாளர் மருத்துவர் ஏ.ஆர்.சாந்தி நெறியாளுகை செய்தார், ஆசிரியர் பாண்டிச்செல்வம் கருத்துரை வழங்கினார். பேராசிரியர் காமராசு ‘சிறுகதைகளில் இன வரைவியல் கூறுகள்’ என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினார். எழுத்தாளர் சுப்ரபாரதிமணியன் நெறியாளுகை செய்தார், கவிஞர் அஜய்குமார் கோஷ் கருத்துரை வழங்கினார்.

எழுத்தாளர் கவிஞர் கண்மணி ராசா ‘சிறுகதைகளில் அழகியல்’ என்ற தலைப்பில் உரையாற்றினார், எழுத்தாளர் துவாரகா சாமிநாதன் நெறியாள்கை செய்தார், எழுத்தாளர் சிவானந்தம் கருத்துரை வழங்கினார். பேராசிரியர் கரு.முருகன் ‘சிறுகதைகளில் நுட்ப வெளிப்பாடுகள்’ என்கின்ற தலைப்பில் கருத்துரை வழங்கினார், எழுத்தாளர் முரானி நெறியாள்கை செய்தார், ஆசிரியர் தேவி உலகராஜ் கருத்துரை வழங்கினார்.

கட்சியின் புதுக்கோட்டை மாவட்டச் செயலாளர் செங்கோடன் வாழ்த்துரை வழங்கினார். மக்கள் இசை பாடகர் அறந்தை பாவா அவர்களின் 82வது பிறந்த தினம் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. பங்கேற்பாளர்கள் தங்களது கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர். அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்பட்டது. மாவட்டப் பொருளாளர் சோலச்சி நன்றி கூறினார்.

## கவிதை நூல்கள் விமர்சனம் முழுநிலா நிகழ்வு

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் சார்பில், தக்கலை மு.சம்சுதீன் தலைமையில், கவிதை நூல்கள் குறித்த விமர்சனம், கவிதைகள் வாசித்தல், உரையாடல் நடைபெற்றது.

நீலபத்மநாபன் கவிதைகள் குறித்த பார்வையை, குமாரசெல்வா முன்வைத்தார். ஹாமீம் முஸ்தபாவின் உணங்கா முறிவிலிருந்து கசிகிறது ரத்தம் என்னும் நூல்குறித்த பார்வையை, கவிஞர் ஷஹானா முன்வைத்தார். அரபுக்கவிதை வரலாறு, சமகால அரபுக்கவிதைகள் குறித்த அறிமுகத்தையும், சென்னைப் பல்கலைக்கழக அரபுத்துறை பேராசிரியரும், மொழிபெயர்ப்பாளருமான அ.ஜாகிர் ஹுசைன் உரை ஆற்றினார். ச.அனந்தசுப்பிரமணியன், ந.நாகராஜன், எஸ்.ஜே.சிவசங்கர், சுரேஷ் திருமொழி, ஹாமீம் முஸ்தபா ஆகியோர் கவிதைகள் வாசித்தனர். நிறைவு செய்து எஸ்.ஜே.சிவசங்கர் சமகாலக் கவிதைகள் குறித்து சிறுகுறிப்பு ஒன்றினை வழங்கினார். தந்தையர் தினப் பாடலொன்றை கவிஞர் ஐ.தர்மசிங் பாடினார்.

## இரு நூல்கள் அறிமுக நிகழ்வு

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்ற திண்டுக்கல் மாநகர் கிளையும், மாவட்ட மைய நூலக வாகர் வட்டமும் இணைந்து நடத்திய, இரு நூல்கள் அறிமுக நிகழ்வு மாவட்ட மைய நூலகத்தில், வேடசந்தூர் அரசுக் கல்லூரியின் முதல்வர், பேராசிரியர் பெ.சண்முகவேல் தலைமையில் நடைபெற்றது. நூலகர் ஆ.சக்திவேல் அனைவரையும் வரவேற்றார். வாசகர் வட்டத் தலைவர் லாசர் வேளாங்கண்ணி, மேனாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் ஆ.ச.சேரிவாணன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

கவிஞர் சுந்தரசோமன் எழுதிய ‘செய் தொழில் நேசி’ நூல் குறித்து பேராசிரியர் தே.ரோசி நூல் அறிமுகம் செய்தார். கவிஞர் ஹாமிம் முஸ்தபா எழுதிய ‘பெண்களின் இஸ்லாம்’ கவிதை நூல் குறித்து, ஆசிரியர் மார்டின் ராஜகுமார் நூல் அறிமுகம் செய்தார். நூலாசிரியர் கவிஞர் சுந்தரசோழன் ஏற்புரையாற்றினார். மாவட்டத் துணைத் தலைவர் கவிஞர் பாஸ்டீன் மதுரம் நன்றி கூறினார்.

## கண்ணதாசன் நூற்றாண்டு விழா நடத்த முடிவு

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்ற காரைக்குடி கிளைக்கூட்டம் முனைவர் கீதா தலைமையேற்க, முதுமுனைவர் ரெ.சந்திரமோகன் முன்னிலையில் தொடங்கியது. ஆசிரியர்கள் பொ. அமுதா, பா.லெட்சுமி ஆகியோர் மன்றப் பாடல் பாடிட, முனைவர் நீதி, கபிலர் “குறிஞ்சிப்பாட்டில்” குறிப்பிட்ட 96 மலர்களையும் குறிப்பிட்டு வரவேற்புரை ஆற்றினார்.

கண்ணதாசன் பாடல்கள் என்ற பொதுத் தலைப்பில் ‘திரைக்கதை சித்தரிப்பு’ இரா.பூபதி, ‘அவலச் சுவை’ முனைவர் கிருஷ்ணவேணி, ‘தத்துவம்‘ மதிப்புறு முனைவர் சவீதாபானு, ‘சங்க இலக்கியக் காட்சிகள்’ முனைவர் சுபா, ‘காதல்’ தமிழாசிரியர் தமிழ்ச்செல்வன் ‘ஏசு காவியம்‘ முனைவர் நீதி ஆகியோர் பேசினர்.



கவிஞர்கள் முனைவர் முத்தமிழ் முருகேசுவரி, பொ.முத்துராக்கு, கார்மேக செல்வராசன், கோ. ஆனந்தா, பொ.அமுதா, பானுமதி, ஆசிரியர் முத்துகாமாட்சி, இளங்கோவன், வீர.கற்பகம், ந.தனலெட்சுமி ஆகியோர் கண்ணதாசன் பற்றிய கவிதைகளையும், கண்ணதாசன் எழுதிய பாடல்களையும் எடுத்துக் கூறினர். ‘தந்தையர் தின’ கவிதைகள் பாடப்பட்டன.

வரும் ஆண்டு கண்ணதாசன் நூற்றாண்டை முன்னிட்டு பெருவிழா எடுப்பது என முடிவு எடுக்கப்பட்டது. முனைவர் சுவேதா ஜீவானந்தம் நாட்டுப் பண்ணிசைக்கக் கூட்டம் இனிதே முடிவுற்றது.

# நூல் நயம்

## லட்டு குட்டியும் லல்லி பாட்டியும் சிந்து சமவெளியில்




கதைகள் ஒவ்வொரு மனிதருக்கும் பிடித்தமானவை. கதை கேட்காத குழந்தைகளோ, பெரியோர்களோ உலகத்தில் இருக்க முடியாது. ஒவ்வொருவரும் தனது குழந்தைப் பருவத்தில் குடும்பத்தில் உள்ள பாட்டிகள், அத்தைகள், பெரியோர்கள் மூலமும், ஆசிரியர்கள் மூலமும், அம்மாவின் மூலமும் பல்வேறு கதைகளைக் கேட்டு அறிந்து, வளர்ந்து இருக்கிறார்கள். அப்படிப்பட்ட மனிதர்களுக்கு விஞ் ஞானத்தை, அறிவியலை, வரலாற்றைச் சிறு சிறு கதைகள் மூலமாகச் சொல்கிற போது, அவை பாடமாக மனதில் பதியும் என்பதை நூலாசிரியர் லட்டு குட்டியும் லல்லி பாட்டியும் என்ற இந்தச் சிறுகதையின் மூலமாக மனதில் பதிய வைக்கிறார்.

கதைகள் பொழுதுபோக்குகளுக்கானவை அல்ல, அவை நமது வாழ்க்கைக்குப் பல்வேறு பாடங்களைப் போதிக்கின்றன, பல்வேறு நீதிக் கதைகளை அறிவதன் மூலமாகச் சமூக வாழ்வியலில் எந்த நீதியோடு நாம் நடந்து கொள்ள வேண்டும் என்பதைச் சிறுவயதில் நம் மனதில் பதியம் போட்டு விடுகின்றன. எனவே, இந்த வகையில் நாம் நமது வரலாற்றையும் சிறு, சிறு கதைகளாக உருவாக்கி, அவற்றை குழந்தைகளுக்குச் சொல்வதன் மூலமாக, அவை குழந்தைகளின் மனதில் பசுமரத்து ஆணி போல் பதிந்துவிடும்.

சிந்துவெளி பற்றிய பல்வேறு தகவல்களைக் குழந்தைகள் மனதில் பதியும் வகையில் எழுதி உள்ளார் நூலாசிரியர். இது ஒரு நல்ல முயற்சி. இதுபோன்று ஒவ்வொரு வரலாற்றுச் செய்திகளையும் சிறு சிறு கதைகளாக்கிக் குழந்தைகளுக்குக் கொண்டு சென்றால். குழந்தைகளுக்குச் சலிப்பு தட்டாது வரலாற்றை எளிதாக அறிந்து கொள்ள உதவும். சிறந்த முறையில் இந்நூலை வெளியிட்டுள்ள நூலாசிரியருக்கு வாழ்த்துகள்.

– சமரன்

| | |
|---|---|
| நூலாசிரியர் | : ரேஷ்மா ரதி SH |
| பக்கம் | : 26 விலை : 20 |
| வெளியீடு | : இஸ்கப், தென் சென்னை, ஜீவா இல்லம், 10வது அவென்யூ, அசோக் நகர், சென்னை – 83 |

# தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் 24வது மாநில மாநாடு








தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் 24வது மாநில மாநாடு சென்னையில் ஜூன் 22 மற்றும் 23 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. சம்மேளனத்தின் கொடியினை தமிழ்நாடு வங்கி ஒப்பந்தம் மற்றும் வெளிப்பணி ஊழியர்களின் செயலாளர் ஆர்.சுரேஷ்குமார் ஏற்றி வைத்தார். தியாக தலைவர்களுக்கு செவ்வணக்கம் செலுத்திய பின்னர் மறைந்த தலைவர்கள் எம்.எஸ்.தாவூத் நுழைவு வாயில் மற்றும் என்.சம்பத் அரங்கத்தில் இனிதே துவங்கியது.

தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் பொதுச்செயலாளர் இ.அருணாசலம் அவர்கள் மாநாட்டிற்கு வருகை புரிந்த தலைவர்கள் மற்றும் தோழர்களையும் வரவேற்று முதல் நாள் மாநாட்டினைத் துவக்க உரையுடன் தொடங்கி வைத்தார்.மாநாட்டினை அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் தலைவர் ராஜன் நாகர் அவர்கள் தனது துவக்க உரையில் இன்றைய ஆட்சியாளர்கள் வங்கித் துறையில் குறிப்பாகப் பொதுத் துறை வங்கிகளைத் தனியார்மயமாக்கும் நோக்கம், வராக் கடன் வசூலிப்பதற்குப் பதிலாக கடந்த 10 ஆண்டு காலத்தில் 16 லட்சம் கோடி ரூபாய் தள்ளுபடி செய்து பொதுமக்களின் பணத்தை வீணடிப்பதைக் கண்டித்துப் பேசினார்கள். இதன் காரணமாக பல பெருமுதலாளிகள் பயனடைந்ததைச் சுட்டிக் காட்டினார்.

மாநாட்டை வாழ்த்தி நமது அண்டை மாநிலங்களான தெலுங்கானா ஆந்திரா சார்பாக அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் செயலாளர் பி.எஸ்.ராம்பாபு அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் சாதனையான குறிப்பாக 11வது மற்றும் 12வது இருதரப்பு ஒப்பந்தங்கள் அதில் ஏற்பட்ட முன்னேற்றங்கள், வங்கி ஊழியர்களுக்கான சலுகைகள் குறித்து விரிவாகப் பேசினார்கள். மேலும் கர்நாடகத்தைச் சார்ந்த மாநிலச் செயலாளர் எம்.ஜெயநாத், கேரள மாநிலச் செயலாளர் பி.ராம்பிரகாஷ், ஆந்திர மாநிலத்தைச் சார்ந்த உதயகுமார், தனியார் வங்கிகளின் தலைவரான சுஜித் ராஜி மற்றும் அகில இந்திய வங்கி அதிகாரிகள் சங்கத்தின் இணைச் செயலாளர் எஸ்.எஸ்.தவே போன்றோர்கள் வாழ்த்திப் பேசினார்கள்.

பொது மாநாட்டின் நிறைவாக தனது தலைமையுரையில் சி.எச்.வெங்கடாசலம் அவர்கள் வரும் ஜூலை 9ஆம் தேதி நடைபெறும் மாபெரும் அகில இந்தியப் பொது வேலை நிறுத்தம் குறித்தும் 5 லட்சம் வங்கி ஊழியர்கள் மற்றும் அதிகாரிகள் பங்கேற்பதன் அவசியம் குறித்து விரிவாகப் பேசினார்கள்.

இன்றைய மத்திய அரசின் தொழிலாளர் விரோதக் கொள்கைகளை மக்கள் மத்தியில் எடுத்துச் செல்ல வேண்டிய அவசியம் குறித்தும் 15 கோடி தொழிலாளர் கலந்து கொள்ளும் போராட்டத்தில் நமது பங்களிப்பின் அவசியம் குறித்தும் விரிவாகப் பேசி பொது மாநாட்டை முடித்து வைத்தார்கள்.

மாநாட்டில் சம்மேளனத்தின் பொதுச்செயலாளர் இ.அருணாசலம் கடந்த காலங்களில் நடந்த நிகழ்வுகள் குறித்து ஒரு நீண்ட செயலறிக்கை சமர்பித்தார்.

இந்த அறிக்கை குறித்து 70 தோழர்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்தார்கள். குறிப்பாக அதிக அளவில் மகளிர் தோழர்களும், இளம் தோழர்களும் அறிக்கையை மேலும் செழுமைப்படுத்திப் பேசியது மாநாட்டில் தோழர்களின் ஆர்வத்தினை வெளிப்படுத்தியது குறிப்பிடத்தக்கது.

மாநாட்டில் பல முக்கியமான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. வங்கிப் பணியில் உள்ள காலி இடங்களை நிரப்புவது, வங்கியில் உள்ள வராக்கடன் வசூலிப்பதில் ஏற்படும் கால தாமதம், தள்ளுபடி கொள்கை, வங்கிகளில் 5 நாள் பணி, வங்கிகளில் நிரந்தர ஊழியர்களை நியமிக்க வேண்டியது, வங்கித்துறையில் சீரமைப்பு என்ற பெயரில் சீரழிக்க முயற்சி செய்வது, எல்லோருக்கும் போனஸ் மற்றும் பொதுக் கோரிக்கைகளான விலை உயர்வைக் கட்டுப்படுத்த வேண்டியது மத்திய அரசின் புதிய தொழிற்சங்கச் சட்டங்களைத் தடுத்து நிறுத்த வேண்டியதன் அவசியம் இவை உள்ளிட்ட முக்கியத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாநாட்டில் மிகவும் குறிப்பிடத்தக்க அம்சம் தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் சமூக ஊடகங்கள் வாயிலாகத் தயாரிக்கப்பட்ட குறும்படங்கள் அனைவரையும் கவரும்படியாக அமைந்தன. இந்தக் குறும்படங்களைத் தயாரித்து அதில் நடித்த வங்கி இளம் தோழர்களை மேலும் வளர்க்க வேண்டியதன் அவசியம் குறித்து அனைவரும் பாராட்டிப் பேசினர்.

நிறைவாக மாநாட்டில் அவைத் தலைவராக ஜி.வைரப்பன் (கூட்டுறவு வங்கி) தலைவராக ஏ.சிதம்பரம் (யூனியன் வங்கி) பொதுச் செயலாளராக இ.அருணாசலம் (இந்தியன் வங்கி), செயலாளராக ஆர்.கார்த்திக் (கனரா வங்கி), துணைத் தலைவர்களில் ஒருவராக சி.எச். வெங்கடாசலம் போன்றவர்கள் அடங்கிய 29 தோழர்களை நிர்வாகிகளாக வரும் காலகட்டத்தில் செயல்பட ஒருமனதாகத் தேர்வு செய்யப்பட்டு மாநாடு இனிதே நிறைவு பெற்றது.

## ஏழைகளுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கிடு

### திருச்சி மாநகர் மாவட்ட மாநாடு தீர்மானம்




இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் திருச்சி மாநகர் மாவட்ட 24வது மாநாடு அன்னதானம் சமாஜம் திருமண மண்டபத்தில் எஸ்.பார்வதி, எம்.ஆர். முருகன் தலைமையில் ஜூன் 24, 25 ஆகிய இரு தினங்கள் நடைபெற்றன. வரவேற்புக் குழு தலைவர் க.சுரேஷ் எம்.சி மாநாட்டில் வரவேற்புரை ஆற்றினார். மாவட்டத் துணைச் செயலாளர் சி.செல்வகுமார் இரங்கல் தீர்மானத்தை வாசித்தார். மாநாட்டைத் துவக்கி வைத்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயற்குழு உறுப்பினர் பி.பத்மாவதி உரையாற்றினார். கட்சியின் மாநிலத் துணைச் செயலாளர் நா.பெரியசாமி அரசியல் விளக்க உரையாற்றினார். மாநகர் மாவட்டச் செயலாளர் எஸ்.சிவா வேலை அறிக்கையினைச் சமர்ப்பித்தார். மாநாட்டினை முடித்து வைத்து மத்தியக் கட்டுப்பாட்டுக் குழு உறுப்பினர் ம.செல்வராசு உரையாற்றினார்.

மாநாட்டில் 25 பேர் கொண்ட மாவட்டக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. மாவட்டக் குழுவில் ம.செல்வராசு, க.சுரேஷ் எஸ்.சிவா, சி.செல்வகுமார், எம்.ஆர். முருகன், ரஷ்யா பேகம், மருதாம்பாள், எஸ்.சையது அபுதாஹிர்,

ஏ.அன்சர்தீன், இரா.சுரேஷ் முத்துசாமி, க.முருகன், என்.எஸ்.பாட்ஷா, ஏ.அஞ்சுகம், எல்.நல்லுசாமி, எஸ்.பார்வதி, எஸ்.சண்முகம், எஸ்.கருணாகரன், பி.ராஜா, ஏ.ஜான் பால், பி.சுரேஷ், எம்.செல்வகுமார், ஜெய்லானி, கே.ஆயிஷா, மணி மோகன் உள்ளிட்டவர்கள் மாவட்டக் குழு உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டனர்.

மாநகர் மாவட்டச் செயலாளராக எஸ்.சிவா தேர்ந்தெடுக்கப்பட்டார். மாநாட்டில் 190 க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள்.

முன்னதாக நேற்றைய தினம் பாலக்கரை பிரபாத் தியேட்டரில் இருந்து பேரணி துவங்கி மரக்கடை எம்.ஜி.ஆர் சிலை அருகில் மாநாட்டு வரவேற்புக் குழு செயலாளர் ஏ.அன்சர் தின் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. கிழக்குப் பகுதிக் குழுச் செயலாளர் எஸ்.சையது அபுதாஹிர் வரவேற்புரை ஆற்றினார். அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் மாநிலத் தலைவர் க.இப்ராகிம் சிறப்புரையாற்றினார். வரவேற்புக் குழு பொருளாளர் நாக. பாலசுப்பிரமணியன் நன்றியுரை ஆற்றினார்கள்.

தீர்மானம்

திருச்சி மாநகரம், மணிகண்டம், அந்த நல்லூர் ஒன்றியப் பகுதிகளில் வசிக்கும் வீடற்ற ஏழை, எளிய மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கக் கோரியும் ஒன்றிய அரசையும், தமிழக அரசையும் வலியுறுத்தி ஜூலை 20 முதல் 30 வரை கிளைகள் தோறும் பொதுமக்களிடம் பிரச்சாரம் செய்து கையெழுத்து இயக்கம் நடத்தி ஜூலை 31 இல் திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் முன்பாக மக்களைத் திரட்டிப் பெருந்திரள் ஆர்ப்பாட்டம் நடத்தி மனு கொடுப்பது என மாநாட்டில் முடிவு செய்யப்பட்டது.

திருச்சி அரசு பொது மருத்துவமனையில் மருத்துவர்கள் செவிலியர்கள் பணியாளர்கள் பற்றாக்குறை உள்ளது. தமிழக அரசு உடனடியாக மக்களின் நலத்தில் கவனம் கொண்டு மருத்துவர்கள் செவிலியர்கள் பணியாளர்களை கூடுதலாக நியமிக்க வேண்டுமென இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

## கட்சியின் 26வது தமிழ்நாடு மாநில மாநாட்டின் இலட்சினை வெளியிட்டு விழா






இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் 26வது தமிழ்நாடு மாநில மாநாடு, சேலத்தில் 2025 ஆகஸ்ட் 15, 16, 17, 18 ஆகிய தேதிகளில் நடைபெறுகிறது. அம்மாநாட்டிற்கான இலட்சினை வெளியீட்டு விழா சேலத்தில் ஆர்.பி.மஹாலில் வரவேற்புக் குழு தலைவர் ஏ.கந்தன் தலைமையில் நடைபெற்றது. வரவேற்புக் குழு செயலாளர் ஏ.மோகன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

மாநாட்டு இலட்சினையை மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட, திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.சுப்பராயன் பெற்றுக் கொண்டார். இதில் மாநிலப் பொருளாளர் எம்.ஆறுமுகம், மாநிலச் செயற்குழு உறுப்பினர் எம்.ரவி, தர்மபுரி மாவட்டச் செயலாளர் எஸ்.கலைச்செல்வம், நாமக்கல் மாவட்டச் செயலாளர் அன்புமணி, மாநில நிர்வாகக் குழு உறுப்பினர்கள் எஸ்.தேவராஜன், கா.பாரதி, மாநிலக் குழு உறுப்பினர்கள் எம்.ராமன், பா.தினேஷ், மாவட்டப் பொருளாளர் டி.கண்ணன் ஆகியோர் பங்கேற்றனர். வரவேற்புக் குழு பொருளாளர் பழ.ஜீவானந்தம் நன்றி உரை நிகழ்த்தினார். மாவட்டம் முழுவதும் இருந்து நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

Regd. No. TN / CH (C) / 551 / 2024-2026
WPP NO: TN / PMG (CCR) /WPP/596/ 2024-2026
Posted on Every Friday & Saturday
Registered with Press Registrar General of India, Under Regd No: 1222/57

# வருசநாடு - வத்திராயிப்பு சாலையை அமைக்க வேண்டும்

## தேனி மாவட்ட மாநாடு வலியுறுத்தல்





இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேனி மாவட்ட 9வது மாநாடு ஜூன் 20, 21 ஆகிய தேதிகளில் ஆண்டிபட்டி நகரில் நடைபெற்றது. ஜூன் 20 அன்று மாவட்டச் செயலாளர் கி.பெருமாள் தலைமையில் பேரணிப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. பேரணியில் 1000க்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்டனர். இதற்கு ஒன்றியச் செயலாளர்

பா.பிச்சைமணி முன்னிலை வகித்தர். திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினர்,மாநிலக்கட்டுப்பாட்டுக் குழு தலைவர் கே.சுப்பராயன், மாநிலச் செயற்குழு உறுப்பினர் எம்.ரவி ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள். நகரச் செயலாளர் க.முனீஸ்வரன் நன்றி கூறினார்.

ஜூன் 21 அன்று பிரதிநிதிகள் மாநாடு தொடங்கியது. மாநாட்டில் மூத்த தோழர் டி.பெருசு கொடியேற்றினார். வீ.பாண்டி அஞ்சலித் தீர்மானம் வாசித்தார். மாவட்டத் துணைச் செயலாளர் வே.பரமேஸ்வரன் வரவேற்பு உரையாற்றினார். மாநிலச் செயற்குழு உறுப்பினர் எம்.ரவி துவக்க உரையாற்றினார். மாவட்டச் செயலாளர் கி.பெருமாள் வேலை அறிக்கை முன்வைத்தார். இதில் மாவட்டச் செயலாளராக கி.பெருமாள் தேர்வு செய்யப்பட்டார். மாநிலச் செயற்குழு உறுப்பினர் க.சந்தானம் நிறைவுரையாற்றினார். நகரச் செயலாளர் க.முனீஸ்வரன் நன்றி கூறினார்.

ஆண்டிபட்டியில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க, புறவழிச் சாலைத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும். ஆண்டிபட்டி ஒன்றியப் பகுதிகளுக்கு முல்லை பெரியாற்றிலிருந்து குழாய் மூலம் தண்ணீர் கொண்டு வந்து குளம், கண்மாய்களை நிரப்பிட வேண்டும்.

திண்டுக்கல், சபரிமலை இடையே அகல ரயில் பாதை அமைத்திட வேண்டும். தேனி, விருதுநகர் மாவட்டங்களை இணைக்கும் வருசநாடு – வத்திராயிப்பு சாலையை அமைத்துத் தர வேண்டும். கேரளா, தமிழக எல்லையில் உள்ள தேவாரம் சாக்குலத்து மேட்டுச் சாலையை அமைக்க வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றபட்டன.

# வேலூரில் ரிங் ரோடு திட்டத்தை நிறைவேற்ற மாவட்ட மாநாடு வலியுறுத்தல்





கட்சியின் வேலூர் மாவட்ட மாநாடு, 23.6.2025 அன்று வேலூரில் டாக்டர் கண்ணபிரான் நினைவரங்கத்தில் நடைபெற்றது. மாநாட்டுக் கொடியை பி.வி.நடராஜன் ஏற்றினார். மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் டி.ஆனந்தன் தலைமை தாங்கினார். மாவட்டக் குழு உறுப்பினர் எஸ்.சண்முகம் அஞ்சலித் தீர்மானத்தை முன்மொழிந்தார். வேலூர் மாநகரச் செயலாளர் பி.சந்திரசேகர் வரவேற்புரை ஆற்றினார்.

தேசிய நிர்வாகக் குழு உறுப்பினர் டி.எம்.மூர்த்தி அரசியல் விளக்க உரை ஆற்றினார். மாவட்டச் செயலாளர் ஜி.லதா வேலை அறிக்கையை முன்வைத்தார். மாவட்டப் பொருளாளர் எஸ்.காவிரி தணிக்கைக் குழு அறிக்கையை முன்வைத்தார். இதனை அடுத்து 27 பேர் கொண்ட மாவட்டக் குழு தேர்வு செய்யப்பட்டது. மாவட்டச் செயலாளராக ஜி.லதா, மாவட்ட துணைச் செயலாளர்களாக டி.ஆனந்தன், ஏ.எஸ்.சங்கர் மேஸ்திரி, மாவட்டப் பொருளாளராக எஸ்.காவேரி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

நிர்வாகக் குழு உறுப்பினர்களாக ஜி.லதா, எம்.ஜீவா, எல்.மணி, பி.சந்திரசேகர், டி.அருள்குமார், டி.ஆனந்தன், கே.சி.பிரேம்குமார், எஸ்.பன்னீர்செல்வம், ஏ.எஸ். சங்கர் மேஸ்திரி, வே.குமார் தேர்வு செய்யப்பட்டனர். மாநிலக் குழு உறுப்பினர் எல்.மணி தீர்மானங்களை முன்மொழிந்தார். மாநிலத் துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன் நிறைவு உரையாற்றினார். மூத்த தோழர்களுக்கு நினைவுப் பரிசுகள் வழங்கிப் பாராட்டப்பட்டனர். முடிவில் துரைச்செல்வம் நன்றி கூறினார். முதல் நாள் மாலை வேலூரில் மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் எம்.ஜீவா தலைமையில் செம்படைப் பேரணியும், பொதுக்கூட்டமும் நடைபெற்றது.

வேலூரில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க வட்டச் சாலை (ரிங் ரோடு) திட்டத்தைத் தமிழக அரசு உடனே நிறைவேற்ற வேண்டும். வேலூர் அருகே முருக்கேரி குப்பம் ஏரிப்பகுதியில் 250 ஏக்கர் நிலப்பரப்பில் தொழில் பூங்கா, சாமியார் தோப்பு நிலப்பகுதியில் சிப்காட் தொழிற்பேட்டை, அணைக்கட்டுத் தொகுதியில் சென்ட் தொழிற்சாலை, கே.வி.குப்பம் பகுதியில் மாம்பழக் கூழ் தொழிற்சாலை அமைக்க வேண்டும்.

தீப்பெட்டி தொழிலை, சிறுகுறு தொழில் பட்டியலில் சேர்க்க வேண்டும். வேலூர் மாநகராட்சி ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் முறைகேடுகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேல் அரசம்பட்டு அணைத் திட்டத்தையும், பேர்ணாம்பட்டு பத்திரப்பள்ளி அணைத் திட்டத்தையும் துவக்க வேண்டும். வேலூர், குடியாத்தம், பேர்ணாம்பட்டு பேருந்து நிலையங்களை மேம்படுத்திட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். தமிழ்நாடு முழுவதும் தலித் மக்களுக்கு வழங்கப்பட்ட 12 லட்சம் ஏக்கர் பஞ்சமி நிலத்தை மீட்டு நிலமில்லாத தலித் குடும்பங்களுக்கு வழங்க வேண்டும். அரியூர் கூட்டுறவு நூற்பாலையை மீண்டும் திறக்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# கீழடி அகழ்வாய்வு அறிக்கையை உடனடியாக வெளியிடு: மதுரை மாநகர் மாவட்ட மாநாடு வலியுறுத்தல்





இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மதுரை மாநகர் மாவட்ட 26வது மாநாடு, எஸ்.ஆலங்குளத்தில் எம்.செல்வராஜ் முன்னாள் எம்.பி நினைவரங்கில் 22.6.2025 அன்று, வழக்கறிஞர் கே.கே.சாமி, ஜாகிர் நிஷா, திருப்பதி ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. ப.மாணிக்கம் நினைவுக் கொடிமரத்தில், மூத்த தோழர் பெருமாள் கொடி ஏற்றினார். தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தி மாநாடு தொடங்கியது.

கட்சியின் மாநிலச் செயற்குழு உறுப்பினர்கள் டி.எம்.மூர்த்தி, டி.ராமசாமி முன்னாள் எம்.எல்.ஏ ஆகியோர் பங்கேற்று மாநாட்டை வழிநடத்தினர்.

இதில் மாவட்டச் செயலாளராக வழக்கறிஞர் கே.கே.சாமி, துணைச் செயலாளராக பி.வீரணசிங்கம், பொருளாளராக சி.தாமஸ் உள்ளிட்ட 15 பேர் கொண்ட மாவட்டக் குழு தேர்வு செய்யப்பட்டது.

மக்களின் இறை நம்பிக்கையை அரசியலாக மடைமாற்றி, வாக்குகளைத் திரட்ட முருகன் மாநாட்டை வகுப்புவாதச் சக்திகள் நடத்தியிருக்கின்றன. மக்களை மதம், சாதியாகப் பிரித்து, மோத விடும் பாசிசச் செயல்பாடுகளை, மதுரை மக்களோடு இணைந்து நின்று எதிர்கொள்வது.

கீழடி அகழ்வாய்வுகள், தமிழர்கள் மற்றும் தமிழின் தொன்மைக்கான ஆதாரங்களை வெளிப்படுத்தி உள்ளன. அவை அறிவியல் பூர்வமாக வெவ்வேறு நாடுகளில் சோதிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. அதுகுறித்து ஆய்வறிக்கையை ஏற்க முடியாது என்று ஒன்றிய அரசு மறுத்து வருவது கண்டனத்திற்குரியதாகும். வேதகால நாகரிகமே காலத்தால் முந்தியது என்று எந்த அறிவியல் அடிப்படைகளும் இல்லாமல் கூறிவரும் இந்துத்துவச் சக்திகள், அதற்கு மாறான அறிவியல் உண்மைகள் வெளிப்பட்டதும், அதனை தமது அதிகாரத்தைக் கொண்டு மறைக்க முயல்கின்றன. இதன் ஒரு பகுதியாக ஆய்வாளர் அமர்நாத் ராமகிருஷ்ணன் பணியிடமாற்றம் செய்யப்பட்டுள்ளது கண்டிக்கத்தக்கது. ஆய்வறிக்கையை உடனடியாக வெளியிட வேண்டும் என்றும் அதற்கான அங்கீகாரத்தை வழங்க வேண்டும் என்றும் ஒன்றிய அரசை மதுரை மாநகர் மாநாடு வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

நூற்றாண்டைக் கடந்த மதுரை ஆல்பர்ட் விக்டர் மேம்பாலப் பணிகளை விரைந்து முடிக்க வேண்டும். மதுரையில் நிலத்தடி நீர் வெகுவாகக் கீழ் இறங்கிச் செல்கிறது. மதுரை செல்லூர் கண்மாய், வண்டியூர் கண்மாய், மாடக்குளம் கண்மாய், திருப்பரங்குன்றம் தென்கால் கண்மாய், நிலையூர் கண்மாய்களிலும் ஆக்கிரமிப்பு தொடர்கிறது. இந்தக் கண்மாய்களைப் பாதுகாத்து, மதுரையின் நிலத்தடி நீர்மட்டத்தைப் பாதுகாக்க வேண்டும். மதுரையிலிருந்து சென்னை செல்லும் வகையில் கூடுதலாக ஒரு விரைவு தொடர் வண்டி இயக்க வேண்டும் என்று இந்த மாநாடு வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliyer Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **T.M.Murthi,**
Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.